# 8

# நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

## 8.1 பொதுநோக்கு

*ஆண்டுக்காலப்பகுதியில் விரிவாக்கம், கொடுகடன் தரம், மற்றும் இலாபத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் நிதியியல் துறையினுடைய செயற்றிறன் மிதமானதாகக் காணப்பட்ட போதும் நிதியியல் முறைமையானது பிரதானமான பேரண்ட முன்மதியுடைய கரிசனைகள் எதனையும் தோற்றுவிக்காதவாறு தாங்குதிறனுடையதாகக் காணப்பட்டது. மிதமான பொருளாதார நடவடிக்கைகள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினால் உருவாக்கப்பட்ட உறுதியற்றதன்மை மற்றும் ஆண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் காணப்பட்ட அரசியல் நிலையற்றதன்மை என்பனவற்றின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடமிடத்து 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் துறையின் விரிவாக்கம் மற்றும் செயற்றிறன் மந்தமடைந்துள்ளது. செயற்படாக்கடன்களின் விகிதத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வைப்புக்களை ஏற்கும் நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன் தரமானது 2019இல் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் பன்னாட்டு மற்றும் உள்ளூர் வியாபாரச் சூழ்நிலைகள் சவால்மிக்கதாக காணப்பட்ட போதிலும் நிதியியல் துறையின் பிரதான பகுதிகளான வங்கிகள் மற்றும் வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள், மூலதனம் மற்றும் திரவத்தன்மை என்பவற்றை ஆகக்குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலாக பேணியதன் மூலம் தாங்குதிறனை வெளிப்படுத்தியது. நேரகாலத்துடன் பொருத்தமான விதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைககள் பிரதானமாக பேரண்ட முன்மதியுடை கரிசனைகள் எதனையும் உருவாக்காது நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்த உறுதித்தன்மையினை ஆண்டுகாலப்பகுதியில் உறுதிப்படுத்தியது.*

*நாட்டினுடைய மிதமான பொருளாதார நடவடிக்கைகளுக்கு இசைந்து செல்லும் விதத்தில் 2018 உடன் ஒப்பிடுமிடத்து 2019இல் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் ஒரு குறைவான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. வங்கித்தொழில் துறைச் சொத்துக்களின் குறைந்தளவான வளர்ச்சியானது அதிகரித்துச் செல்லும் செயற்படாக் கடன்களின் காரணமாக இறுக்கமாக்கமாக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான குறைவான கேள்விகள் என்பவற்றின் விளைவாக ஏற்பட்டவையாகும். கொடுகடன்களுக்கான குறைந்தளவிலான கேள்வியின் விளைவாக அதிகளவிலான நிதியங்கள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற இடர்நேர்வற்ற முதலீடுகளினை நோக்கி அசையலாயிற்று. இதன் விளைவாக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் முதலீடுகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவால் அதிகரித்தது. இடர்நேர்வற்ற மற்றும் உயர் திரவத்தன்மை கொண்ட அரச பிணைய முதலீடுகளின் அதிகரிப்பின் விளைவாக வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் மற்றும் சட்டப்படியான திரவச்சொத்து விகிதம் என்பன அதிகரிப்பத்துடன் அதன் மூலம் எதிர்பாராத இடர்நேர்வுகளுக்கெதிராக வங்கித்தொழில் துறையின் தாங்குதிறனை உயர்த்தவும் உதவியது. அதேவேளை, செயற்படாக் கடன்களின் விகிதத்தினால் அளவிடப்படுகின்ற சொத்துக்களின் தரமானது 2014இலிருந்து அதன் தாள்ந்தளவிலான மட்டத்தினைப் பதிவுசெய்தது. 2018இல் பதிவுசெய்த ஓர் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயம் ஆகிய இரு அடிப்படையிலும் வங்கித்தொழில் துறையின் கடன்பாடுகள் குறைவடைந்துள்ளது. அதேவேளை, சொத்துத்தரங்களின் வீழ்ச்சி, செயற்பாட்டுக் கிரயங்களின் உயர்வு, வரி அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக ஆண்டுக்காலப்பகுதியில் சொத்துக்களின் மீதான திரும்பல்கள் வீதம் மற்றும் உரிமையாண்மை மீதான திரும்பல்கள் வீதம் ஆகியவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவினால் வீழ்ச்சியடைந்துள்ளது.*

அட்டவணை 8.1
### நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்

| நிறுவனங்கள் | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) |
| **வங்கித்தொழில்துறை** | **13,711.4** | **72.3** | **14,442.1** | **71.6** |
| மத்திய வங்கி | 1,917.4 | 10.1 | 1,919.4 | 9.5 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 10,372.4 | 54.7 | 10,944.0 | 54.3 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,421.6 | 7.5 | 1,578.7 | 7.8 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **1,603.2** | **8.5** | **1,674.2** | **8.2** |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,454.8 | 7.7 | 1,484.7 | 7.4 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் (இ) | 147.7 | 0.8 | 161.7 | 0.8 |
| சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 0.7 | 0.0 | 0.8 | 0.0 |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | **241.1** | **1.3** | **282.6** | **1.4** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | 48.7 | 0.3 | 43.7 | 0.2 |
| முதனிலை வணிகர்கள் (ஈ) | 83.6 | 0.4 | 77.5 | 0.4 |
| பங்குத்தரகர்கள் | 8.7 | 0.0 | 9.7 | 0.0 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் | 67.0 | 0.4 | 113.8 | 0.6 |
| சந்தை இடையீட்டாளர்கள் (உ) | 16.4 | 0.1 | 18.4 | 0.1 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | 16.8 | 0.1 | 19.5 | 0.1 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **3,414.0** | **18.0** | **3,787.5** | **18.8** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 606.6 | 3.2 | 691.0 | 3.4 |
| ஊழியர் சேம நிதியம் | 2,289.4 | 12.1 | 2,540.4 | 12.6 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 310.8 | 1.6 | 343.3 | 1.7 |
| அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேம நிதியங்கள் (ஊ) | 149.1 | 0.8 | 149.1 | 0.7 |
| அரச பணி சேம நிதியம் | 57.2 | 0.3 | 63.7 | 0.3 |
| **மொத்தம்** | **18,968.8** | **100.0** | **20,159.4** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவுகள் கிடைக்காத காரணத்தினால் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் 2019இற்கான சொத்துத்தளத்தை கணிப்பிடுவதற்காக கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி வளர்ச்சி பாவிக்கப்பட்டது.
(ஈ) உரிமம் பெற்ற வர்த்தகக் வங்கிகளில் உள்ளடக்கப்பட்ட வங்கி முதனிலை வணிகர் அலகுகளின் சொத்துகள் மற்றும் என்ரஸ்ட் செக்குரிட்டீஸ் லிமிடெட் சொத்துக்கள் நீங்கலாக
(உ) முதலீட்டு முகாமையாளர்கள், கடன் வசதிகள் வழங்குவோர் மற்றும் கொடுகடன் தரமிடல் முகவர்கள் உள்ளடங்களாக
(ஊ) அனுமதியளிக்கப்பட்ட மற்றும் சேமலாப நிதியங்களின் சொத்துத்தள தரவு கிடைக்காத காரணத்தால் முன்னைய ஆண்டின் பெறுமதி 2019ஆம் ஆண்டிற்கும் பாவிக்கப்பட்டுள்ளது.


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கலளம்
தொழில் திணைக்களம்
ஓய்வுதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியசபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சணச கூட்டமைப்பு
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கை சங்கம்
துணிகர மூலதன கம்பனிகள்

*எதிர்மறையான கொடுகடன் வளர்ச்சி, இலாபத்தன்மையின் வீழ்ச்சி மற்றும் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பவற்றின் மூலம் துறையின் செயற்றிறன் வீழ்ச்சியடைந்த அதேநேரம் சொத்துத் தளத்தின் விரிவாக்கம் ஓர் சிறியளவில் காணப்பட்டதால் உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினருக்கு 2019 ஓர் சவால்மிக்க ஆண்டாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் ஒட்டுமொத்தமாக இத்துறையானது மூலதனம் மற்றும் திரவத்தன்மை போன்றவற்றை ஆகக் குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டங்களுக்கு மேலாகப் பேணியது. அதேவேளை, 2019இன் இறுதியில் செயற்படாக்கடன்களின் விகிதம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவால் அதிகரித்தமையானது துறையினுடைய சொத்துத்தரங்களின் வீழ்ச்சியைக் குறித்துக்காட்டியது. பொருளாதாரச் செயற்பாடு குறைவடைந்தமை, முதலீட்டாளர்களின் நம்பிக்கை இழப்பு, துறையினுடைய கடன் கொடுத்தல்கள் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் காரணமாக இது இடம்பெற்றது. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 09இன் நடைமுறைப்படுத்தல்களுடன் செயற்படாக் கடன்களின் விகிதம் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வட்டியல்லா செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் உயர்ந்தளவிலான கடன் இழப்பீட்டு ஏற்பாடுகளின் காரணமாக 2018 உடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் துறையின் இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியடைந்தது. இத்துறையில் காணப்பட்ட ஒரு சில நிதிக் கம்பனிகளினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு அக்கம்பனிகளின் வியாபாரச் செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளுக்கு அதிக கவனத்தினைச் செலுத்தி மத்திய வங்கி முன்மதியுடைய செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு துறையின் உறுதிப்பாட்டினைப் பேண நடவடிக்கை எடுத்தது. 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் காப்புறுதித் துறையானது அதன் சொத்துத் தளத்தில் வளர்ச்சியைப் பதிவுசெய்து மிதமான செயற்றிறனை வெளிக்காட்டியது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் பெருமளவு செல்வாக்குச் செலுத்தப்படும் ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள் துறையானது மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்ததுடன் திரும்பல்களின் மெய் விகிதங்களின் அடிப்படையில் அதன் அங்கத்தவர்களுக்கு நியாயமான திரும்பல்களை வழங்கியது.*

*சந்தைத் திரவத்தன்மையின் அடிப்படையில் உள்ளூர் பணச்சந்தை ஒரு கலப்பான வினைத்திறனை அனுபவித்ததுடன் 2019 ஏப்பிறல் நடுக்காலப்பகுதி வரை திரவத்தன்மைப் பற்றாக்குறையொன்று நிலவிய அதேவேளை, ஓகத்து மற்றும் செத்தெம்பரில் ஒரு மட்டுப்படுத்தபட்ட காலப்பகுதி தவிர தொடர்ந்துவந்த காலப்பகுதியில் ஒரு மிகைத் திரவத்தன்மை மட்டத்திற்குத் திரும்பியது. நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளின் கீழ் நோக்கிய மீளாய்வு மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுவனவுகளை மாற்றிப் பெற்றமை என்பன சந்தைத் திரவத்தன்மை மிகை நிலைமைக்கு மாறியதற்குப் பங்களித்தது. உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கைக் காட்டியதுடன் 2019இன் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஓர் அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 2019 மே இல் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதிகளின் 6ஆம் கட்டத்தின் பிந்திய கிடைப்பனவு மற்றும் 2019 யூன் இல் இடம்பெற்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்கள் போன்றன ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியினை பேணுவதற்கு உதவியது. உள்ளூர் மற்றும் பன்னாட்டுச் சூழ்நிலைகளின் பாதகமான நிலைமைகளுக்கிடையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை*

8

வரைபடம் 8.1
நிதியியல்துறை சொத்துக்களின் உள்ளடக்கம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்




8

*2019 காலப்பகுதியில் கலப்பான அபிவிருத்திகளை வெளிக்காட்டியது. அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண், சந்தை மூலதனமாக்கல், விலை வருவாய் விகிதம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனமாக்கல் என்பவற்றின் அடிப்படையில் சந்தை முன்னேற்றங்களைப் பதிவுசெய்த அதேநேரம் எஸ்அன்ட்பி எஸ்எல் 20 சுட்டெண் ஆண்டுக்காலப்பகுதியல் வீழ்ச்சியடைந்ததுடன் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் 2019 காலப்பகுதியிலும் தொடர்ந்தது என்றபோதும் 2018 உடன் ஒப்பிடுகையில் இது ஒரு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.*

*பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைக் கட்டுப்படுத்த இலங்கை எடுத்த நடவடிக்கைகளை அங்கீகரித்து நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு 2019 ஒத்தோபரில் இலங்கையை சாம்பல் நிறப்பட்டியலிலிருந்து நீக்கியதுடன் இது நாட்டினுடைய பொருளாதார மற்றும் நிதியியல் துறையில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும். நாட்டினுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகளானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பு பாதுகாப்புத் தொடர்பாக கணிசமான கரிசனைகள் எதுவுமின்றி ஆண்டுக்காலப்பகுதியில் பேணப்பட்டதுடன் முக்கிய தடங்கல்கள் எதுவுமின்றி பொருளாதாரத்தின் கொடுப்பனவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.*

*முன்னோக்கிச் செல்கையில் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அடிப்படையில் வங்கித்தொழில் துறை மற்றும் வங்கியல்லா துறையின் செயற்பாடுகள் சவால்மிக்கத்தாகக் காணப்படும். அதிகரித்துச் செல்லும் செயற்படாக் கடன்களின் விகிதம் மற்றும் புதிய செயற்படாக் கடன்களுக்கான மேலதிக ஏற்பாடுகளைத் தாங்கவேண்டியிருத்தல் என்பன வங்கித்தொழில் துறை மற்றும் வங்கியல்லா துறைகளுக்கு ஒரு நெருக்கடியான விடயமாக உருவெடுத்துள்ளது. 2019இல் சுற்றுலா மற்றும் சிறிய நடுத்தரக் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்துகையின் இடைநிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரும் போது அவை வங்கித்தொழில் துறை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை மற்றும் விசேட குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினுடைய செயற்படாக் கடன்களின் விகிதம் மற்றும் ஏற்பாட்டுத் தேவைப்பாடுகளை மேல் நோக்கித் தள்ளும். மேலும், கொவிட்-19 இனது பாதகமான பொருளாதாரப் பாதிப்பானது 2020 ஆண்டுக்காலப்பகுதியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதியியல் துறையில் பிரதிபலிக்கும். பொருளாதாரத்தினுடைய பாதிக்கப்பட்ட தரப்பினர்க்கு நிவாரணங்களை வளங்கக்கூடிய விதத்தில் இறை இடைவெளி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுவதால் பேரிடரினால் பாதிக்கப்பட்ட தரப்பினர்க்கு அதிக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா துறையினர் மிக அதிகளவிலான அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளனர். ஆகவே, நடுத்தர காலத்தில் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை பேணுதல் என்பது சவால்மிக்கதொன்றாகக் காணப்படும்.*

## 8.2 வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

**சவால்மிக்க வியாபாரச் சூழலுக்கிடையிலும் வங்கித்தொழில் துறை அதன் தாங்குதிறன்தன்மையினை எடுத்துக்காட்டிய வேளையில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மெதுவான வேகத்தில் விரிவடைந்தது.** மேலும், நிதியியல் துறையில் ஆதிக்கம் கொண்டிருந்த வங்கித்தொழில் துறை 2019 இன் இறுதியில் நிதியியல் துறையின் மொத்தச் சொத்துக்களில் 62.1 சதவீதத்திற்கு வகைகூறியது. கொடுகடனுகளுக்கான கேள்வி குறைவாகக் காணப்பட்டமையினால் ஆண்டின் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி மிதமடைந்திருந்ததுடன் 2019ஆம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் மீண்டெழுவதற்கான சமிக்கைகளை வெளிக்காட்டியது. இத்துறைக்கான நிதியிடலின் முக்கிய ஆதிக்கம் பெற்ற மூலமாக வைப்புக்கள் தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளையில் இக்காலப்பகுதியில் கடன்பாடுகளில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தமைக்கு சொத்துக்களின் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, தொழிற்பாட்டுச் செலவுகளில் ஏற்பட்ட உயர்வு மற்றும் வரிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணங்களாக அமைந்தன. ஏவ்வாறாயினும், வங்கித்தொழில் துறை, மூலதனம் மற்றும் திரவத்தன்மையினைக் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மிக மேலே பேணியதன் மூலம் துறையின் தாங்குதிறன்தன்மையினை வெளிக்காட்டியது.

### வியாபார விரிவாக்கம்

**(அ) விரிவெல்லை: 2019இன் இறுதியில், தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் வங்கித்தொழில் நிலையங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்த அதேவேளையில் வங்கித்தொழில் துறையானது, 26** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த **வங்கிகளையும் சேர்த்து 32 வங்கிகளை உள்ளடக்கியிருந்தது.** 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினுள் வெளிநாட்டு வங்கிகளின் 13 கிளைகள் உள்ளடக்கப்படடுள்ளன. இவற்றுள் வெளிநாட்டு வங்கிகளின் 2 கிளைகள் அவர்களது வெளிநாட்டுத் தலைமை அலுவலகங்களினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அவற்றை மூடிவிடுவதற்கான நடைமுறைகளை ஆரம்பித்திருக்கின்றன. மேலும், இவ்வாண்டுப்பகுதியில், லங்காபுத்தர டெவலெப்மன்ற் வங்கி லிமிடெட், பிரதேசிய சன்வர்த்தன வங்கியுடன் இணைக்கப்பட்ட அதேவேளை இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட், தேசிய சேமிப்பு வங்கியின் துணை நிறுவனமாக கையேற்கப்பட்டது.

**வங்கித்தொழில் துறையானது வங்கித்தொழில் பணிகளை அதிகரித்ததன் மூலமும் வங்கித்தொழில் வலையமைப்பினை விரிவுபடுத்தியதன் மூலமும் பொருளாதாரத்தின் நிதியியல் இடையீட்டுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்ததன் மூலம் நிதியியலினுள் உட்சேர்த்தலை ஊக்குவித்தது.** 2019இல் அநேக வங்கிகள் நிதியியலினுள் உட்சேர்த்தலை ஊக்குவிக்கும் பொருட்டு தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களையும் பணிகளையும் அறிமுகப்படுத்தின. மேலும், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 42 புதிய வங்கிக் கிளைகளும் 564 புதிய தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் நிறுவப்பட்ட வேளையில் 11 வங்கிக் கிளைகளும் 13 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் மூடப்பட்டன. இதன்பிரகாரம் 2019 இறுதியில் மொத்த வங்கித்தொழில் நிலையங்கள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் எண்ணிக்கை முறையே 7,387 இற்கும் 5,571 இற்கும் அதிகரித்தன.

**(ஆ) சொத்துக்கள்: ஆண்டுக்காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளம் ரூ.728.7 பில்லியனால் அதிகரித்து 2019 திசெம்பர் இறுதியில் ரூ.12.5 ரில்லியனை விஞ்சியதுடன் 2018ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 14.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** 2019 ஏப்பிறலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றும் 2019ஆம் ஆண்டு முழுவதும் நிலவிய நிச்சயமற்ற அரசியல்தன்மைகள் என்பனவற்றிலிருந்தும் தோன்றிய சவால்மிக்க வியாபாரச் சூழலானது குறைந்த கொடுகடன் கேள்விக்கு வழியமைத்து குறைந்த கொடுகடன் வளர்ச்சியைத் தோற்றுவித்ததுடன் இது சொத்துக்களின் வளர்ச்சி வீழ்ச்சியடையப் பங்களித்தது. கடன்களின் வளர்ச்சி 2018இன் 19.6 சதவீதத்திலிருந்து 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 5.6 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இவ் 5.6 சதவீத கடன் வளர்ச்சியில் 77.0 சதவீதமான அதிகரிப்பிற்கு ரூபாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே பங்களித்தன. கடன்வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய பொருளாதார துறைகள் அனைத்திலும் பெருமளவிற்குப் பரந்து காணப்பட்டது. உற்பத்திச் சாதனங்களின் நியதிகளில் மீள்அட்டவணையிடப்பட்ட கடன்கள் (102.2 சதவீதம்), அடகுபிடித்தல் (17.0 சதவீதம்), கொடுகடன் அட்டைகள் (15.3 சதவீதம்) போன்றன 2019ஆம் ஆண்டுப்பகுதியில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்த முக்கிய சாதனங்களாகக் காணப்பட்டன. அதேவேளையில், இவ்வாண்டுக்காலப்பகுதியில் தவணைக் கடன்கள் தொகை அடிப்படையில் (ரூ.221.6 பில்லியன்) மிகவுயர்ந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்த சாதனமொன்றாகக் காணப்பட்ட போதும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உயர்ந்த தளத்தாக்கம் காரணமாக 5.0 சதவீத வளர்ச்சிக்கு மட்டுமே வகைகூறியது. ஏனைய ஆண்டுகளைக் காட்டிலும் கொடுகடனுக்கான குறைந்த கேள்வியின் காரணமாக கூடுதலான நிதியங்கள் முதலீட்டிற்கு திருப்பப்பட்டன. இதன் விளைவாக முதலீட்டில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2018 இறுதியின் 4.6 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 12.2 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவால் அதிகரித்தது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன முறையே ரூ.122.1 பில்லியன், ரூ.143.9 பில்லியன் மற்றும் ரூ.114.6 பில்லியனால் அதிகரித்தமையின் காரணமாக முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் 18.1 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் ரூ.116.0 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் முதலீடுகள் முறையே ரூ.52.3 பில்லியன் மற்றும் ரூ.22.5 பில்லியனுக்கு பதிவு செய்த அதிகரிப்பினை எதிரீடு செய்ததனால் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2019 காலப்பகுதியில் 7.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

அட்டவணை 8.2
வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி பணிநிலையங்களின் பரம்பல்கள்

| வகை | 2018 முடிவில் (அ) | 2019 முடிவில் (ஆ) |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| **I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **26** | **26** |
| உள்நாட்டு வங்கிகள் | 13 | 13 |
| வெளிநாட்டு வங்கிகள் | 13 | 13 |
| **II. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை** | **6,186** | **6,690** |
| கிளைகள் | 2,877 | 2,907 |
| உள்நாட்டு வங்கிகள் | 2,826 | 2,857 |
| வெளிநாட்டு வங்கிகள் | 51 | 50 |
| மாணவர் சேமிப்பு பிரிவுகள் | 3,309 | 3,783 |
| **III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்** | **4,644** | **5,158** |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| **I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **7** | **6** |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 1 | 1 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 4 | 3 |
| **II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை** | **696** | **697** |
| கிளைகள் (இ) | 696 | 697 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கி | 261 | 262 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 64 | 64 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 371 | 371 |
| **III. தன்னியக்க கூற்றுப் பொறிகள்** | **376** | **413** |
| **வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை** | **6,882** | **7,387** |
| **தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை** | **5,020** | **5,571** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மாணவர் சேமிப்புப் பிரிவுகள் தவிர்ந்த அனைத்து வங்கிப் பணிநிலையங்கள்.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**(இ) பொறுப்புக்கள்: 2019 இறுதியிலுள்ளவாறு வங்கித்தொழில் துறையின் மொத்தப் பொறுப்புகளில் 73.2 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முக்கிய நிதியியல் மூலமாக வைப்புக்கள் தொடர்ந்தும் விளங்கிய வேளையில்**

### சிறப்புக்குறிப்பு 11
### ஒழுங்குபடுத்தல்களை உரிமம்பெற்ற வங்கிகளின் வணிக மாதிரிகளுடன் ஒருங்கிணைத்தல்: விகிதாசாரத்தன்மை

***ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கை வகுப்பதில், வங்கித்தொழில் வணிக மாதிரிகளில் உள்ள வேறுபாடுகளை அங்கீகரிப்பதன் முக்கியத்துவம்***

2007/08 இல் இடம்பெற்ற உலக நிதி நெருக்கடியின் பின்னர் உலகளாவிய நிதித்துறையின் ஒழுங்குபடுத்துநர்கள் அதிகளவில் சிக்கலான மற்றும் கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை நோக்கி நகரத் தொடங்கினர். இதனடிப்படையில், உலகளாவிய முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் உள்ளிட்ட பெரிய மற்றும் சர்வதேச அளவில் செயற்படும் வங்கிகளின் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு, பாசல் III ஒழுங்குமுறைப்படுத்தல் தரநியமங்களை வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழுமம் அறிமுகப்படுத்தியது. எனினும், பல அதிகார மையங்கள் பரந்த அளவிலாக வங்கிகளுக்கு பாசல் தர நியமங்களைப் பிரயோகிக்க விரும்பின. உலகளாவிய முறையியல் ரீதியாக முக்கியத்துவமற்ற வங்கிகள், குறிப்பாக சிறிய மற்றும் சிக்கல்தன்மையற்ற வங்கிகளிற்கும் இடமளிப்பதற்காக, பாசல் III தரநியமங்களின் சிக்கலானதன்மை மற்றும் அதிகளவில் வளங்களின் தேவைப்பாடு ஆகியவை ஒழுங்குமுறைப்படுத்தலை மேம்படுத்துவதற்கான விவாதத்தைத் தூண்டின (Restoy 2019). ஆகையால், சிறிய மற்றும் சிக்கல்தன்மையற்ற நிதியியல் நிறுவனங்களுக்காக எளிமையான ஒழுங்குமுறைப்படுத்தல்களை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் வங்கி ஒழுங்குமுறைப்படுத்தலின் விகிதாசாரத்தன்மை எண்ணக்கரு பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் அதிகளவில் கவனத்தை ஈர்த்தது.

***விகிதாசாரத்தன்மையை அறிமுகப்படுத்தல்***

விகிதாசாரத்தன்மை என்பது பொதுச்சட்டத்தின் முக்கிய எண்ணக்கருக்களிலொன்றாகக் காணப்படுவதுடன், விதிமுறைகள், மற்றும் சட்டங்களின் நிலை அவற்றின் தலையீடுகளின் காரணமாக எதிர்பார்க்கப்படும் விளைவுகளுக்கு அமைவாக அளவிடப்படுகின்றது என்ற கருத்தைத் தெரிவிக்கப் பயன்படுகின்றது. எளிமையான சொற்களில், விகிதாசாரத்தன்மை என்பது இடர்நேர்வு அதிகரிக்க விதிமுறைகள் அதிகரிக்கின்றது. ஆகவே, இடர்நேர்வுகள் குறைய விதிமுறைகள் குறைவாக இருக்கலாம் என்பதைக் கருதுகின்றது. இந்த முன்மொழிவினை, நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தலின் பின்னணியில் நிதியியல் நிறுவனங்களுக்கு அவர்கள் நிதியியல் முறைமைக்கு ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை அளவிடுதலென பொருள் கொள்ளமுடியும். ஆகவே, உயர் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் உயர் அமைப்பு ரீதியான இடர்நேர்வுகளைக் கொண்ட நிறுவனங்கள் கடுமையான சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல்களுக்கும் உட்டபட்டதாக இருக்கும் அதேவேளை சிறிதளவான ஒப்பீட்டளவில் எளிமையான நிதி நிறுவனங்கள் அதிகளவிலான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளால் அதிக சுமைகளுக்குட்படாதிருக்கும்.

நிதித்துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் குறிக்கோள்கள் பொதுவாக நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை பாதுகாத்தல், சந்தை ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துதல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நிதியியல் உள்ளடங்களை ஊக்குவித்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாகும். இது தொடர்பாக விகிதாசாரத்தன்மையை அறிமுகப்படுத்துவதினால் சந்தை அபிவிருத்தி மற்றும் ஆரோக்கியமான போட்டித்தன்மையை கட்டுப்படுத்தாது அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களின் பன்முகத்தன்மையை கட்டுப்படுத்தாது விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களை சமத்துவமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் சந்தைப்பங்கேற்பாளர்களுக்கு ஒரு சமத்துவமான இயங்கு தளத்தைக் கொண்டு வரமுடியும். நிதியியல் நிறுவனங்களின் வெவ்வேறு வணிக மாதிரிகள் மற்றும் நிதியியல் உள்ளடக்கையை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தி வங்கியியல், கொள்வனவு மற்றும் எண்ணிம (டிஜிட்டல்) வங்கியியல் அல்லது கிராமிய வங்கியியல் போன்ற வெவ்வேறு நோக்குகள் என்பவற்றை அங்கீகரிக்கவும் மற்றும் அவற்றிற்கு வசதியளிக்கவும் வேறுபடுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை அறிமுகப்படுத்த இது வழிவகுக்கின்றது.

நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தல்களில் விகிதாசாரத்தன்மையை பிரயோகிப்பது நிதித்துறை மேற்பார்வையில் அதனைப் பிரயோகிப்பதிலிருந்து வேறுபடுகின்றது. வங்கி மேற்பார்வையானது, இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையென பரவலாக அறியப்படுவதுடன், இது அவர்கள் மேற்பார்வை செய்யும் நிறுவனங்களின் இடர்நேர்வு நிலைகளிற்கு அமைவாக ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகள் வழங்கும் வள ஒதுக்கீட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். எனினும், நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தல்களில் விகிதாசாரத்தன்மையைக் கொண்டுவருவது, நிதியியல் நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் செலவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். பிரயோகத்தில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செயற்பாடுகளில் விகிதாசாரத்தன்மையை கூட்டிணைப்பதன் இறுதி விளைவாக வினைத்திறனான வளப்பயன்பாட்டுடன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுகின்ற குறிக்கோளுடன் இணைந்து செல்கின்றது (Restoy 2018).

வங்கிகளின் வணிக மாதிரிகளுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் இணைப்பதற்கான அடிப்படைக் காரணம், நிதி திரட்டுவதற்கும் மேலாக வங்கி நிறுவனங்களின் பரந்த பங்களிப்பை ஒழுங்குமுறைப்படுத்தல்கள் அங்கீகரிக்க வேண்டும் என்ற வாதத்திலிருந்து உருவாகின்றது. குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில், நிதியியல் உள்ளடங்கலை மேம்படுத்தல், ஏனைய மாற்று வழிமுறைகளின் வலுவான இருப்பில்லாத பட்சத்தில் கடன் மற்றும் அபிவிருத்தி தொடர்பான இலக்குகள் என்பவற்றை அடைய வசதியளித்தல் போன்ற தொழிற்பாடுகள் வங்கி நிறுவனங்களுக்குரியதாகும். இதனடிப்படையில், சிறிய வங்கிகள் மற்றும் பிராந்திய ரீதியிலான வங்கிகள், முக்கியமாக வீட்டுத்துறையினர், சிறிய நிறுவனங்கள் மற்றும் கிராமிய சமூகங்களுக்கு உதவும் ஒரு அபிவிருத்தி முகவராக பங்களிப்புச் செய்கின்றன. மேலும், வளர்ந்துவரும் சந்தைகளில், கொடுப்பனவு வங்கிகள் போன்ற பொருளாதாரச் சிக்கனமான கண்டுபிடிப்புகள்[1] இணைய வங்கி வசதியையும் மற்றும் காசல்லா கொடுப்பனவுகளையும் ஊக்குவிக்குகின்ற ஆற்றலைக்

1 பொருளாதார சிக்கனமான கண்டுபிடிப்பு அல்லது பொருளாதாரச் சிக்கனமான பொறியியல் என்பது ஒரு பொருள் அல்லது சேவையின் மற்றும் அதன் உற்பத்தியின் சிக்கலான தன்மையினையும், செலவினையும் குறைப்பதற்கான செயன்முறையாகும். குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும் சந்தைகளில் நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்காக, ஒரு பொருள் அல்லது சேவையிலிருந்து அத்தியாவசியமற்ற அம்சங்களை நீக்குவதைக் குறிக்கும்.

8

கொண்டுள்ளன. வங்கிகளின் தொடர்புடைய வணிக மாதிரிகளைக் கருத்திற் கொள்ளாமல் பொதுவான ஒழுங்குமுறைப்படுத்தல்களை விதிப்பதானது வேறுபட்ட அளவுகளில் வங்கிகளால் செய்யப்படும் அத்தகைய வேறுபட்ட வகிபாகங்களை மிகவும் விலை உயர்ந்ததாக்குகின்றது.

மேலும், சரியான நியாயப்படுத்தல்களின்றி சிறிய வங்கிகள் மீது விதிக்கப்படும் அளவுக்கதிகமான ஒழுங்குமுறைப்படுத்தல்களானது போட்டித்தன்மையை பாதிப்பதுடன், வெற்றிபெறுவதற்கான நியாயமான மற்றும் சமமான வாய்ப்புள்ள சூழ்நிலையை குறைமதிப்பிற்குட்படுத்தும். இது வாடிக்கையாளர்களின் சிறந்த நலனுக்கானதாக இருக்காது. மேலும், ஒரு விகிதாசாரத்தன்மையற்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது உயர் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு சிறிய வங்கிகளை ஒன்றிணைக்க அல்லது ஒருங்கிணைப்பதைக் கட்டாயப்படுத்துகின்றது. இத்தகைய செறிவுத்தன்மை மற்றும் பன்முகத்தன்மையின்மை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு ஆரோக்கியமானதாக இருக்காது.

ஆகவே, விகிதாசாரத்தன்மையின் அடிப்படையில் வேறுபட்ட ஒழுங்குமுறைக்கட்டமைப்பானது சம்பந்தப்பட்ட ஒழுங்குபடுத்தல்கள், வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட அனைத்து பங்கேற்பாளர்களினதும் சிறந்த நலனுக்கானதாக இருக்கும். ஐரோப்பிய ஒன்றியம், ஹொங்கொங், யப்பான், சுவிஸ்சர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா வரையிலான உலகெங்கிலுமுள்ள அதிகார மையங்கள் வங்கி ஒழுங்குமுறைப்படுத்தல்களை அமைப்பதிலும், செயற்படுத்துவதிலும் விகிதாசாரதன்மையின் கூறுகளை இணைத்துள்ளன.

### *வங்கித்தொழில் ஒழுங்குமுறைகளில் விகிதாசாரத்தன்மையை உள்ளடக்குவதற்கான உலகளாவிய எடுத்துக்காட்டுக்கள்*

ஒழுங்குமுறைகளில் விகிதாசாரத்தன்மையை உள்ளடக்க உலக ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் வெவ்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றினாலும் இரு தனித்துவமான மாதிரிகளை விகிதாசாரத் தன்மையை அமுல்படுத்துவதற்கான அடிப்படைகளாக அடையாளம் காணலாம்.

(அ) விகிதாசாரத்தன்மைக்கான வகைப்படுத்தல் அணுகுமுறை (விவஅ) மற்றும் (ஆ) விகிதாசாரத்தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறை (விகுநிஅ) (Carvalho,et al.,2017) விகிதாசாரத்தன்மை வகைப்படுத்தல் அணுகுமுறையை அமுல்படுத்தும் ஆட்சிகளில் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் ஒவ்வொரு வகை வங்கிகளுக்கும் குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் வெவ்வேறு தர மற்றும் அளவு பண்புகளின் கீழ் வங்கிகளை வகைப்படுத்துகின்றனர். வெளிப்படுத்தல்கள், திரவத்தன்மை வீதங்கள் பாரிய வசதிகளின் எல்லை மற்றும் சந்தை இடர்நேர்வுகள் போன்ற முன்மதியுடைய தேவை துணைகளின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதற்காக விகிதாசாரத்தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறையை அமுல்படுத்தும் ஆட்சிகளில் அதற்கென வடிவமைக்கப்பட்ட வகைப்படுத்தலை ஒருங்குமுறைப்படுத்துநர்கள் நிறுவுகின்றார்கள். இரண்டு முறைகளின் கீழ் வங்கிகளை வகைப்படுத்த வெவ்வேறு காரணிகள் இருந்தபோதிலும் அளவு மெதுவாக காரணியாகவே உள்ளது.

இரண்டு காரணிகளும் அதற்குரிய பலங்களைக் கொண்டிருந்தன. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட ஆட்சியில் ஒத்த குணாதிசயங்களைக் கொண்ட வங்கிகளுக்கு நிலையான முன்மதியுடைய விதிகளை விகிதாசாரத்தன்மை வகைப்படுத்தல் அணுகுமுறை வழங்குகின்றது. வங்கிகளின் ஒவ்வொரு குழுவிற்கும் கொள்கை கட்டமைப்பின் நிலையான பயன்பாட்டை அனுமதிக்கும் அதேவேளை குழுவிற்கான தீர்மான உத்திகள் மற்றும் மேற்பார்வை அணுகுமுறையுடன் ஒழுங்கமைப்பு கட்டமைப்புக்களை இணைக்க ஒழுங்குமுறைப்படுத்துநர்களை அனுமதிக்கிறது. மறுபுறம், விகிதாசாரத்தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறை ஒவ்வொரு வங்கியின் வணிகத்தையும் ஒட்டுமொத்த இடர்களையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு வங்கியின் குறிப்பிட்ட குணாதிசயங்களுக்கான ஒழுங்குமுறை தேவைகளை மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கிறது. ஆகவே, வங்கிகள் வணிக நடவடிக்கைகள் மற்றும் இடர்கள் ஆகியவற்றின் பொருத்தத்தைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பகுதிகளில் ஒழுங்குமுறைப்படுத்தல்களை பின்பற்ற விகிதாசாரத் தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறையை அனுமதிக்கிறது. அவ்வாறு செய்யும்போது முன்மதியுடைய நியமங்கள் தேவையின்றி பலவீனப்படுத்தாமல் ஒழுங்குமுறை சுமையைக் குறைக்க விகிதாசாரத்தன்மை குறிப்பிட்ட நிலையான அணுகுமுறை அனுமதிக்கின்றது.

பிரேசில், யப்பான் மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற ஆட்சியாளர்கள் விகிதாசாரத் தன்மைக்கான தன்மைக்கான வகைப்படுத்தல் அணுகுமுறை அடிப்படையிலான வேறுபட்ட ஒழுங்குமுறை ஆட்சிகளின் சிறந்த எடுத்துக்காட்டுக்கள். பிரேசில் அதன் நிதியியல் முறையை அளவு, எல்லை தாண்டிய நடவடிக்கைகள் மற்றும் இடர்களைக் கருத்திற்கொண்டு ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளது. மொத்தச் சொத்துக்கள், நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள், வைப்புத்தொகை காப்பீடு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட வைப்புத்தொகை மற்றும் தேவையான மூலதனம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு சுவிட்சர்லாந்து ஐந்து வகை வகைப்பாட்டைப் பின்பற்றுகிறது. உள்நாட்டு ஒழுங்குமுறைகளை சர்வதேச அளவில் செயற்படாத வங்கிகளும் முழு பாசல் தரங்களை சர்வதேச அளவில் செயற்படும் நிறுவனங்களைப் பின்பற்றுமாறும் இரு விதமாக வகைப்படுத்தி யப்பான் பின்பற்றுகிறது.

சந்தை இடர்நேர்வு மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை விகிதாசாரதன்மையில் விதிவிலக்கல் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் இலகுவாக்கல்களை விகிதாசாரத்தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறையைப் பின்பற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற ஆட்சியாளர்கள் அமுல்படுத்தியுள்ளார்கள். இதேபோன்று ஐக்கிய அமெரிக்க திரவத்தன்மை தேவைகள், சந்தை இடர்நேர்வு மற்றும் ஒழுங்குமுறை விகிதாசாரப் பயன்பாட்டிற்கான அழுத்தச் சோதனை போன்ற பகுதிகளை இலக்குவைக்கின்றது. கடன் இடர்நேர்வு, திரவத்தன்மை தேவைப்பாடுகள் மற்றும் பாரிய வசதிகள் போன்ற பகுதிகளில் ஹொங்ஹொங் விதிவிலக்குகளை வழங்குகிறது. இருப்பினும், நடைமுறையில் விகிதாசாரத் தன்மைக்கான வகைப்படுத்தல் அணுகுமுறை மற்றும் விகிதாசாரத் தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறை ஆகிய இரண்டின் கலவைகளை ஏனைய பிற ஆட்சிகளில் பின்பற்றலாம்.

### *இலங்கையில் வங்கியின் ஒழுங்குமுறைகளில் விகிதாசாரதன்மையின் பொருந்துகை*

இலங்கை விகிதாசாரத்தன்மைக்கான வகைப்படுத்தல் அணுகுமுறை மற்றும் விகிதாசாரத் தன்மைக்கான குறிப்பிட்ட நிலையான அணுகுமுறை ஆகிய இரண்டு மூலங்களைப்

8

பயன்படுத்தி வங்கி ஒழுங்கு முறைப்படுத்தல்களின் விகிதாசாரதன்மையை உள்ளடக்குவதற்கான சாத்தியத்தை மதிப்பிடுகின்ற செயன்முறையில் உள்ளது.

இலங்கை மத்திய வங்கி சமீபத்தில் சர்வதேச நியமங்களுக்கேற்ப உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியமான வங்கிகளை கையாளுவதற்கான ஒரு கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. இத்தகைய வங்கிகள் உயர் மூலதன போதுமான தேவைகள், இறுக்கான இடர்முகாமைத்துவ செயற்பாடுகள், இடர்ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்பார்வை எதிர்பார்ப்புக்கள் பூர்த்திசெய்யப்படவேண்டியிருந்தது. மேலும், முறையியல் ரீதியில் முக்கியத்துவமான வங்கிகள் முறையான அடையாளத்துடன் முறையியல் ரீதியில் முக்கியத்துவமான வங்கிகள் மற்றும் முறையியல் ரீதியில் முக்கியத்துவமல்லாத வங்கிகள் என உரிமம்பெற்ற வங்கிகள் இரு பரந்த வகைகளாகப் பிரிக்கப்படுகின்றனர். மறுசீரமைக்கப்பட்ட அணுகுமுறைகள் விகிதாசாரத்தன்மையின் அடிப்படையில் முறையியல் ரீதியில் முக்கியத்துமல்லாத வங்கிகளுக்கு அறிமுகப்படுத்தப்படும் அதேவேளை முறையியல் ரீதியில் முக்கியத்துவமான வங்கிகளுக்கு தீவிர மேற்பார்வை மற்றும் விரிவான ஒழுங்குமுறைப்படுத்தல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எதிர்வரும் காலத்தில் இலங்கை ஒழுங்குமுறை செயன்முறை பெரும்பாலும் விகிதாசாரத்தன்மையின் மூலங்களால் வடிவமைக்கப்படும். இவற்றை வசதிசெய்யுமுகமாக வரவிருக்கும் வங்கிச் சட்டத்தில் இலங்கை மத்திய வங்கியானது வேறுபட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பைக் கொண்டிருப்பதற்கு நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருக்க அனுமதிக்கும் ஏற்பாடுகள் உள்ளடங்கும். மூலதனம் மற்றும் திரவத்தன்மை தேவைகள், பாரிய வெளிப்படுத்துகைகள், சந்தை இடர்நேர்வு, மூலதன திட்டமிடல் மற்றும் மேற்பார்வை மதிப்பாய்வு வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் மீட்பு மற்றும் தீர்மான திட்டத்தை செயற்படுத்தல் ஆகியவற்றின் அடிப்படையை வேறுபட்ட அல்லது விகிதாசாரத்தன்மையை நோக்கிய ஒழுங்குமுறை செயற்பாட்டில் புதிய மாற்றத்தை கொண்டுவருவதனூடாக உரிமம்பெற்ற வங்கிகள் இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வை மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும்.

### *சவால்கள் மற்றும் முன்னோக்கிய பாதை*

வங்கிகளுக்கான ஒழுங்குமுறை சுமையைக் குறைக்கும் அதேவேளை முன்மதியுடைய ஒழுங்குமுறையை மேற்பார்வையை அவ்வாறே பேணி அவற்றிக்கிடையிலான சமநிலையைக் கொண்டுவருதல் விகிதாசாரத்தன்மையை செயற்படுத்துவதில் முக்கிய சவாலாக இருக்கும். ஆகவே, கருத்திற்கொள்ளப்படும் வங்கிகளின் திரவத்தன்மை, நீண்டகால தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் கடன்நீங்கும் தன்மை ஆகிய எளிமையான விதிமுறைகள் போதுமானதாக இருக்கும் பகுதிகளில் மட்டுமே குறைக்கப்பட்ட அல்லது தளர்வான ஒழுங்குமுறைத்தேவைகளைப் பயன்படுத்தலாம். இது சம்பந்தமாக மேம்பட்ட மூலதன தங்கியிருப்புக்கள் (மற்றும் எதிர் மாறாக) ஒழுங்குமுறை சலுகைகளுடன் சரிசெய்வதற்காக சாத்தியங்கள் ஆராயப்பட வேண்டும். மேலும், பரந்த அளவிலான பங்குதாரர்கள் மற்றும் பொருளாதாரத்தின் நன்மைக்காக செலவுச் சிக்கனங்கள் அல்லது தளர்த்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மூலமாக பெறப்பட்ட கணக்கிலிடப்படாத மூலதனம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளின் தார்மீக கடமையாக இருக்கும். மேலும், ஒழுங்குமுறைப்படுத்துநராக விகிதாசாரதன்மையின் முறையை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க அல்லது சந்தை மூல செயத்திறனூடாக சிறிய வங்கிகளின் இணைப்பு மற்றும் உள்ளூர் வங்கிகளின் வளர்ச்சி மற்றும் பிராந்தியத்தில் எல்லை தாண்டிய வாய்ப்புகளைப் பயன்படுத்துவதை தடுப்பதாக அமையாது இருக்கும் வகையில் இலங்கை மத்திய வங்கி விழிப்புடன் செயற்பட வேண்டும்.

கடன்பாடுகள் 13.4 சதவீதத்திற்கு வகைகூறின. 2019இல் வைப்புத் தளத்தின் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான அதிகரிப்பு 2018இனைவிட குறைந்ததாகக் காணப்பட்டது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வைப்புத்தளம் 2018இன் ரூ.1.1 றில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.669.8 பில்லியனால் அதிகரித்து ரூ.9.2 றில்லியனை அடைந்தது. வைப்புக்களில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2018 இறுதியின் 14.8 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 7.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தவணை வைப்புகள் மிகக் கவர்ச்சிகரமான வைப்புச் சாதனங்களாகத் தொடர்ந்தும் விளங்கி இவ்வாண்டுப்பகுதியின் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் 78.8 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் மொத்த வைப்புக்களில் அதன் பங்கு 2018 இறுதியின் 65.5 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 66.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, 2019 இறுதியில் மொத்த வைப்புக்களில் சேமிப்பு மற்றும் நடைமுறை வைப்புகள் முறையே 25.6 சதவீதத்திற்கும் 5.8 சதவீதத்திற்கும் வகைகூறின. இதற்கமைவாக, நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்கின் விகிதம் தொடர்பான காலப்பகுதியில் 32.0 சதவீதத்திலிருந்து 31.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2019இல் வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2018இன் ரூ.156.3 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் (9.7 சதவீதம்) 2019இல் ரூ.84.0 பில்லியனால் (4.8 சதவீதம் கொண்ட சுருக்கம்)

அட்டவணை 8.3
வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2018 (அ) | | 2019 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2018 (அ) | 2019 (ஆ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 7,693.4 | 65.2 | 8,122.4 | 64.9 | 19.6 | 5.6 |
| முதலீடுகள் | 2,671.6 | 22.7 | 2,996.7 | 23.9 | 4.6 | 12.2 |
| ஏனையவை (இ) | 1,429.0 | 12.1 | 1,403.6 | 11.2 | 9.3 | -1.8 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 8,492.4 | 72.0 | 9,162.3 | 73.2 | 14.8 | 7.9 |
| கடன் பெறுகைகள் | 1,763.4 | 15.0 | 1,679.4 | 13.4 | 9.7 | -4.8 |
| முதலீட்டு நிதிகள் | 1,030.4 | 8.7 | 1,129.9 | 9.0 | 18.9 | 9.7 |
| ஏனையவை | 507.8 | 4.3 | 551.1 | 4.4 | 21.0 | 8.5 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **11,794.0** | **100.0** | **12,522.7** | **100.0** | **14.6** | **6.2** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.4
வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2018 (அ) | | 2019 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2018 (அ) | 2019 (ஆ) |
| கேள்வி வைப்புக்கள் | 544.0 | 6.4 | 528.8 | 5.8 | 9.7 | -2.8 |
| சேமிப்பு வைப்புக்கள் | 2,170.8 | 25.6 | 2,344.1 | 25.6 | 6.8 | 8.0 |
| தவணை வைப்புக்கள் | 5,564.9 | 65.5 | 6,092.5 | 66.5 | 18.3 | 9.5 |
| ஏனைய வைப்புக்கள் | 212.7 | 2.5 | 196.9 | 2.1 | 27.9 | -7.5 |
| **மொத்த வைப்புக்கள்** | **8,492.4** | **100.0** | **9,162.3** | **100.0** | **14.8** | **7.9** |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு 2019இல் 6.3 சதவீதம் (ரூ.47.0 பில்லியன்) கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்த இலங்கை ரூபாக் கடன்பாடுகளில் காணப்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்து கடன்பாடுகளில் ஏற்பட்ட மொத்த வீழ்ச்சியில் 56.0 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, 2019 ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் 3.0 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 169.3 மில்லியன்) வீழ்ச்சியடைந்தன.


**(ஈ) ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்தல்கள்: 2019இல் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளின் பிரதிபலிப்பாக 2018 உடன் ஒப்பிடுகையில் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்தல்களில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டது.** இது 2018ஆம் ஆண்டுப்பகுதியின் 14.7 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் (ரூ.569.4 பில்லியன்) ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 5.3 சதவீதம் கொண்ட (ரூ.233.5 பில்லியன்) எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் வசதிகள் 2019இன் இறுதியிலுள்ளவாறு 29.7 சதவீத பங்கொன்றுடன் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகளின் மிகப் பெரிய பங்கிற்கு வகைகூறின. வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகள் மொத்த ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகளில் 28.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் தீர்ப்பனவு செய்யப்படாத வெளிநாட்டு செலாவணிக் கொள்வனவுகள் (14.6 சதவீதம்)

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள்




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.2
வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் - (2019 இறுதியில் உள்ளவாறு)





*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

மற்றும் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் (13.9 சதவீதம்) என்பனவே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் (ரூ.20.0 பில்லியன்), எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்கள் (ரூ.16.2 பில்லியன்) மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் (ரூ.12.3 பில்லியன்) என்பன அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த அதேவேளையில் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகைகள் 16.8 சதவீதம் (ரூ.242.0 பில்லியன்) கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

## வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வுகள்

**(அ) கொடுகடன் இடர்நேர்வு: இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய மோசமான வியாபார நிலைமைகளின் காரணமாக செயற்படாக் கடன் விகிதம் 2018 இறுதியின் 3.4 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 4.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதன்பிரகாரம் துறையின் மொத்த செயற்படாக் கடன்கள் 2018ஆம் ஆண்டுக்காலப்பகுதியின் ரூ.102.5 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ரூ.118.5 பில்லியனால் அதிகரித்தது.

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகள்




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

8

அட்டவணை 8.5
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைசார் உள்ளடக்கம் (2019 இறுதியில் உள்ளவாறு)

| துறைகள் | தொகை ரூ.பில் (அ) | மொத்த கடன்களில் பங்கு (%) | செயற்படாக் கடன்களின் விகிதம் (%) |
|---|---|---|---|
| நுகர்வு | 1,492.8 | 18.4 | 3.6 |
| கட்டவாக்கம் | 1,267.2 | 15.6 | 5.8 |
| மொத்த மற்றும் சில்லறை வாணிபம் | 1,154.8 | 14.2 | 6.3 |
| தயாரிப்பு | 863.9 | 10.6 | 7.3 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் | 712.8 | 8.8 | 2.5 |
| வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி | 655.2 | 8.1 | 8.1 |
| நிதியியல் சேவைகள் | 427.5 | 5.3 | 1.0 |
| வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல் | 334.8 | 4.1 | 1.6 |
| சுற்றுலா | 304.6 | 3.7 | 6.4 |
| சுகாதார நலன், சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் | 295.2 | 3.6 | 2.3 |
| நிதி அமைச்சுக்கான கடன் வழங்கல்கள் | 205.7 | 2.5 | - |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 199.9 | 2.5 | 3.4 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் | 69.6 | 0.9 | 3.9 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செற்பாடுகள் | 66.2 | 0.8 | 2.2 |
| கல்வி | 62.0 | 0.8 | 1.9 |
| கலைகள், பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வு | 10.3 | 0.1 | 6.8 |
| மொத்தக் கடன்கள் | 8,122.4 | 100.0 | 4.7 |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2019ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மொத்த கடன் இழப்பீட்டுக்கான ஏற்பாடுகள் ரூ.48.5 பில்லியனால் அதிகரித்ததுடன் இவற்றுள் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் 99.6 சதவீதத்திற்க்கு வகைகூறின. எனினும், செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு குறித்துரைக்கப்பட்ட மற்றும் மொத்த ஏற்பாட்டு காப்பு விகிதங்கள் 2018 இறுதியின் முறையே 43.1 சதவீதம் மற்றும் 57.4 சதவீதங்களிலிருந்து 2019 இறுதியில் முறையே 42.4 சதவீதத்திற்கும் 52.3 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. தனிப்பட்ட வங்கிகள் அவற்றின் வியாபாரத்தினை பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையேயும் பன்முகப்படுத்தியிருக்கின்ற போதிலும் 75.7 சதவீதமான வங்கித்தொழில் துறையின் கொடுகடன்கள் நுகர்வு (18.4 சதவீதம்), கட்டுமானம் (15.6 சதவீதம்), மொத்த மற்றும் சில்லறை விற்பனை (14.2 சதவீதம்), தயாரிப்பு (10.6 சதவீதம்), உட்கட்டமைப்பு அபிவிருத்தி (8.8 சதவீதம்), வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி (8.1 சதவீதம்), போன்ற 6 பொருளாதாரத் துறைகளினுள் செறிந்திருந்தன. 2019ஆம் ஆண்டு இறுதியில் வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி (8.1 சதவீதம்), தயாரிப்பு (7.3 சதவீதம்), சுற்றுலா (6.4 சதவீதம்), மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை (6.3 சதவீதம்) மற்றும் கட்டுமானம் (5.8 சதவீதம்) போன்ற துறைகள் 2019 இறுதியின் மொத்த வங்கித்தொழில் துறை சராசரியிலும் பார்க்க உயர்ந்த செயற்படாக் கடன் விகிதத்தினை பதிவுசெய்திருந்தன. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் செயற்படாக் கடன் விகிதத்தில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் வங்கித்தொழில் துறை மோசமான தாக்கங்களை ஈர்த்துக் கொள்வதற்கான போதுமான ஒதுக்குகளுடனும் மூலதனத் தாங்கிருப்புக்களுடனும் தொழிற்படுவதனால் இது இன்னும் சமாளிக்கக்கூடிய மட்டத்திலேயே காணப்படுகிறது.

(ஆ) சந்தை இடர்நேர்வு:

**பங்குரிமைச் சந்தைக்கான மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகை மற்றும் வட்டி வீதம் மற்றும் செலாவணி வீத அசைவுகளுக்கான தாழ்ந்த தேறிய வெளிப்படுத்துகை என்பனவற்றின் காரணமாக சந்தை இடர்நேர்வுகளுக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை மிகக் குறைவாக இருக்குமெனக் கருதப்படுகிறது.**

வட்டி வீதங்கள்: **வட்டி உணர்திறன் விகிதம் (12 மாதங்களைவிட குறைவான முதிர்வுகளுடன் கூடிய வட்டியை உழைக்கும் பொறுப்புகளின் பங்கொன்றாக வட்டியை உழைக்கும் சொத்துக்கள்) 2018இன் இறுதியின் 77.5 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 76.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபம் ரூ.3.4 பில்லியனாக அமைந்து 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1.9 பில்லியனிலும் பார்க்க உயர்வானதாக விளங்கியது. கடனுக்கான கேள்வி குறைவாக இருந்தமையினாலும் வட்டி வீதங்கள் கீழ்நோக்கி அசைந்தமையினாலும் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அரச பிணையங்களுக்கு கூடுதலான நிதி திருப்பப்பட்டிருந்தமை இதற்கு காரணமாக அமைந்தது.

பங்குரிமை விலைகள்: **பங்குரிமைச் சந்தை மீதான குறைவான வெளிப்பாடுகள் காரணமாக வங்கித்தொழில் துறையின் பங்குரிமை மூலதன இடர்நேர்வானது ஆகக் குறைந்ததாகவிருந்தது. பங்குரிமைச் சந்தைக்கான வங்கியின் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை ரூ.15.8 பில்லியனாகக் காணப்பட்டது.** இது 2019 இறுதியில் மொத்தச் சொத்துக்கள் மற்றும் வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகளில் முறையே 0.1 சதவீதமாகவும் 2.7 சதவீதமாகவும் காணப்பட்டன.


செலாவணி வீதங்கள்: **வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி உயர்வாக இருந்தமையின் காரணமாக வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2018 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் அதிகரித்தது.** வெளிநாட்டு சொத்துக்கள், ஐந்தொகையிலான மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிநாட்டு நாணய சொத்துக்களை உள்ளடக்கியுள்ள அதேவேளை வெளிநாட்டு நாணய பொறுப்புக்களும் ஐந்தொகையிலான மற்றும் ஐந்தொகைக்கு

8

வெளியேயான பொறுப்புக்களை உள்ளடக்கியுள்ளது. 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் வங்கிகளுடனான வைப்புக்கள் மற்றும் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் அதிகரித்து காணப்பட்டது. இவ் அதிகரிப்பானது முன்னோக்கிய கொள்வனவு நியதிகள் மற்றும் ஏனைய பெறுதிச் சாதனங்கள் போன்ற ஐந்தொகைக்கு வெளியேயான சொத்துக்களின் உயர்ந்தளவு வீழ்ச்சியால் எதிரீடு செய்யப்பபட்டதன் விளைவாக மொத்த வெளிநாட்டு சொத்துக்களில் வீழ்ச்சி காணப்பட்டது. 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் தீர்ப்பனவின் மூலம் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் வீழ்ச்சி ஏற்பட்ட அதேவேளை அதிகரித்த வாடிக்கையாளர் வைப்புக்களின் விளைவாக ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் சிறிதளவால் அதிகரித்தது. எவ்வாறாயினும், முன்னோக்கிய விற்பனைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிநாட்டு நாணய பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தது. வங்கிதொழில் துறையின் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 1.1 சதவீதமாக 2019இன் இறுதியில் காணப்பட்டதுடன் இது, 2018 இறுதியின் 0.8 சதவீதத்திலிருந்து சிறிதளவால் அதிகரித்திருந்தது. வங்கித்தொழில் துறையானது 2018 இறுதியின் ரூ.11.7 பில்லியன் கொண்ட நீண்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் ரூ.16.4 பில்லியன் கொண்ட நீண்ட வெளிநாட்டு நாணய நிலைமையொன்றினை அறிக்கையிட்டது. 2018 உடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் செலாவணி வீத அசைவுகள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தமையின் காரணமாக வங்கித்தொழில் துறை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அறிக்கையிட்ட ரூ.31.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் ரூ.14.2 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபமொன்றினைப் பதிவுசெய்தது.

**(இ) திரவத்தன்மை இடர்நேர்வு: 2019ஆம் ஆண்டுப்பகுதியில் இடர்நேர்வற்ற அரச பிணையங்கள் போன்ற திரவத்தன்மைச் சொத்துக்களுக்கு உயர்ந்தளவு நிதி திருப்பப்பட்டமையின் காரணமாக வங்கித்தொழில் துறை போதுமான திரவத்தன்மை மட்டங்களுடன் தொழிற்பட்டது.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் குறைந்தபட்ச நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதமான 20.0 சதவீதத்தினை இலங்கை ரூபாயில் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. அதேவேளையில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் குறைந்தபட்ச நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதமான 20.0 சதவீதத்தினை ஐ.அ.டொலரில் பேணுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன.


வரைபடம் 8.5
**வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள்**



மூலம் : இலங்கை மத்திய வங்கி

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான நியதிச்சட்ட திரவத்தன்மை விகிதமானது ஒப்புதலளிக்கப்பட்ட திரவச் சொத்துக்களுக்கும் மொத்த வைப்புக்கள் மற்றும் கடன்பாட்டுப் பொறுப்புக்களுக்குமிடையிலான விகிதமொன்றாகவும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளைப் பொறுத்தவரையில் ஒப்புதலளிக்கப்பட்ட திரவச் சொத்துக்களுக்கும் மொத்த வைப்புக்களுக்குமிடையிலான விகிதமொன்றாகவும் கணிக்கப்படுகிறது. உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதம் 2018 இறுதியின் 27.6 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 31.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் தொடர்பான காலப்பகுதியில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் நியதிச்சட்ட திரவத்தன்மை ஒதுக்கு விகிதம் 45.4 சதவீதத்திலிருந்து 47.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுகடனின் குறைந்தளவு விரிவாக்கத்தின் விளைவாக வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான கொடுகடனின் விகிதத்தினை 10 அடிப்படைப் புள்ளிகளால் குறைவடையச் செய்த அதேவேளையில் மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்து விகிதமும் வைப்புக்களுக்கான திரவச்சொத்து

வரைபடம் 8.6
**வங்கித்தொழில் துறையின் திரண்ட பொறுப்புகளின் சதவீதமாக திரண்ட முதிர்ச்சி இடைவெளி**



மூலம் : இலங்கை மத்திய வங்கி

8

அட்டவணை 8.6
வங்கித்தொழில் துறையின் திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்


| விடயம் | 2018 (அ) | | 2019 (ஆ) | | மாற்றம் (ரூ.பில்) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2018 (அ) | 2019 (ஆ) |
| திறைசேரி உண்டியல்கள் | 685.0 | 22.6 | 871.2 | 24.1 | -59.7 | 186.2 |
| திறைசேரி முறிகள் | 941.3 | 31.0 | 1,203.4 | 33.2 | -19.0 | 262.1 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 543.0 | 17.9 | 569.7 | 15.7 | 18.2 | 26.7 |
| காசு | 184.0 | 6.1 | 196.9 | 5.4 | 18.5 | 13.0 |
| அழைப்புப் பணம் | 120.7 | 4.0 | 168.8 | 4.7 | 10.1 | 48.0 |
| வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான மீதிகள் | 386.0 | 12.7 | 427.5 | 11.8 | 58.6 | 41.4 |
| ஏனையவை | 175.9 | 5.8 | 183.8 | 5.1 | 46.6 | 7.9 |
| மொத்த திரவச் சொத்துக்கள் | 3,035.9 | 100.0 | 3,621.2 | 100.0 | 73.3 | 585.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

விகிதமும் முறையே 318 அடிப்படைப் புள்ளிகளினாலும் 377 அடிப்படைப் புள்ளிகளினாலும் அதிகரித்தன.

**2019 இறுதியளவில், வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணயத் திரவத்தன்மை காப்பு விகிதங்கள் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடட்டு அளவான 100 சதவீதத்திற்கும் மிக மேலே முறையே 212.8 சதவீதத்திலும் 178.2 சதவீதத்திலும் காணப்பட்டன.** வங்கிகள் திரவத்தன்மை அழுத்த சூழ்நிலையொன்றில் 30 நாட்கள் காலப்பகுதியொன்றுக்காக வங்கியின் திரவத்தன்மை தேவைகளை நிறைவுசெய்வதற்கு இரண்டாந்தரச் சந்தையில் இலகுவாகவும் உடனடியாகவும் காசாக மாற்றப்படக்கூடிய பொறுப்புச் சாட்டப்படாத உயர்தர திரவச் சொத்துக்களின் கையிருப்பாகக் காணப்படுகின்ற திரவத்தன்மை உள்ளடக்க விகிதமொன்றினைப் பேணுவதற்கும் வங்கிகள் வேண்டப்படுகின்றன. இதற்க்கு மேலதிகமாக, 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட வங்கிகள் போதுமான உறுதிப்பாட்டு நிதியிடல் மூலங்களை பேணவேண்டுமெனத் தேவைப்படுத்தும் தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் 2019இன் இறுதியில் 130.1 சதவீதமாக அமைந்து 100 சதவீதம் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மிக மேலே காணப்பட்டது. மொத்த திரவச் சொத்துக்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியின் 73.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.585.3 பில்லியனால் அதிகரித்தது. மொத்த திரவத்தன்மைச் சொத்துக்கள் 2019ஆம் ஆண்டு இறுதியில் ரூ.3,621.2 பில்லியனாக விளங்கியதுடன் இவற்றுள் அரச பிணையங்களிலான முதலீடுகள் 73.0 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. இதற்கிடையில் 12 மாத முதிர்ச்சிகளுக்கும் குறைவான முதிர்ச்சிக் கூடைகளுக்கான வங்கித்தொழில் துறையின் ஒன்றுசேர்ந்த பொறுப்புக்களின் சதவீதமாக ஒன்றுசேர்ந்த முதிர்ச்சி இடைவெளி 2018ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு இறுதியில் குறுக்கமடைந்தமை, இக்குறுகிய காலப்பகுதியில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் சிறந்த முகாமைத்துவத்தினை எடுத்துக்காட்டியது. போதுமான திரவத்தன்மைத் தாங்கிருப்பு பேணப்பட்டமையின் காரணமாக திரவத்தன்மை இடர்நேர்வுகளுக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை மிகக் குறைவாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்



*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபம்

| விடயம் | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக |
| தேறிய வட்டி வருமானம் | 397.6 | 3.6 | 431.1 | 3.6 |
| வட்டி வருமானம் | 1,108.7 | 10.1 | 1,212.0 | 10.1 |
| வட்டிச் செலவினம் | 711.1 | 6.5 | 780.8 | 6.5 |
| வட்டியல்லா வருமானம் | 147.7 | 1.3 | 132.3 | 1.1 |
| வெளிநாட்டு செலாவணி வருமானம் | 48.6 | 0.4 | 26.7 | 0.2 |
| வட்டியல்லா செலவினம் | 254.2 | 2.3 | 264.7 | 2.2 |
| ஊழியர் செலவுகள் | 121.4 | 1.1 | 126.5 | 1.1 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் | 41.3 | 0.4 | 60.9 | 0.5 |
| வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான) | 194.7 | 1.8 | 173.0 | 1.4 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 125.9 | 1.1 | 111.7 | 0.9 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## வளங்கள்

(அ) இலாபத்தன்மை: **2019ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வட்டிச் செலவுகளுடன் (9.8 சதவீதம்) ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறையின் வட்டி வருமானம் குறைந்த வீதமொன்றினால் (9.3 சதவீதம்) வளர்ச்சியடைந்த போதும் வங்கித்தொழில் துறையின் தேறிய வட்டி வருமானம் 2018ஆம் ஆண்டு மற்றும் 2019ஆம் ஆண்டின் இறுதியில் 3.6 சதவீதம் கொண்ட ஒரே மட்டத்தில் காணப்பட்டது.** தேறிய வட்டி வருமானம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.33.5 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளையில் வட்டியல்லா வருமானம் ரூ.15.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு முன்னைய ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட உயர்ந்த மீள்மதிப்பீட்டு இலாபங்களே பெருமளவிற்குக் காரணமாகும். கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.19.6 பில்லியனால் அதிகரித்த அதேவேளையில் வட்டியல்லாச் செலவினங்கள் ரூ.10.5 பில்லியனால் அதிகரித்தமைக்கு அலுவலர் செலவுகள் ரூ.5.1 பில்லியனால் அதிகரித்தமை பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், 2019ஆம் ஆண்டிற்கான வர்த்தக மற்றும் முதலீட்டுப் பிணையங்கள் மீதான இழப்புக்கள் முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ.8.2 பில்லியன் குறைவானதாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கம்பனி வரிக்கு முன்னரான இலாபம் ரூ.173.0 பில்லியனாகக் காணப்பட்டது. இது, முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ.21.7 பில்லியன் குறைவானதாகும்.


**வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.111.7 பில்லியனாக அமைந்து 11.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** குறைந்தளவிலான இலாபங்கள் மோசமடைந்துசெல்லும் இலாபத்தன்மை குறிகாட்டிகளில் பிரதிபலித்தது. வரிக்கு முன்னரான சொத்துக்கள் மீதான திரும்பல்கள் 2018இன் 1.8 சதவீதத்திலிருந்து 2019இல் 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளையில் வரிக்குப் பின்னரான பங்குரிமை மீதான திரும்பல்கள் இதேகாலப்பகுதியில் 13.2 சதவீதத்திலிருந்து 10.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிற்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பு 2018இன் 50.0 சதவீதத்திலிருந்து 2019இல் 52.6 சதவீதத்திற்கு அதிகரித்த வினைத்திறன் விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது.

(ஆ) மூலதனம்: **2019ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுவதாகக் காணப்பட்டது.** வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 2018ஆம் ஆண்டின் 20.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 3.8 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் காணப்பட்ட குறைந்த கொடுகடன் வளர்ச்சியே பெருமளவிற்குக் காரணமாகும். இதன் விளைவாக, அடுக்கு 1 மூலதன விகிதம் இதே காலப்பகுதியில் 13.1 சதவீதத்திலிருந்து 13.0 சதவீதத்திற்கு சிறிதளவால் குறைவடைந்த போதும் வங்கித்தொழில் துறையின் மொத்த மூலதன விகிதம் 2018 இறுதியின் 16.2 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 16.5 சதவீதத்திற்கு மேம்பட்டது.

**நான்கு ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு படிப்படியானதொரு அடிப்படையில் மூலதனத்திற்காகக் கருத்திற்கொள்ளப்படுகின்ற இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் நடைமுறைப்படுத்தலிலிருந்தான முதல்நாள் தாக்கம், 2020இன் இறுதியளவில் வங்கிகள் இணங்கியொழுக வேண்டிய அதிகரிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்**

வரைபடம் 8.8

**வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.8

**வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்**

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2018 (அ) | 2019 (ஆ) | 2018 (அ) | 2019 (ஆ) |
| **அடுக்கு I மூலதனம்** | **826.3** | **927.9** | **100.0** | **100.0** |
| பங்கு மூலதனம் | 299.8 | 323.7 | 36.3 | 34.9 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 49.7 | 57.1 | 6.0 | 6.2 |
| பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம் | 310.8 | 364.1 | 37.6 | 39.2 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 203.3 | 225.8 | 24.6 | 24.3 |
| ஏனையவை | 7.1 | 6.9 | 0.9 | 0.7 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -44.4 | -49.7 | -5.4 | -5.3 |
| **அடுக்கு II மூலதனம்** | **211.9** | **253.2** | **100.0** | **100.0** |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் | 27.8 | 26.1 | 13.1 | 10.3 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 155.3 | 173.8 | 73.3 | 68.6 |
| பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 33.9 | 57.9 | 16.0 | 22.9 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -5.1 | -4.6 | -2.4 | -1.8 |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **1,038.2** | **1,181.1** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**மற்றும் பாசல் III மூலதனத் தேவைப்பாடுகள் என்பன 2019 இல் வங்கிகளை உயர்தர மூலதனத்தினை அதிகரிப்பதற்கு ஊக்கப்படுத்தியிருந்தன.** இதன் விளைவாக, வங்கிகள் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் புதிய பங்குகளை வழங்குதல் (ரூ.24.0 பில்லியன்), இலாபங்களைப் பிடித்துவைத்திருத்தல் (ரூ.53.3 பில்லியன்) மற்றும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதல் (ரூ.29.9 பில்லியன்) என்பனவற்றினூடாக அடுக்கு I மூலதனத்தினை உயர்த்தின. வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் ஆண்டின் போது 13.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதில் அடுக்கு I மூலதனம் 71.1 சதவீதத்திற்குப் பங்களித்தது. வங்கித்தொழில் துறையின் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம் 2019 இறுதியில் ரூ.1,181.1 பில்லியனாக விளங்கியது. இதில் அடுக்கு I மூலதனம் 78.6 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அடுக்கு II மூலதனம் ரூ.41.3 பில்லியனால் அதிகரித்தமைக்கு வங்கியின் ஒதுக்குகள் (ரூ.24.0 பில்லியன்) மற்றும் துணைப்படுகடன் மூலதனம் (ரூ.18.5 பில்லியன்) என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**பன்னாட்டு நியமங்களுடன் ஒத்ததாக இலங்கை மத்திய வங்கி 2019 திசெம்பர் 20ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய கட்டமைப்பை உள்நாட்டு முறையியல் சார் முக்கிய வங்கிகளுடனான கையாளுகைக்காக அறிமுகப்படுத்தியுள்ளது.** அதற்கமைவாக, நான்கு வங்கிகள் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்களின் 55 சதவீதத்தினை வகைகூறுவதாக புதிய கட்டமைப்பின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ் உள்நாட்டு முறையியல் சார் முக்கிய வங்கிகள் வேறுபட்ட 1.0 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதத்திற்கு இடையேயான வீச்சில் உயர் இழப்பீடுகளை ஏற்கத்தக்கவாறு மூலதனத்தைப் பேணவேண்டிய தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் உள்நாட்டு முறையியல்சார் முக்கிய வங்கிகளாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகள் இடர்நேர்வு முகாமைத்துவம், மேலாண்மை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீது உயர்ந்த மேற்பார்வை எதிர்பார்ப்புகள் மற்றும் நெருங்கிய மேற்பார்வைகளுக்கு கடப்பாடக்கப்படும்.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

**2019ஆம் ஆண்டுக்காலப்பகுதியில், மத்திய வங்கி வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடனும் வங்கிகளின் வியாபாரத்தினை விரிவாக்குவதற்கு வசதியளிக்கும் விதத்திலும் தொடர்ந்தும் முன்மதியுடைய கொள்கை வழிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை தொடர்ந்தும் அறிமுகப்படுத்தியது.** மேலும், மத்திய வங்கி 2019 சனவரி 01ஆம் நாளளவில் பாசல் III கட்டமைப்பின் முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் கூறுகளின் நடைமுறைப்படுத்தலை நிறைவு செய்திருப்பதுடன் இலங்கையின் கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 - இலங்கை வங்கித்தொழில் துறைக்கான நிதியியற் சாதனங்களை தொடர்ச்சியாகப் பின்பற்றுவதற்கு வசதிகளை வழங்கியது.

**பொருத்தமான முகாமைத்துவத் தேர்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் என்பனவற்றுடன் கூடிய வெளிநாட்டு அலுவலர்களுக்கு தொழில் வழங்குவதற்கான தேவையினைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள வெளிநாட்டு அலுவலர்களின் தொழில்நிலை தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.** இவ்வழிகாட்டல்கள் வெளிநாட்டு அலுவல்கள் என்ற பதத்திற்கான வரைவிலக்கணங்களை வழங்கியதுடன் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளுக்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளுக்கும் வெளிநாட்டு அலுவலர்களை நியமிப்பதற்கான தகைமையுடைய பிரமாணங்களை வழங்குகிறது.

**இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 இற்க்கு ஏற்ப நிதிக் கூற்றுக்களுக்கான புதிய வடிவமைப்புக்களை குறித்துரைத்தது.** உரிமம்பெற்ற வங்கிகளினால் வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்துகைகளையும் வெளியிடுவது தொடர்பான சுற்றறிக்கையொன்று புதிய இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 - நிதியியல் கருவிகளுடன் இணைந்து செல்லும் விதத்தல் நிதியியல் கூற்றுக்கள் வெளியிடப்பட வேண்டிய புதிய படிவங்களைக் குறித்துரைக்கின்ற விதத்தில், தற்போதுள்ள படிவங்களுக்குப் பதிலீடாக புதிய படிவங்கள் வெளியிடப்பட்டது.

**மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் வட்டி வீதக் கொள்கைளை வலுவிழக்கச் செய்வதனை தடுக்கும் பொருட்டு நிதியியல் சாதனங்கள்/ பணிகளின் பண்புகளை தவறாக சித்தரித்து வாடிக்கையாளர்களுக்கு பாதகங்களை விளைவிக்கக்கூடிய லொத்தர் திட்டங்கள்/ பரிசில் சீட்டிழுப்புக்கள் மற்றும் அன்பளிப்புத் திட்டங்கள் போன்றவற்றை மேற்கொள்வதிலிருந்து விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.** மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் வட்டி வீதக் கொள்கைளை வலுவிழக்கச் செய்யும் வகையில், உரிமம்பெற்ற வங்கிகளிடையே நியாயமற்ற போட்டிகளை உருவாக்குகின்ற வட்டி உழைக்கும் சேமிப்புக்களையும், தவணை வைப்புக்களையும் திரட்டுவதற்காக வட்டியல்லாதனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் திட்டங்களை அவை வழங்குவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், தொடர்பான சாதனங்கள், பணிகள் அல்லது சாதனங்கள், பணிகளின் வகைகளை அனைத்து வாடிக்கையாளர்களும் பெறுவதற்கும்

உற்பத்திகளின் தன்மையின் அடிப்படையில் ஏற்புடைத்தான சந்தை வட்டி வீதங்கள் வழங்கப்படுவதற்கும் அன்பளிப்புச் செலவுகளை வாடிக்கையாளர் மீது விதிக்கப்படக்கூடாது என்பதற்குட்பட்டும் வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மீது மேலதிக நியதிகளும் நிபந்தனைகளும் விதிக்கப்படக்கூடாது என்பதற்குட்பட்டும் வங்கிகள் பருவகால ஊக்குவிப்பு அன்பளிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம்.

**வர்த்தக நிலுவையில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் விதத்தில் 2018இல் விடுக்கப்பட்ட குறிப்பிட்ட ஒழுங்குவிதிகள் 2019 இல் மீளப்பெறப்பட்டன.** இதன்படி, சலுகை நியதிகளிலான அனுமதிப்பத்திரத்தின் கீழ் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதங்களைத் திறப்பதன் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. இதேபோன்று, உந்து ஊர்திகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளின் மீது தேசிய சேமிப்பு வங்கிக்கு விடுக்கப்பட்ட வங்கித்தொழில்சட்டப் பணிப்புரைகள் மீளப்பெறபபட்டன. மேலும், ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவண நியதிகளின் கீழ் இறக்குமதிகளின் மீது ஆரம்பத்தில் விடுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டு ஒத்தோபர் 11ஆம் நாளிடப்பட்ட ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகளுக்கெதிரான தேவைப்பாடுகள் தொடர்பான முன்னைய சுற்றறிக்கை 2019 மாச்சு 13ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மீளப்பெறப்பட்டன.

**பொருளாதாரத்தில் நிலவுகின்ற வைப்புக்கள் மற்றும் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்த மெய் வட்டி வீதங்களையும் நிதியியல் முறைமைகளுக்கூடாக நாணயக் கொள்கை பரிமாற்றல்களை வலுப்படுத்தி விரைவுபடுத்தும் தேவை கருதியும் சந்தை வீதங்களைக் குறைப்பதற்காக மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு இரண்டு முக்கிய ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன.** முதலில் உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் நிதிச் செலவுகளைக் குறைப்பதனை இயலச்செய்யும் விதத்தில் ரூபா வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாணய விதிச்சட்ட கட்டளையொன்று விடுக்கப்பட்டதன் மூலம் மெய்ப் பொருளாதாரத்தில் கொடுகடன் பாய்ச்சலை அதிகரிக்கச் செய்யும் விதத்தில் கடன்வழங்கல் மீதான வட்டி வீதம் குறைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன்வழங்கல் வீதங்களுக்கு அண்மைய கொள்கைத் தீர்மானங்களை வினைத்திறனுடன் ஊடுகடத்துவதனை அதிகரிக்கும் நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகள் குறிப்பிட்ட சில விலக்கல்களுடன் ஆண்டொன்றிற்கு 12.5 சதவீதம் கொண்ட ஒரே வீதம் என்பனவற்றிற்குட்பட்டு, 2019 ஏப்பிறல் 30இல் உள்ளவாறான ஏற்புடைத்தான வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில், 2019 ஒத்தோபர் 15ஆம் நாளன்று குறைந்தபட்சம் 200 அடிப்படைப் புள்ளிகளினால் ரூபாக் கடன்வழங்கல் வீதங்களைக் குறைக்க வேண்டுமென 2019ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நாணய விதிச்சட்ட கட்டளையொன்று விடுவிக்கப்பட்டதன் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதங்களை 2019 திசெம்பர் 27ஆம் நாளிலிருந்து ஆண்டொன்றிற்கு உயர்ந்தபட்ச வட்டி வீதமான 9.5 சதவீதத்திற்குட்பட்டு 2019 ஏப்பிறல் 26ஆம் நாளன்று மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அதன் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்துடன் ஒப்பிடுகையில் 250 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், கொடுகடன் அட்டை முற்பணங்கள் மற்றும் முன்கூட்டிய ஒழுங்குசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் என்பன மீது விதிக்கப்பட்ட ஆண்டொன்றிற்கு 28 சதவீதம் மற்றும் ஆண்டொன்றிற்கு 24 சதவீதம் கொண்ட உயர்ந்தபட்ச வட்டி வீத உச்சவரம்பு 2019 நவெம்பர் 1ஆம் நாளிலிருந்து விதிக்கப்பட்டது. தண்ட வட்டி வீதம் 2019 ஒத்தோபர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆண்டொன்றிற்கு 4.00 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட கட்டளையின் வழங்கலுடன் குறித்துரைக்கப்பட்ட ரூபா வைப்புக்களின் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பான 2019இன் 1ஆம் இலக்க நாணய விதிச் சட்டக் கட்டளை புறக்கீடு செய்யப்பட்டது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் பாய்ச்சலை அதிகரிக்கும் நோக்குடன் மத்திய வங்கி பாசல் III ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ், மூலதன மற்றும் திரவத்தன்மை நியமங்களின் நோக்கங்களுக்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அடையாளம் காண்பது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுத்தது.** இதன்படி, பாசல் தேவைப்பாடுகளின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அடையாளம் காணும் பிரமாணங்கள் திருத்தப்பட்டதுடன் வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வருடாந்த மொத்தப் புரள்வினை சரிபார்ப்பதற்காக பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகப் பொறிமுறையொன்றினை பின்பற்றுதல் வேண்டும். மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கான துணைநிரப்பியொன்று சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்கு மேலும் உதவியளிக்கும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்டது.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக சுற்றுலாக் கைத்தொழில் மீது ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு அத்தகைய சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளைக் கேட்டுக் கொள்கின்ற சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.** இதற்கிணங்க உரிமம்பெற்ற வங்கிகள் ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அல்லது சுற்றுலாவுடன் தொடர்பான பணிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள வேறு ஏதேனும் அதிகாரசபை/ முகவர்களுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு விடயங்களினதும் அடிப்படையில் கடன் இசைவுத்தாமதத்தினை உரிமம்பெற்ற வங்கிகள் வழங்கலாம். உரிமம்பெற்ற வங்கிகள் கடன் இசைவுத்தாமத காலப்பகுதியில் சேரவேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் தவணைக் கடன்களுக்கு சலுகை ரீதியான வட்டிகளுடன் மாற்றிக் கொள்ள வேண்டுமென உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. இதனை 2020 யூலையிலிருந்து அறவிடுதல் வேண்டும்.

**முதல் பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலாக/ குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்படும் மின்னியல், கலப்பு மற்றும் ஏனைய பதிவுசெய்யப்படாத மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டிற்காக கொடுகடன் வசதிகள் வழங்கப்படுவதற்குப் பிரயோகிக்கத்தக்க பெறுமதிக்கான உயர்ந்தபட்ச கடன் விகிதத்தினை திருத்துவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.** மேலும், சலுகை நியதிகள் தொடர்பான அனுமதிப்பத்திரத்தின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் பெறுமதிக்கான கடன் விகிதத்திற்காக பரிசீலிக்கப்படும் பெறுமதியினைத் தீர்மானிக்கும் பொழுது உந்து ஊர்திகளின் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக வாங்கும் பொருட்பட்டியலின் பெறுமதியினைப் பரிசீலனையில் கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், இப்பணிப்புரைகள் “என்ரபிறைஸ் சிறிலங்கா” நிகழ்ச்சித்திட்டத்தின் சலுகை அடிப்படையிலான கடன் திட்டமான “மினிரக்சி” இன் கீழ் பதிவுசெய்யப்படாத மின்னியலற்ற உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக பெறுமதிக்கான கடன் விகிதத்தினை 80 சதவீதத்திற்கு அதிகரிக்கும் விதத்தில் இப்பணிப்புரைகள் திருத்தப்பட்டன.

உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தை நடத்தைகளும் திறைசேரி தொழிற்பாடுகளும் முன்மதியுடைய விதத்தில் மேற்கொள்ளப்படுவதனையும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச் செல்வதனையும் உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கமைய, இது தொடர்பிலான வங்கித்தொழில் துறைச் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டதுடன் மற்றைய விடயங்கள் உட்பட சந்தை நடத்தை மற்றும் ஒழுக்கவியல் நடைமுறைகள், இரகசியத்தைப் பேணும் தேவைப்பாடுகள், வணிக சம்பாஷணைகளைப் பதிவுசெய்வதற்கான நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துக் கோட்பாடுகள், தொழில்சார் தன்மைகள் மற்றும் அறிவு மட்டம், பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமை தொடர்பான தடைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) பிரிவுகள் 38ஏ மற்றும் 76எச் என்பனவற்றின் ஏற்பாட்டு நியதிகளில் உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்காய்வுகளை நடத்துவதற்காக தகைமையுடைய கணக்காய்வாளர்களின் பட்டியலொன்றினைத் மத்திய வங்கி மீளாய்வு செய்ததுடன் 2021 சனவரி 01ஆம் திகதி தொடங்குகின்ற நிதியியல் ஆண்டிற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான தகைமைபெற்ற கணக்காய்வாளர்களின் புதிய பட்டியலொன்றினையும் தெரிவுசெய்துள்ளது.** தகைமையுடைய கணக்காய்வாளர்களைத் தெரிவுசெய்வதற்காக தற்போதுள்ள மதிப்பீட்டுப் பிரமாணங்கள் வங்கித்தொழில் துறைத் தோற்றப்பாடு, கணக்கீடு மற்றும் கணக்காய்வு தொழில்சார் நிபுணத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், பாசல் III கட்டமைப்பின் அறிமுகம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் -9: நிதியியல் சாதனங்கள் என்பனவற்றின் மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்திலும் கணக்காய்வு நிறுவனங்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் தடயவியல் கணக்காய்வுகளையும் தகவல் தொழில்நுட்பவியல் கணக்காய்வுகளையும் மேற்கொள்ளத்தக்க விதத்தில் அவை இயலாற்றலினையும் தகுதியினையும் கொண்டிருக்கும் விதத்திலும் வலுப்படுத்தப்பட்டது.

**உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ் மதிப்பீட்டாளர்களுக்கான தகைமையுடைய பிரமாணங்களை திருத்துகின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

**2019ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை நியமிப்பதற்கான பொருத்தம் மற்றும் தகுதி தொடர்பான மதிப்பீட்டுப் பிரமாணங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.** இதன்படி,

உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் விடுக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் பணிப்பாளர்களாகத் நியமிக்கப்படுவதற்கு, தெரிவுசெய்யப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கென முன்மொழியப்பட்ட ஆட்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள் மற்றும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கான அத்தகைய பணிப்பாளர்கள் தொடர்பான மீள்மதிப்பீடுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இது தொடர்பில் முன்னர் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள் இரத்துச்செய்யப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளில் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களாக குறிப்பிட்ட பதவிகளில் குறித்துரைப்பட்டவர்களுக்காக வங்கித்தொழில் சட்டத் தீர்மானமொன்று விடுக்கப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளிலுள்ள அத்தகைய அலுவலர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களும் அவர்களது பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்காக/மீள மதிப்பிடுவதற்காக மற்றும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர்/ காலாந்தர அடிப்படையில் மத்திய வங்கியினால் விரித்துரைக்கப்பட்ட படிவத்தில் தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இது தொடர்பில் முன்னர் விடுக்கப்பட்ட தீர்மானங்களும் சுற்றறிக்கைகளும் இரத்துச் செய்யப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் திருத்தப்பட்டு இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளராக அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டவர் இன்னொரு உரிமம்பெற்ற வங்கியில் நிறைவேற்றுப் பணிப்பாளராக அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமகிக்கப்படுவதற்கு காத்திருக்க வேண்டிய ஆறுமாத கால பொறுதிக் காலமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் உள்நாட்டு முறையியல் சார் முக்கிய வங்கிகளுக்கு ஏற்புடைத்தான மதிப்பீட்டுப் பிரமாணங்களைப் பரந்த ரீதியில் தளப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி அளவு, இடைத்தொடர்புத்தன்மை, பதிலீட்டுத்தன்மை மற்றும் சிக்கல்வாய்ந்த தன்மை போன்ற பல்புடைக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு முறையியல் சார் முக்கிய வங்கிகளை மதிப்பிடுவதற்கான புதிய கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தியது.** உள்நாட்டு முறையியல் சார் முக்கிய வங்கிகளாக தீர்மானிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் மூலதன மேலதிகக் கட்டணமாக மேலதிக உயர்ந்த இழப்பீட்டினைக் கவரும் தேவைப்பாட்டினை பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இது தொடர்பில் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக தீர்மானிக்கப்பட்ட நான்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டதுடன் அவர்கள் தொடர்பான உயர்ந்த இழப்பு ஈர்ப்புத்தன்மைத் தேவைப்பாடுகளை மேலும், பாசல் III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான பொதுவான பங்குரிமை அடுக்கு I இன் வடிவத்தில் மேலதிக உயர் இழப்பு ஈர்ப்புத்தன்மைத் தேவைப்பாடுகளை உள்ளடக்குகின்ற விதத்தில் திருத்தப்பட்டன.

**மோசமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் விதத்தில் நெருக்கடிகளுக்குத் தயாராகும் தன்மை மற்றும் வங்கிகளின் தாங்குதிறன் தன்மை என்பன உரிமம்பெற்ற வங்கிகளுக்கான அறவிடல் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலினூடாக மேலும் வலுப்படுத்தப்பட்டது.** இடர்ப்பாட்டிலுள்ள வங்கிகள் மீதான மோசமான தாக்கத்தினையும் நிதியியல் துறையின் மீது கசிந்து செல்லும் தாக்கத்தினையும் குறைக்கும் பொருட்டும் உரிமம்பெற்ற வங்கிகள் அறவிடல் திட்டங்களை நடைமுறைக்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படவுள்ளன. கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக இது தொடர்பில் ஆலோசனைப் பத்திரமொன்று வங்கிகளுக்கு விடுக்கப்பட்டதுடன் வங்கிகளினால் அறவிடல் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் எதிர்காலத்தில் விடுக்கப்படும்.

**உரிமம்பெற்ற வங்கிகளின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக் கட்டமைப்பிற்கு வசதியளிப்பதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட மேற்பார்வைத் தரமிடல் மாதிரியான வங்கி உறுதிப்பாட்டுத்தன்மை தரமிடல் குறிகாட்டியினை மத்திய வங்கி மேலும் மேம்படுத்தியது.** அனைத்து சாரா மாறிகளையும் மீளாய்வு செய்தமையின் மூலம் அனைத்து வங்கிகளிடையேயும் வங்கி உறுதிப்பாட்டுத்தன்மை தரமிடல் கட்டமைப்பு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கும் விதத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய மேற்பார்வைக் கட்டமைப்பொன்றினை உருவாக்கியுள்ளது. வங்கி உறுதிப்பாட்டுத் தன்மையினை நடைமுறைப்படுத்துவது உரிமம்பெற்ற வங்கிகளின் தோற்றம் பெற்றுவரும் அபிவிருத்திகள் மற்றும் உபாய மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதனூடாக நேரகாலத்துடனான தலையீடுகளையும் பொருத்தமான சீர்செய்யும் நடவடிக்கைகளையும் இயலுமைப்படுத்தும்.

**மாற்றமடைந்து வருகின்ற வங்கித்தொழில் இயக்கவாற்றல்கள், பன்னாட்டு நடைமுறைகள் மற்றும் பிராந்தியத்தின் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் புதிய வங்கித்தொழில் சட்டத்தினை வரைவதனை முன்னெடுத்ததன் மூலம் உரிமம்பெற்ற வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது.** உத்தேச புதிய

8

வங்கித்தொழில் சட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ள முக்கிய துறைகள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஒட்டுமொத்தப் பொறுப்பாண்மை, விகிதாசாரத்தன்மையினை வசதிப்படுத்துவதற்கான வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, கம்பனி ஆளுகையினை வலுப்படுத்தல், செறிவான மேற்பார்வை, தீர்மானங்கள், நாணயத் தண்டங்கள்/ குற்றப்பணங்களை விதித்தல், எதிர்பாராத இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக வங்கி கடமைகளை வெவ்வேறாக்குதல், இணைப்புக்களுக்கான ஏற்பாடுகளை வலுப்படுத்தல், கையேற்புக்கள் மற்றும் ஒன்றுசேர்த்தல், பாரிய வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனமாக்கல் மற்றும் வங்கிகளுக்கான நிதியியல் உடமைக் கம்பனிகளினது அமைப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது. புதிய வங்கித்தொழில் சட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள முக்கிய கருதுகோள்களை உள்ளடக்கிய ஆலோசனைப் பத்திரமொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் அவர்களது கருத்துக்களையும் அவதானிப்புக்களையும் பெறும் பொருட்டு வழங்கப்பட்டது. மத்திய வங்கி புதிய வங்கித்தொழில் சட்டத்தினை 2021இன் ஆரம்பத்தில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கிறது.

## 8.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

### உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை

**எதிர்மறையான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்கின்ற இலாபத்தன்மை மற்றும் அதிகரித்துச் செல்லும் செயற்படாக் கடன்கள் என்பனவற்றின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் செயலாற்றம் இவ்வாண்டுப்பகுதியில் மோசமடைந்தது.** இத்துறையின் மெதுவான போக்கிற்கு குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி, நிலவி வந்த அரசியல் நிலையற்ற தன்மை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினைத் தொடர்ந்து ஏற்பட்ட பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையற்றதன்மை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2019 திசெம்பர் இறுதியில் இத்துறையின் மொத்த சொத்துக்கள் ரூ.1,432.7 பில்லியன்களாக விளங்கி, இலங்கையின் நிதியியல் முறைமையின் 7.6 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. துறையினது மூலதனம் ஆரோக்கியமான மட்டமொன்றில் பேணப்பட்டமையும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டங்களுக்கும் மிக மேலே பேணப்பட்ட போதுமான திரவத்தன்மை தாங்கியிருப்பு காரணமாகவும் தாங்குதிறன் உடையதாகக் காணப்பட்டது. அதிகரித்த சொத்துக்கள் முக்கியமாக வைப்புக்கள் ஊடாக நிதியிடப்பட்டமையின் காரணமாக நிதியிடல் கலப்பில் வைப்புக்கள் முனைப்புப் பெற்றனவாக காணப்பட்ட வேளையில் துறையின் கடன்பாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தது காணப்பட்டன. மேற்பார்வைக் கரிசனைகளைக் கொண்ட கம்பனிகளின் மீது கணிசமான மீளாய்வுகளை மேற்கொண்டதன் மூலம் இத்துறையின் உறுதித்தன்மையினைப் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் முன்மதியுடைய வழிமுறைகளை மேற்கொண்டது.

### வியாபார விரிவாக்கம்

**அ) விரிவெல்லை: 2019 இறுதியில், இத்துறையானது, 42 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் 4 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் வாடிக்கையாளர்களுக்கு அதிகரித்த பணிகளை வழங்கியதன் மூலமும் கிளை வலையமைப்பினை விரிவாக்கியதன் மூலமும் நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்ததன் மூலமும் பொருளாதாரத்திற்கு பங்களித்திருக்கின்றன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் 1,432 கிளைகளும் 599 ஏனைய பணிநிலையங்களும்[1] காணப்பட்டதுடன் இவற்றில் 952 கிளைகள் (66 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே பரந்து காணப்பட்டன. 2019இல் பல உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நிதியியல் உட்சேர்த்தலுக்கு வசதியளிக்கும் விதத்தில் தொழில்நுட்ப அடிப்படையிலான சாதனங்களை/ பணிகளை அறிமுகப்படுத்தின.

**ஆ) சொத்துக்கள்: இவ்வாண்டுப்பகுதியில் துறையின் மொத்தச் சொத்துத் தளம் ரூ.1,432.7 பில்லியன்களாக விளங்கி 2018இன் தொடர்பான காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட 5.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதத்தினால் (ரூ.1.3 பில்லியன்) சிறிதளவிற்கு அதிகரித்தது.** துறையின் சொத்துத் தளம் முக்கியமாகக் கடன்களையும் முற்பணங்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் மொத்தச் சொத்துக்களில் இவை

1 ஏனைய பணிநிலையங்கள் எனப்படுபவை, பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளாத சேவை நிலையங்கள், அடகுபிடிக்கும் நிலையங்கள் மற்றும் சேகரிப்பு நிலையங்களாகும்.

அட்டவணை 8.9
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் மாகாண ரீதியான கிளைப் பரம்பல்

| மாகாணம் | 2018 முடிவில் | 2019 முடிவில்(அ) | ஆண்டுகாலப் பகுதியின் அசைவு |
|---|---|---|---|
| மத்திய | 158 | 160 | 2 |
| கிழக்கு | 110 | 117 | 7 |
| வட மத்திய | 98 | 99 | 1 |
| வட மேல் | 148 | 156 | 8 |
| வடக்கு | 84 | 89 | 5 |
| சப்ரகமுவ | 110 | 113 | 3 |
| தென் | 151 | 151 | 0 |
| ஊவா | 68 | 67 | -1 |
| மேல் | 446 | 480 | 34 |
| மொத்தம் | 1,373 | 1,432 | 59 |

(அ) தற்காலிகமானது — *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

அட்டவணை 8.10
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2018 | | 2019 (அ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) | 2018 | 2019 (அ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | 1,137.0 | 79.4 | 1,102.7 | 77.0 | 7.6 | -3.0 |
| முதலீடுகள் | 109.7 | 7.7 | 132.2 | 9.2 | -7.1 | 20.5 |
| ஏனையவை | 184.6 | 12.9 | 197.8 | 13.8 | 2.7 | 7.1 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த வைப்புக்கள் | 716.8 | 50.1 | 756.7 | 52.8 | 4.4 | 5.6 |
| மொத்த கடன் பெறுகைகள் | 463.8 | 32.4 | 405.6 | 28.3 | 17.1 | -12.6 |
| மூலதன கூறுகள் | 183.7 | 12.8 | 203.2 | 14.2 | 8.2 | 10.6 |
| ஏனையவை | 67.0 | 4.7 | 67.2 | 4.7 | -34.7 | 0.3 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **1,431.3** | **100.0** | **1,432.7** | **100.0** | **5.6** | **0.1** |


(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

77.0 சதவீதத்திற்கு வகைகூறின. நிதிக் குத்தகை முக்கிய பாகமொன்றிற்கு வகைகூறி மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 52.9 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தியதுடன் இவற்றிற்கு அடுத்ததாக ஏனைய பிணையிடப்பட்ட கடன்கள் விளங்கி 37.0 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின.

**2019 காலப்பகுதியில் துறையின் கடன்வழங்கல் நடவடிக்கைகள் மெதுவான போக்கொன்றிற்கான சமிக்ஞைகளைக் காட்டின.** இதற்கு உந்து ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான பேரண்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகள் மற்றும் உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகள், கடன்வழங்கல் மீது நிலவிய உயர்ந்த வட்டி வீதங்கள், பொருளாதாரம் மெதுவடைந்தமை, சனாதிபதித் தேர்தல் நடைபெற்றமை வரையிலான காலப்பகுதியில் காணப்பட்ட அரசியல் உறுதிப்பாடின்மையின் காரணமாக ஏற்பட்ட நம்பிக்கையற்ற தன்மையினால் தோன்றிய வியாபார மற்றும் பொருளாதாரத்தின் மெதுவடைமை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக ஏற்பட்ட எதிர்மறையான மனோபாவம் போன்றவை காரணமாகும். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,102.7 பில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் (ரூ.34.3 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. நிதிக் குத்தகைகள் (ரூ.3.9 பில்லியன்), பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூ.20.8 பில்லியன்) மற்றும் தவணை கொள்வனவுகள் (ரூ.4.3 பில்லியன்) போன்றன சுருக்கமடைந்த வேளையில், அடகுமுற்பணங்கள் ரூ.15.5 பில்லியனாலும் வைப்புக்களுக்கெதிரான கடன்கள் ரூ.0.6 பில்லியனாலும் அதிகரித்தன.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் முதலீடானது**

வரைபடம் 8.9
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சாதனங்கள் வாரியான திரண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

**பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள், மூலதனச் சந்தைப் படுகடன் சாதனங்கள், அரச பிணையங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.** முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2018இன் 7.1 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 20.5 சதவீதம் கொண்ட (ரூ.22.5 பில்லியன்) கூரிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. இதற்கு, பன்னிரண்டு மாதங்களுக்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட அரச பிணையங்களில் அதிகரித்த முதலீடுகள் (ரூ.9.0 பில்லியன்), பங்குகளில் முதலீடுகள், வர்த்தகப்படுத்தலுக்காகப் வைத்திருக்கப்பட்ட கூறுகள் மற்றும் படுகடன் பிணையங்கள் (ரூ.8.0 பில்லியன்) மற்றும் முதலீட்டுச் ஆதனங்களின் (ரூ.7.1 பில்லியன்) என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. காசு, வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான மீதிகள், வர்த்தகப்படுத்தல் இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன 2019இல் 7.1 சதவீதத்தினால் (ரூ.13.2 பில்லியன்) அதிகரித்தமைக்கு வங்கிகளிலும் நிதியியல் நிறுவனங்களிலும் வைப்புச் செய்யப்பட்ட அதிகரித்த தொகைகளே பெருமளவிற்குக் காரணமாகும்.

**இ) பொறுப்புக்கள்:** வாடிக்கையாளர் வைப்புக்கள், பொறுப்புக்களின் முக்கிய பாகமொன்றாக இன்னமும் விளங்கிவருவதுடன் அதிகரித்த சொத்துக்கள், இத்துறையின் மொத்தப் பொறுப்புக்களில் 52.8 சதவீதத்திற்கு வகைகூறிய வைப்புக்களினூடாக முக்கியமாக நிதியிடப்பட்டன. 2019இல் வைப்புக்களின் வளர்ச்சி 5.6 சதவீதத்தினால் (ரூ.39.9 பில்லியன்) துரிதமடைந்த அதேவேளையில் கடன்பாடுகள் 12.6 சதவீதத்தினால் (ரூ.58.2 பில்லியன்) வீழ்ச்சியடைந்தன.

**ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளின் அதிகரிப்புக்கள் காரணமாக மூலதன நிலைமை மேம்பட்டது.** துறையின் பங்குரிமை மூலதனம் 10.6 சதவீதத்தினால் அதிகரித்து (ரூ.19.5 பில்லியன்) 2019 இறுதியில் ரூ.203.2 பில்லியனாக விளங்கியமைக்கு 01.01.2020இல் குறைந்தபட்ச மைய

மூலதன தேவைப்பாடான ரூ.2.0 பில்லியனை பூர்த்திசெய்யும் விதத்தில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே பிரதானமாக வகைகூறியது. 2019 திசெம்பர் இறுதியில் துறையின் மைய மூலதனம் மற்றும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட மட்டமான 9.8 சதவீதம் மற்றும் 11.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 11.1 சதவீதமாகவும் 12.5 சதவீதமாகவும் காணப்பட்டன.

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் இடர்நேர்வுகள்

**அ) கொடுகடன் இடர்நேர்வு: மொத்த செயற்படா முற்பணங்களின் விகிதம் 2018 திசெம்பர் இறுதியின் அறிக்கையிடப்பட்ட 7.7 சதவீதத்திலிருந்து 2019 திசெம்பர் இறுதியில் 10.6 சதவீதத்திற்கு அதிகரித்து துறையின் சொத்துக்களினது தரம் மோசமடைந்தமைக்கான சமிக்ஞைகளைக் காட்டியது.** இதற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான தன்மை, துறையின் கடன் வழங்கல் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தமை மற்றும் படுகடன் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கசிந்த தாக்கம் என்பனவே முக்கிய காரணங்களாக அமைந்தன. 2019 திசெம்பர் இறுதியில் ஏற்பாட்டு காப்பு விகிதம் 2018 திசெம்பர் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 57.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 56.6 சதவீதத்திற்கு மெதுவாகத் தேய்வடைந்தது. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் நடைமுறைப்படுத்தலின் காரணமாக தேறிய செயற்படா முற்பணங்களின் விகிதம் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது இத்துறையின் கொடுகடன் இடர்நேர்வை மேலும் எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

அட்டவணை 8.11
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் % | |
|---|---|---|---|---|
| | 2018 | 2019 (அ) | 2018 | 2019 (அ) |
| தவணை வைப்புக்கள் | 681.3 | 722.2 | 95.1 | 95.5 |
| சேமிப்பு வைப்புக்கள் | 34.6 | 33.5 | 4.8 | 4.4 |
| வைப்புச் சான்றிதழ்கள் | 0.9 | 0.9 | 0.1 | 0.1 |
| மொத்த வைப்புக்கள் | 716.8 | 756.7 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி


**ஆ) சந்தை இடர்நேர்வு: இத்துறையானது தொடர்ந்தும் குறைந்தபட்ச பங்குரிமை இடர்நேர்வினைக் கொண்டிருக்கிறது.** எனினும், துறையானது வட்டி வீத இடர்நேர்வுக்கு பெருமளவிற்கு உள்ளாகுமென கருதப்படுகிறது.

**வட்டிவீத இடர்நேர்வு: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மீது விதிக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் நிதிகளின் கிரயங்கள் வீழ்ச்சியடைந்ததுடன் கடன்வழங்கல் வீதங்களும் புதிய கடன்கள் மற்றும் முற்பணங்களின் வழங்கலுடன் ஓரளவிற்கு குறைக்கப்பட்டது.** இதன்படி, துறையின் வட்டி வீத இடர்நேர்வு வட்டி உழைக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பட்டியலில் நிலவுகின்ற எதிர்மறையான பொருத்தப்பாடின்மையுடன் வீழ்ச்சியடைந்தது.

**பங்குரிமை இடர்நேர்வு: துறையின் பங்குரிமை இடர்நேர்வு இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாக காணப்பட்டமைக்கு விற்பனைக்கான வைத்திருக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளில் மூலதன வடிவங்களில் பங்குரிமை சந்தைகளுக்கான வெளிப்படுத்துகைகள் குறைவான ரூ.14.0 பில்லியனுக்குக் காணப்பட்டமையே காரணமாகும்.** இது, இத்துறையின் மொத்தச் சொத்துக்களில் 1.0 சதவீதம் மாத்திரமேயாகும்.

**இ) திரவத்தன்மை இடர்நேர்வு: துறையானது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டங்களுக்கு மிக மேலாக போதுமான**


வரைபடம் 8.10
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படாகடன்கள் மற்றும் ஏற்பாட்டுக்காப்பு




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

8

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள்



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**திரவத்தன்மை தாங்கியிருப்புக்களைப் பேணியது.** 2019 திசெம்பர் இறுதியில் இத்துறையில் கிடைக்கத்தக்கதாகவிருந்த ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள் ரூ.89.8 பில்லியன் கொண்ட குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கெதிராக ரூ.41.6 பில்லியன் கொண்ட மிகையொன்றினை எடுத்துக்காட்டியது. 2019 திசெம்பர் இறுதியில் திரவத்தன்மை விகிதம் (வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் மீதான திரவச் சொத்துக்கள்) 2018 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## இலாபத்தன்மை மற்றும் மூலதன வளங்கள்

அ) இலாபத்தன்மை: **ஆண்டு காலப்பகுதியில் துறையின் தேறிய வட்டி வருமானம் ரூ.117.4 பில்லியனுக்கு 7.9 சதவீதத்தினால் (ரூ8.6 பில்லியன்) அதிகரித்தது.** இதற்கு 7.6 சதவீதத்தினால் (ரூ.18.3 பில்லியன்) அதிகரித்த வட்டி வருமானத்தினதும் 7.4 சதவீதத்தினால் (ரூ.9.8 பில்லியன்) அதிகரித்த வட்டிச் செலவினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். துறையின் தேறிய வட்டி வருமானம் (சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வட்டி வருமானம்) 2018இன் 7.4 சதவீதத்திலிருந்து 2019இல் 7.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு, அதிகரித்த தேறிய வட்டி வருமானத்தினதும் (7.9 சதவீதம்) அதிகரித்த (மொத்த) சராசரிச் சொத்துக்களினதும் (4.3 சதவீதம்) இணைந்த தாக்கமே காரணமாகும்.

வட்டியல்லா வருமானம் 3.4 சதவீதத்தினால் (ரூ.1.3 பில்லியன்) அதிகரித்தமைக்கு செலுத்தத் தவறியமைக்கான விதிப்புக்கள் மற்றும் ஏனைய பணிக் கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்த வேளையில், **வட்டியல்லா செலவினங்கள் 15.5 சதவீதத்தினால் அதிகரித்து**

அட்டவணை 8.12
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்


| விடயம் | 2018 | | 2019 (அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக | தொகை (ரூ.பில்) | சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக |
| வட்டி வருமானம் | 241.5 | 16.5 | 259.8 | 17.0 |
| வட்டிச் செலவினம் | 132.6 | 9.1 | 142.4 | 9.3 |
| **தேறிய வட்டி வருமானம்** | **108.8** | **7.4** | **117.4** | **7.7** |
| வட்டியல்லா வருமானம் | 38.1 | 2.6 | 39.4 | 2.6 |
| வட்டியல்லா செலவினம் | 81.2 | 5.5 | 93.8 | 6.1 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய)) | 25.9 | 1.8 | 30.2 | 2.0 |
| **வரிக்கு முன்னதான இலாபம்** | **39.7** | **2.7** | **32.8** | **2.2** |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **21.4** | **1.5** | **14.5** | **1.0** |

(அ) தற்காலிகமானது　　மூலம் : இலங்கை மத்திய வங்கி

**(ரூ.12.6 பில்லியன்) துறையின் இலாபத்தன்மையின் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தின.** வட்டியல்லாச் செலவினங்கள் அதிகரித்தமைக்கு அதிகரித்த நிர்வாகச் செலவினங்கள் (ரூ.4.1 பில்லியன்), மதிப்பீடு/மீள்உடைமையிலிருந்த விடயங்கள் விற்கப்பட்டமையின் மீதான இழப்பு (ரூ.2.7 பில்லியன்), அலுவலர் செலவுகள் (ரூ.2.5 பில்லியன்) மற்றும் ஏனைய செலவினங்கள் (ரூ.1.3 பில்லியன்) என்பனவே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப்பகுதியில் செயற்படாச் சொத்துக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கடன் இழப்பு ஏற்பாடுகள் ரூ30.2 பில்லியனாக இருந்தன. இது, 2018இல் செய்யப்பட்ட ஒதுக்குடன் ஒப்பிடுகையில் 16.2 சதவீத்தினால் (ரூ.4.2 பில்லியன்) அதிகரித்தது.

**இத்துறையானது, வரிக்குப் பின்னராக இலாபமாக ரூ.14.5 பில்லியன்களைப் பெற்றதுடன் இது, 2018ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட இலாபங்களுடன் ஒப்பிடுகையில் 31.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியமைக்கு அதிகரித்த வட்டியல்லா செலவினங்களும் உயர்ந்த கடன் இழப்பு ஏற்பாடுகளும் முக்கிய காரணங்களாக அமைந்தன.** சொத்துக்கள் மீதான வருவாயும் இவ்வாண்டுப்பகுதியில் 56 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்து 2.2 சதவீதம் கொண்ட விகிதமொன்றினைப்

வரைபடம் 8.12
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

8


பதிவுசெய்ததுடன் பங்குரிமை மீதான வருவாய் 463 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்து 7.5 சதவீதம் கொண்ட விகிதமொன்றினைப் பதிவுசெய்தது. இது துறையின் இலாபத்தன்மை தொடர்பில் அழுத்தம் காணப்படுவதற்கான சமிக்ஞைகளைக் காட்டுகின்றது.

**ஆ) மூலதனம்: ஆண்டு காலப்பகுதியில் துறையானது, மூலதனத்தினை ஆரோக்கியமான மட்டமொன்றில் பேணியதன் மூலம் தொடர்ந்தும் தாங்குதிறன் தன்மையொன்றினைக் கொண்டிருந்தது.** 2019இல் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன மட்டங்கள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட தொகைகளுடன் ஒப்பிடுகையில் ரூ.22.3 பில்லியனால் மேம்பட்டமைக்கு இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு 2020 சனவரி 01 இல் ரூ.2.0 பில்லியனுக்கு அதிகரித்தமையே காரணமாகும். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அவற்றின் மைய மூலதனத்தினை 2021 சனவரி 01 அன்று ரூ.2.5 பில்லியனுக்கு அதிகரிக்க வேண்டியிருக்கும். ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் அடுக்கு I, அடுக்கு II மூலதனத் தேவைப்பாடுகளை உள்ளடக்கியிருந்ததுடன் இதில் அடுக்கு I மூலதனம் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் 95.1 சதவீதத்திற்குப் பங்களித்தது. அடுக்கு 1 மூலதனம் முக்கியமாக வழங்கப்பட்ட பங்கு மூலதனம், நியதி ஒதுக்கு நிதியம் மற்றும் பிரசுரிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட இலாபங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

**2019இல் துறையின் மைய மூலதனம் மற்றும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதம் முறையே 11.1 சதவீதமாகவும் 12.5 சதவீதமாகவும் விளங்கி 2018இல் பதிவுசெய்யப்பட்ட விகிதங்களிலிருந்து 1.3 சதவீத்தினாலும் 1.4 சதவீதத்தினாலும் அதிகரிப்பை காட்டின.** ரூ.100 பில்லியனுக்கும் குறைவான சொத்துக்களுடன் கூடிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் 2019 யூலை 01ஆம் நாளிலிருந்து 6.5 சதவீதம் கொண்ட அடுக்கு I மூலதன போதுமைத் தன்மையினையும் 10.5 சதவீதம் கொண்ட மொத்த மூலதன விகிதத்தினையும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டவிடத்து, ரூ100 பில்லியனுக்கும் அதற்குக் கூடுதலானதுமான சொத்துக்களைக் கொண்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் 7.0 சதவீதம் கொண்ட அடுக்கு I மூலதனப் போதுமை விகிதத்தினையும் 11.0 சதவீதம் கொண்ட மொத்த மூலதன விகிதத்தினையும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

வரைபடம் 8.13

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.13

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2018 (அ) | 2019 (ஆ) | 2018 (அ) | 2019 (ஆ) |
| **அடுக்கு I : மைய மூலதனம்** | **155.4** | **173.2** | **100.0** | **100.0** |
| குறித்துரைக்கப்பட்ட மூலதனம் | 71.8 | 82.4 | 46.2 | 47.6 |
| திரளாத மற்றும் மீட்க முடியாத முன்னுரிமைப் பங்குகள் | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 22.3 | 26.8 | 14.4 | 15.5 |
| பொது மற்றும் ஏனைய கட்டற்ற ஒதுக்குகள் | 30.6 | 31.7 | 19.7 | 18.3 |
| ஏனையவை | 30.6 | 32.2 | 19.7 | 18.6 |
| **அடுக்கு II : துணை மூலதனம்** | **22.5** | **25.5** | **100.0** | **100.0** |
| தகுதியுடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 2.3 | 3.2 | 10.3 | 12.6 |
| பொது ஏற்பாடுகள் | 5.8 | 6.6 | 26.0 | 25.9 |
| அடுக்கு II மூலதனமாக தகுதியுடைய சாதனங்கள் | 14.4 | 15.7 | 64.2 | 61.7 |
| ஏனையவை | -0.1 | -0.0 | -0.5 | -0.2 |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள்** | **-17.9** | **-16.4** | | |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **160.0** | **182.2** | | |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஒரு சில உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் அத்துடன்/ அல்லது குறைந்தபட்ச மூலதன போதுமாந்தன்மை விகிதத்திற்கும் இணங்கியொழுகவில்லை. நிதியியல் நிலைமைகள் மேலும் மோசமடைவதனைத் தவிர்ப்பதற்கும் அத்தகைய நிறுவனங்களின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப்பாதுகாப்பதற்குமாக பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

2019ஆம் ஆண்டு முழுவதும், இலங்கை மத்திய வங்கி, துறையின் உறுதிப்பாட்டினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடனும் இத்துறை தொடர்பான வாடிக்கையாளர் நம்பிக்கையினை அதிகரிக்கும் பொருட்டும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை

**மேலும் வலுப்படுத்துவதற்காக பல கொள்கை வழிமுறைகளை முன்னெடுத்ததுடன் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்தியது.** பொருளாதாரத்தில் அவதானிக்கப்பட்ட வைப்புக்கள் மீதான உயர்ந்த உண்மை வட்டி வீதங்களையும் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்ந்த வட்டி வீதங்களையும் கருத்திற்கொண்டும் நிதியியல் முறைமைகளுக்கூடாக நாணயக் கொள்கைப் பரிமாற்றங்களை வலுப்படுத்தி விரைவுபடுத்தும் அவசியத்தினையும் பரிசீலனையில் கொண்டும் கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்களை குறைத்து அதன் மூலம் உண்மைப் பொருளாதாரத்திற்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்குமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்களின் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அறிமுகப்படுத்துவதற்காக பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. ஆண்டின் பிற்பகுதியில் கம்பனிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலனையில் கொண்டு சந்தையில் போட்டித்தன்மையைப் பேணுவதற்கும் இலாபத்தன்மையில் காணப்படும் தாக்கங்களைக் குறைப்பதற்குமாக வட்டி வீதங்களை சிறிதளவு அதிகரிப்பதற்கும் இப்பணிப்புரையானது திருத்தப்பட்டது.

**இலகு பார ஊர்திகளுக்கான உயர் பெறுமதிக்கான கடன் விகிதங்களை அனுமதிப்பதன் மூலம் 2019ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட பெறுமதிக்கான கடன் விகிதப் பணிப்புரைகள் திருத்தப்பட்டன.** இலகு பார ஊர்திகள் தொடர்பிலான முன்னைய 70 சதவீதம் கொண்ட பெறுமதிக்கான கடன் விகிதத்தினை 90 சதவீதத்திற்கு அதிகரிக்கும் விதத்தில் திருத்தப்பட்டது.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான தற்போதுள்ள பணிப்புரை திருத்தப்பட்டது.** மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் இற்றைப்படுத்தப்பட்டதுடன் சொத்துக்களின் வேறுபட்ட வகைகளுக்கான மதிப்பீடுகளின் கால இடைவெளி திருத்தப்பட்டது. இதற்கமைவாக, செயற்படாதிருக்கும் கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் எதிராக பிணையமாகப் பெறப்பட்டு வதிவிட நோக்கங்களுக்காக கடன்பாட்டாளர்களினால் பயன்படுத்தப்படும் வதிவிடச் சொத்துகளின் மதிப்பீடு ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன் மற்றைய அனைத்து கொடுகடன் வசதிகளையும் பொறுத்தவரை நான்கு ஆண்டு கால இடைவெளிக்கும் குறைவான காலப்பகுதிக்கொரு தடவை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். செயற்படுகின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களைப் பிணையமாகக் கொண்டு பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு ஆரம்ப வழங்கல் நேரத்திலும் அதன் பின்னர் கொடுகடன் வசதிகள் அதிகரிக்கப்படும் நேரத்திலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் வியாபாரத்தினை கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடம் என்பனவற்றின் மதிப்பீடு, இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16: சொத்து, பொறி மற்றும் கருவிகள் என்பனவற்றிற்கிணங்கவும் இவை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முதலீடொன்றாக கொள்வனவு செய்யப்பட்டு அல்லது கையேற்கப்பட்டிருக்குமாயின் அவை இலங்கை கணக்கீட்டு நியமம் 40: முதலீட்டு ஆதனம் என்பதற்கிணங்க, உள்ளகக் கொள்கைகள் அல்லது சந்தைப் பெறுமதியில் ஏதேனும் குறிப்பிடத்தக்க தளம்பல் மாற்றங்களைப் பொறுத்து அளவிடப்பட்டு வெளிப்படுத்தப்படல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக சுற்றுலாத் துறை மீது ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைக் குறைக்கும் நோக்குடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.** இது, சுற்றுலாத்துறைக்கு பணிகளை வழங்குகின்ற இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது வேறு ஏதேனும் அதிகார சபை/ முகவருடன் பதிவுசெய்யப்பட்டிருக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடன் இசைவுத்தாமதமொன்றை வழங்குவதற்கு அவர்களை இயலுமைப்படுத்தும். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பில் இச்சுற்றறிக்கையினைத் தொடர்ந்து கூடியளவு தெளிவுபடுத்தல்களையும் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் குறித்துரைக்கப்பட்ட அறிக்கைப்படுத்தல் தேவைப்பாடுகளையும் கொண்ட பல விளக்கக் குறிப்புக்கள் விடுக்கப்பட்டன.

**இலக்கம் 2125/58 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியின் கீழ், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று முடிவுறுத்தப்படுகையில் முன்னுரிமைக் கோரல்கள் மீதான ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.** ஒடுக்கிவிடுபவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் சொத்துக்களை அதன் காலஅளவிற்கேற்ப செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் கோரல்களை ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட முன்னுரிமைக் கட்டளைகளுக்கேற்ப செலுத்துதல் வேண்டும். ஒழுங்குவிதிகளுக்கிணங்க முன்னுரிமைக் கோரல்களைச் செலுத்தியதன் பின்னர் மாத்திரமே ஒடுக்கிவிடுபவர் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏனைய அனைத்துக் கோரல்களையும் திருப்திப்படுத்துகின்ற விதத்தில் கம்பனியின் சொத்துக்களை பயன்படுத்தல் வேண்டும்.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலுள்ள பங்குகளினது சொத்துரிமையினைப் பன்முகப்படுத்தும் குறிக்கோளுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு சொத்துரிமை வரையறையொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ஆலோசனைப் பத்திரமொன்று விடுக்கப்பட்டது.** கடந்த ஒரு சில ஆண்டுகளாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் சந்தை நுழைவு மற்றும் நாட்டின் நிதியியல் வசதிகளுக்கு உட்படுத்தல் தொடர்பில் அவற்றின் பங்களிப்பு ஆகிய நியதிகளில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் முக்கியத்துவத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருக்கிறது. எனினும், பல்வேறுபட்ட காரணிகளின் காரணமாக பல உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கடந்த ஒரு சில தசாப்தங்களாக ஒன்றில் முறிவடைந்திருக்கின்ற, அல்லது, பெரும்பாலும் வங்குரோத்து நிலையொன்றிற்கு ஆளாகியிருக்கின்ற சம்பவங்கள் காணப்படுகின்றன. இத்துறையின் சிறந்த கம்பனி ஆளுகை நடைமுறைகளை வலுப்படுத்துகின்ற செயன்முறையின் ஒரு பகுதியாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பில் சொத்துரிமை வரையறைகளை அறிமுகப்படுத்துவது குறிப்பிடத்தக்களவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாவது ஆலோசனைப் பத்திரம் தொடர்பில் ஆர்வலர்களிடமிருந்து பெறப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டின் பிற்பகுதியில் இரண்டாவது ஆலோசனைப் பத்திரமொன்று அவதானிப்புகளுக்காக விடுக்கப்பட்டது.

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் ஆலோசனைப் பத்திரமொன்று விடுக்கப்பட்டது.** கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான தற்போதுள்ள பணிப்புரைகள் காலத்திற்கொவ்வாதனவாகக் காணப்படுவதுடன் அவை குத்தகைக்குவிடல் மற்றும் நிதிக் கம்பனிகள் துறையில் செயற்படாக் கடன்கள் தொடர்பான நடவடிக்கைகளில் பிறழ்வுகளை உருவாக்கியிருக்கின்றன. கொடுகடன் இடர்நேர்வுப் பணிப்புரைகள் நிதியியல் தொழில்துறையில் பன்னாட்டு ரீதியாகவும் உள்நாட்டு ரீதியாகவும் இடம்பெற்றுவரும் அபிவிருத்திகளுடன் இசைந்துசெல்லும் விதத்திலும் வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவின் மிகச் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடனும் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய நியமங்களை உருவாக்குகின்ற சபைகளுடன் இணங்கிச்செல்லும் விதத்திலும் ஒழுங்குமுறை மாற்றங்களைச் செய்வது அவசியமாகும். இதற்கிடையில் நிதியியல் முறைமையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை பேணுவதற்காக, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியானது சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய சட்ட அமுலாக்க முகவர்களின் உதவியுடன் அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்கள், தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் நிதித் துறையில் காணப்படும் ஏனைய பிரச்சனைகள் தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகளை தொடர்ந்து நடாத்தி வந்தது.

## அரச பிணையங்களின் முதனிலை வணிகர்கள்

**தற்பொழுது 7 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 8 கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.** அவர்களுள் பேர்பெட்சுவல் றெசரீஸ் லிமிடெட் மற்றும் பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி என்பன முதனிலை வணிகர் வியாபாரத்தினையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்து (பேர்பெட்சுவல் 2017 யூலை 06 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்திலும் பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி 2017 ஓகத்து 15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்திலும்) இடை நிறுத்தப்பட்டுள்ளன. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி 2017 யூலை 24 இலிருந்து அரச பிணையங்களில் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பதிலிருந்தும் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்பொழுது 6 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 6 முதனிலை வணிகர் கம்பனிகளும் அரச பிணையங்கள் சந்தையில் முதனிலை வணிகர் தொழில்துறையில் ஈடுபட்டு வருகின்றன.

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

**சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்:** 2019இல் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.77.5 பில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வர்த்தகப்படுத்தல், விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்களின் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் 2019 இறுதியில் ரூ.69.3 பில்லியனாக விளங்கி, இவ்வாண்டுப்பகுதியில் 9.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இம்மாற்றத்திற்கு வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் மற்றும் அரச பிணையங்களின் விற்பனைக்கு கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியல் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அமைந்தது. வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2018 இறுதியளவில் பதிவுசெய்யப்பட்ட ரூ.62.8 பில்லியனிலிருந்து 2019 இறுதியில் ரூ.57.5 பில்லியனுக்கும், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் 2018 இறுதியின் ரூ.8.7 பில்லியனிலிருந்து 2019 இறுதியில் ரூ.8.6 பில்லியனுக்கும், விற்பனைக்காக கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியல் 2018 இறுதியின் ரூ.5.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.3.3 பில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தன.

**இலாபத்தன்மை:** 2019 காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் வரிக்குப் பின்னரான இலாபம் 2018ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.0.2 பில்லியனுக்கெதிராக ரூ.3.8 பில்லியனாக விளங்கி, சந்தை கணிசமானளவிற்கு முன்னேற்றம் கண்டமையினை எடுத்துக்காட்டியது. 2018இல் அரச பிணையங்களிலிருந்தான மீள் மதிப்பீட்டு இழப்புக்களுக்கெதிராக 2019இல் மூலதன இலாபங்களில் கணிசமான அதிகரிப்புக்களும் பாரிய மீள் மதிப்பீட்டு இலாபங்களும் பதிவுசெய்யப்பட்டமையானது இலாபங்களின் அதிகரிப்பிற்கு பெருமளவிற்கு பங்களித்தது. இதன் விளைவாக, முதனிலை வணிகர்களுக்கான சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் என்பன 2018இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 0.02 சதவீதம் மற்றும் 2.0 சதவீதம் கொண்ட எதிர்க்கணியங்களிலிருந்து 2019 இறுதியில் முறையே 6.0 சதவீதத்திற்கும் 28.5 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

**மூலதனம்:** முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை மூலதனம் 31.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியின் திரண்ட இலாபங்களே பெருமளவிற்குக் காரணமாகும். முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்திற்கு மேலாக காணப்பட்ட அதேவேளையில் இவ்விகிதம் 2018 இறுதியில் காணப்பட்ட 21.3 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 27.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## இடர்நேர்விற்கான வெளிப்படுத்துகை

**சந்தை இடர்நேர்வு:** முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் விகிதம் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடையாமல் இருந்ததுடன் 2018 இறுதியின் 81.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 82.9 சதவீதத்தில் பதிவுசெய்யப்பட்டு இத்தொழில் துறையின் சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

**திரவத்தன்மை இடர்நேர்வு:** தனியான முதனிலை வணிகர் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை வீழ்ச்சியடைந்தமைக்கு, 2019 இறுதியில் இத்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டில் காணப்பட்ட ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மை 2018 இறுதியில் ரூ.36.3 பில்லியன் அல்லது ஓரிரவுப் பொறுப்புக்களின் 91.9 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் ரூ.11.1 பில்லியனுக்கு அல்லது 72.1 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. முதனிலை வணிகர்கள் வசமிருந்த இடர்நேர்வற்ற அரச பிணையங்கள் பெருமளவில் இருந்தமையைக் கருத்திற்கொள்கையில் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு நிதிகளைப் பெற்றுக்கொள்ள அதனை பிணையமாகப் பயன்படுத்த முடிவதனையும் கருத்திற்கொள்கையில் திரவத்தன்மை பிரச்சனையினை எதிர்நோக்குகின்ற ஒரு முதனிலை வணிகர் கம்பனி தவிர மற்றைய முதனிலை வணிகர் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் ஏதேனும் திரவத்தன்மை இடைவெளியினை நிரப்புவதற்கு எதிர்பாராத துணைநில் நிதியிடல் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றனர்.

## சந்தை பங்குபற்றல்

**முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகள்:** திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பில் முதலாந்தரச் சந்தை ஏலங்களில் முதனிலை வணிகர்களின் பங்கேற்பு கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது.

அட்டவணை 8.14
முதனிலை வணிகர் கம்பனிகளின் செயலாற்றம்

ரூபா பில்லியன்

| விடயம் | 2018 | 2019 (அ) | ஆண்டு வளர்ச்சி வீதம் (%) 2018 | ஆண்டு வளர்ச்சி வீதம் (%) 2019 (அ) |
|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 83.6 | 77.5 | 8.1 | -7.2 |
| மொத்தச் முதலீட்டுப்பட்டியல் | 76.7 | 69.3 | 22.6 | -9.6 |
| வணிகப்படுத்துகின்ற பிணையங்கள் | 62.8 | 57.5 | 23.3 | -8.5 |
| முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படுபவை | 8.7 | 8.6 | 0.7 | -1.7 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | 5.2 | 3.3 | 74.2 | -36.4 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 4.3 | 6.0 | -67.6 | 39.4 |
| பங்குரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 83.6 | 77.5 | 8.1 | -7.2 |
| மொத்த மூலதனம் | 11.5 | 15.2 | -50.1 | 31.5 |
| மீள்கொள்வனவு | 68.7 | 60.3 | 30.7 | -12.2 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 0.0 | 4.8 | -100.4 | 34,968 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 0.2 | 3.8 | -92.2 | 1,622.1 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | 0.0 | 6.0 | -4.2 | 6.0 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) | 2.0 | 28.5 | -10.9 | 26.5 |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 21.3 | 27.6 | -34.6 | 6.3 |
| முடுக்கி தடவைகள் | 6.0 | 4.0 | 161.9 | -33.2 |
| வணிகப்படுத்தல்கள் | 7965.5 | 8674.5 | -4.4 | 8.9 |
| முதலாந்தரச் சந்தை வணிகப்படுத்தல்கள் | 436.3 | 566.1 | 3.0 | 29.8 |
| இரண்டாந்தரச் சந்தை வணிகப்படுத்தல்கள் | 7,529.9 | 8,108.4 | -5.8 | 7.7 |
| உடனடிக் கொள்வனவுகள் | 456.9 | 629.6 | 2.9 | 37.8 |
| உடனடி விற்பனைகள் | 826.0 | 1,016.0 | 2.4 | 23.0 |
| மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு | 6,246.3 | 6,462.7 | -7.3 | 3.5 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: 1. அனுமதியளிக்கப்பட்ட வணிகவங்கிகளின் முதன்மை வணிகர் அலகுகளின் செயலாற்றம் வங்கித்தொழில் துறையின் செயலாற்றத்தினுள் உள்ளடக்கப்பட்டு உள்ளமையால் அவை நீங்கலாக
2. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் (பிஎல்சி) இனது நிதியியல் தரவுகள் நீங்கலாக
3. பெப்பசுவல் ரெசறீஸ் லிமிடெட் இனது நிதிதரவுகள் நீங்கலாக

8

## சிறப்புக்குறிப்பு 12
## அரச பிணையங்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான சந்தை நடைமுறைகளை நியமப்படுத்தல்

**பின்னணி**

அரச பிணையங்கள் என்பது அரசாங்கம் அதன் செலவினங்களுக்கு நிதியிடுவதற்கான பணத்தினைக் கடன்படுவதற்காக அதனால் வழங்கப்படுகின்ற படுகடன் சாதனங்களாகும். இலங்கையின் பின்னணியில் மிகப் பொதுவாக, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களாக திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் காணப்படுகின்றன. திறைசேரி உண்டியல்கள் உயர்ந்தபட்சம் ஓராண்டு காலப்பகுதிக்கு வழங்கப்படுகையில் திறைசேரி முறிகள் ஓராண்டிற்கு மேலாகவும் பொதுவாக 30 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கும் வழங்கப்படுகின்றன. அரச படுகடனின் சட்ட ரீதியான முகாமையாளர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கியிடம் முறையே 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் வழங்கி முகாமை செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

2004 வரை திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் பத்திர வடிவில், அதாவது, அச்சிடப்பட்ட சான்றிதழ்களாக வழங்கப்பட்டன. 2004இல் சட்டவாக்கங்களுக்குச் செய்யப்பட்ட அவசியமான திருத்தங்களின் வாயிலாக வெளிநின்ற திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் பத்திரங்களற்ற படிவத்திற்கு மாற்றப்பட்டு புதிய திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் சொத்துரிமையினைப் பதிவுசெய்வதற்காக மத்திய வைப்பக முறைமை என அழைக்கப்படும் டிஜிட்டல் வைப்பகமொன்று மத்திய வங்கியினால் பேணப்பட்டு வருகிறது.

உத்தம செலவில் அரசாங்கத்திற்கான நிதி மூலங்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அரச பிணையங்கள் சந்தையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடு இன்றியமையாத முற்தேவைப்பாடாகக் காணப்படுகிறது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீதான சந்தை நடைமுறைகளை மேம்படுத்தி நியமப்படுத்துவதன் மூலம் அரச பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வது இதன் இலக்கினை அடைவதற்கு மிக முக்கியமானதொரு அம்சமாகும்.

**திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் என்பது திறைசேரி உண்டியலை அல்லது திறைசேரி முறியினைச் சொந்தமாக வைத்திருக்கும் ஆளொருவர் குறிப்பிட்ட விலையொன்றில் மற்றொரு ஆளுக்கு இணங்கப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் இணங்கப்பட்ட விலையில் மீண்டும் வாங்கிக் கொள்ள வேண்டுமென்ற உடன்படிக்கையுடன் செய்து கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கலொன்றாகும். உண்மையில் பிணையத்தினைச் சொந்தமாக வைத்திருப்பவர் அப்பிணையினை பிணையுறுதியாகப் பயன்படுத்தி நிதியினைக் கடன்படுவதேயாகும். பிணையத்தின் விற்கும் விலைக்கும் மீண்டும் வாங்கும் விலைக்குமிடையிலான வேறுபாடு என்பது கடன்பட்ட நிதிக்கான வட்டிச் செலவாகும். மறுபுறத்தில், நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் என்பது திறைசேரி உண்டியலினால் அல்லது திறைசேரி முறியொன்றினால் பிணையுறுதி வழங்கப்பட்டு கடன் வழங்குகின்ற கொடுக்கல்வாங்கலாகும். அதாவது மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலுக்கு எதிர்மாறானதாகும்.

**பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களின் வணிகர் நேரடி பங்கேற்பாளரின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்ட மற்றும் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டப் பணிப்புரை**

பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் 2019.12.20ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கி பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மீதான மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை அத்தகைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள்[1] எத்தகைய முறையில் மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதனை விரித்துரைக்கின்ற பணிப்புரைகளை விடுத்தது. இப்பணிப்புரைகள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படை அளவுகளை நியமப்படுத்துவதனை நோக்காகக் கொண்டிருந்த வேளையில் காத்திரமான சந்தைப்படுத்தலுக்கான வசதிகளையும் வழங்கியதுடன் வெளிப்படையான முறையில் குறிப்பிட்ட தரப்பினர்கள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதனையும் இயலுமைப்படுத்தியது. முதனிலை வணிகரொருவர் முறிவடைந்த போதும் மற்றைய வணிகர் நேரடி பங்கேற்பாளர்களின் மேற்பார்வையின் போதும் அடையாளம் காணப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதனையும் பணிப்புரைகள் நோக்காகக் கொண்டிருந்தன. இப்பணிப்புரைகள், சந்தைப் பங்கேற்பாளர்கள் அவர்களது தற்போதுள்ள நடைமுறைகளுக்குத் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு அவர்களுக்குப் போதுமான நேரத்தினை வழங்கும் நோக்குடன், குறிப்பிட்ட நிலைமாற்றுக் கால ஏற்பாடுகளுக்குட்பட்டு 2020.01.01 அன்று தொழிற்பாட்டிற்கு வந்தன.

**புதிய பணிப்புரைகளின் அடிப்படைப் பண்புகள்**

1. பிணையங்களை மதிப்பீடு செய்வதில் ஒரே சீரான தன்மை

புதிய பணிப்புரைகள், மீள்கொள்வனவிற்கும் நேர்மாற்று மீள்கொள்வனவிற்கும் பயன்படுத்தப்படுகின்ற திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் இழிவு விலைகள், அதாவது

1 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் என்போர் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களாக இருப்பதுடன் தற்பொழுது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர் கம்பனிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

8

ஒன்றுசேர்க்கப்பட்ட வட்டி இலங்கை மத்திய வங்கியினால் நாளாந்தம் வெளியிடப்படும் தொடர்பான விலைக்குறிப்பீட்டின் சராசரி மற்றும் தொடர்பான உண்டியல் அல்லது முறிக்காக குறிப்பீடு செய்யப்பட்ட தொகை என்பனவற்றை உள்ளடக்கிய விலைகளின் அடிப்படையில் சந்தைப் பெறுமதியில் விலையிடப்படுதல் வேண்டும். எனினும், துல்லியமான மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கத்தக்க மற்றைய மதிப்பீட்டு முறைகளை அங்கீகரிக்கும் விதத்தில் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாற்று மதிப்பீட்டு முறையினைப் பயன்படுத்துவதற்கான தெரிவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

2. குறைந்தபட்ச உச்சஎல்லைத் தேவைப்பாடுகளின் அறிமுகம்

உச்சஎல்லை என்பது திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படும் பொழுது அத்தகைய திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் சந்தைப் பெறுமதி மீது பிரயோகிக்கத்தக்க கழிவிடலொன்றாகும். உச்சஎல்லை என்பது குறிப்பிட்ட பிணையங்களின் விலைகளில் மோசமான அசைவுகள் ஏற்படுவதன் காரணமாக கடன் வழங்குநருக்கு ஏற்படுகின்ற இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருதுகோளாகும். கடந்த காலத்தில் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களுக்கான உச்சஎல்லை வீதம் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களிடையே பெருமளவிற்கு வேறுபட்டிருந்தது. எனினும், மீள்கொள்வனவுச் சந்தைக்கு நியமப்படுத்தல் அளவொன்றினை அறிமுகப்படுத்தும் பொருட்டு, புதிய பணிப்புரைகள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் நேரத்தில் பின்வரும் குறைந்தபட்ச உச்சஎல்லைத் தேவைப்பாடுகளை விதிக்கின்றன. இவை இரண்டு நேரடி பங்கேற்பாளர்களுக்கிடையேயான[2] கொடுக்கல்வாங்கல்கள் தவிர்ந்த திறைசேரி உண்டியலின் அல்லது திறைசேரி முறியின் முதிர்ச்சிக்கு இன்னமும் எஞ்சியுள்ள காலத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அட்டவணை சி.கு. 12.1
குறைந்தபட்ச உச்சஎல்லைத் தேவைப்பாடுகள்

| தகைமையுடைய பிணையத்தின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம் | குறைந்தபட்ச கழிவிடல் (%) |
|---|---|
| 1 ஆண்டு வரை | 4.0 |
| 1 ஆண்டிற்குக் கூடுதலாக 3 ஆண்டுகள் வரை | 6.0 |
| 3 ஆண்டிற்குக் கூடுதலாக 5 ஆண்டுகள் வரை | 8.0 |
| 5 ஆண்டிற்குக் கூடுதலாக 8 ஆண்டுகள் வரை | 10.0 |
| 8 ஆண்டுகளுக்குக் கூடுதலாக | 12.0 |

3. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படும் பிணையங்களின் விற்பனை, பிரதியிடல் மற்றும் ஈடுசெய்தலை ஒழுங்குமுறைப்படுத்தல்

ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களிலுள்ள கடன்வழங்குவோர் மற்றும் கடன்பெறுவோர் இருவரினதும் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே கொண்டிருப்பதனால், புதிய பணிப்புரைகள், நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக பிணையுறுதியாக வணிகர் நேரடிப் பங்கேற்பாளரொருவரினால் பெறப்பட்ட பிணையங்களை உடனடியாக விற்பனை செய்வதனைத் தடைசெய்தல் மற்றும் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களை வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் அத்தகைய பிணையங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாயின் சமகாலத்தில் பதிலீடு செய்து கொள்ளுமாறு வணிகர் நேரடி பங்கேற்பாளரைக் கேட்டுக் கொள்வது உள்ளிட்ட மேலும் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. மேலும், மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பிணையங்களின் சந்தைப் பெறுமதி, அதன் முதிர்ச்சிக்கு முன்னதான எந்தவொரு நேரத்திலும் கொடுக்கல்வாங்கல்களின் முதிர்ச்சிப் பெறுமதிக்குக் கீழே வீழ்ச்சியடையுமாயின், கொடுக்கல்வாங்கலின் வகையினைப் பொறுத்து மேலதிகப் பிணையங்களை ஒதுக்குமாறு அல்லது பெற்றுக்கொள்ளுமாறு புதிய பணிப்புரைகள் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களைக் கேட்டுக் கொள்கின்றன.

4. வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் பொறுப்புக்கூறும் தன்மையினையும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் மேம்படுத்தல்

புதிய பணிப்புரைகள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு தொடர்பான குறிப்பிட்ட முக்கிய தேவைப்பாடுகளைக் கட்டாயப்படுத்துகின்ற அதேவேளையில், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுச் சந்தையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்காக வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் உள்ளகக் கட்டமைப்பினை உத்வேகப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தினையும் அங்கீகரித்திருக்கின்றது. இதற்கமைய வணிகர் நேரடிப் பங்கேற்பாளரின் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள், உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் வகிபாகம், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் இணங்கியொழுகும் தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

5. தண்டங்களின் அறிமுகம்

மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கெதிராக எடுக்கப்படக்கூடிய பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளைத் தற்போதுள்ள கட்டமைப்பு வழங்குகின்ற அதேவேளையில், அவ்வாறு இணங்கியொழுகாமையினை மேலும் கட்டுப்படுத்துவதற்காக புதிய பணிப்புரைகள் நிதியியல் சார்ந்த தண்டங்களை விதித்தன.

### அரச பிணையங்கள் சந்தைக்கும் அதன் பங்கேற்பாளர்களுக்கும் எதிர்பார்க்கப்படும் நன்மைகள்

முதலீட்டாளர்கள் திரவப் பிணையங்களில் முதலீடுகளைச் செய்ய முன்னுரிமையளிப்பதன் காரணமாக உடனடி மற்றும் மீள்கொள்வனவு வர்த்தகப்படுத்தல் ஆகிய இரண்டு நியதிகளிலும் அரச பிணையத்தினை வர்த்தகப்படுத்தக்கூடிய தன்மை,

2 நேரடிப் பங்கேற்பாளர்கள் என்பது பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் நேரடிப் பங்கேற்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களையும் தற்பொழுது இலங்கை மத்திய வங்கி அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர் கம்பனிகள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை என்பனவற்றை உள்ளடக்குகிறது.

அரசிற்கான நிதியின் செலவினைப் பாதிக்கின்ற முக்கிய காரணங்களாகக் காணப்படுகின்றன. திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான இப்புதிய பணிப்புரைகள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான சந்தை நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தி அதன் மூலம் அரச பிணையங்களின் வர்த்தகப்படுத்தக்கூடிய தன்மையினை மேம்படுத்தும்.

மேலும், இப்பணிப்புரைகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்கனவே நடைமுறைக்கிடப்பட்டுள்ள குறுஞ்செய்திப் பணி, மத்திய வைப்பக முறைமைக் கணக்கில் வைத்திருப்போருக்கான அறிவித்தல் முறைமை போன்றவற்றுடன் இணைந்து மேலும் பாதுகாப்பளிக்கும் என்பதனால் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் மற்றும் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் அவர்களது வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படுகின்றவிடத்து, மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான பிணையத்தின் அசைவுகள் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட நன்மைகள் அரச பிணையங்களின் சந்தையின் அபிவிருத்திக்கு பொதுவாக இட்டுச்செல்லும் என்பதுடன் முதலீட்டாளரின் நம்பிக்கையினையும் மேம்படுத்தும்.

2019இல் நடாத்தப்பட்ட மொத்தத் திறைசேரி உண்டியல் ஏலங்களிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட (52) மொத்த விலைக் குறிப்பீட்டில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் ஊழியர் சேம நிதியம் என்பனவற்றின் பங்கேற்பு முறையே 70.9 சதவீதத்திற்கும் 28.3 சதவீதத்திற்கும் 0.8 சதவீதத்திற்கும் வகைகூறின. எனினும், 2019இல் திறைசேரி முறிகளின் ஏலங்களின் பங்கேற்பில் 2019இல் நடத்தப்பட்ட 12 ஏலங்களூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த முறிகளில் 41.1 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்ததன் மூலம் ஊழியர் சேம நிதியம் ஆதிக்கத்தினைப் பெற்றிருந்தது.

**இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்:** அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் ரூ.8,108.4 பில்லியனுக்கு 7.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் அவற்றுள் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் 2019இன் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவில் 79.7 சதவீதத்திற்கு வகைகூறின. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் உடனடிக் கொள்வனவுகள் மற்றும் உடனடி விற்பனைகள் 2018ஆம் ஆண்டின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் முறையே 37.8 சதவீதத்தினாலும் 23.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

**2019 காலப்பகுதியில் முதனிலை வணிகர்களின் மீது பல்வேறு மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.** அரச பிணையங்களின் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலான சந்தை நடைமுறைகளை நியமப்படுத்தும் பொருட்டு பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் மீதான மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் நேரடி வணிகர் பங்கேற்பாளர்களுக்கு 2019 திசெம்பர் 20ஆம் நாளன்று பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

## உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள்

**2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் மூன்று நுண்பாகநிதிக் கம்பனிகளுக்கு அதாவது பிறேன்டினா மைக்றோ இன்வெஸ்மன்ட் கம்பனி லிமிடெட், லக்ஜெயா மைக்றோ பினான்ஸ் லிமிடெட் மற்றும் தும்பற மைக்றோ கிறடிற் லிமிடெட் ஆகியவற்றிற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை உரிமங்களை வழங்கியது.** உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள் துறை 2019 இறுதியில் ரூ.5.8 பில்லியன் பெறுமதியான சொத்துக்களை அறிவித்தது. இதில், வாடிக்கையாளர்களுக்கான நுண்பாக நிதி கடன்களும் முற்பணங்களும் ரூ.4.7 பில்லியன்களுக்கு வகைகூறி மொத்தச் சொத்துக்களில் 81.7 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2019 இறுதியில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் துறையின் மைய மூலதன மட்டம் ரூ.1.9 பில்லியனாக காணப்பட்டதுடன் எல்லா உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் மைய மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் தொடர்பிலான குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுக்கு 2019 இறுதியில் இணங்கியொழுகியது. 2019ஆம் ஆண்டின் இறுதியில் தொழிற்பாட்டுச் செலவுகளில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு மத்தியிலும் உரிமம்பெற்ற

அட்டவணை 8.15
உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் செயலாற்றம்

ரூ. பில்லியன்

| விடயம் | 2019 |
|---|---|
| **மொத்தச் சொத்துக்கள்** | **5.8** |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 4.7 |
| முதலீடுகள் | 0.1 |
| ஏனையவை | 1.0 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **3.7** |
| மொத்தக் கடன் பெறுகைகள் | 2.5 |
| ஏனையவை | 1.3 |
| **பங்குரிமைகள்** | **2.1** |
| குறித்துரைக்கப்பட்ட மூலதனம் | 1.1 |
| ஒதுக்குகள் | 0.1 |
| மைய மூலதனம் | 1.9 |
| வட்டி வருமானம் | 1.6 |
| வட்டி செலவினம் | 0.3 |
| தேறிய வட்டி வருமானம் | 1.3 |
| வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்) | 0.2 |
| **வரிக்கு பிந்திய இலாபம்/ (நட்டம்)** | **0.1** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

நுண்பாக நிதிக் கம்பனிகள் துறை ரூ.0.1 பில்லியன் வரிக்குப் பின்னரான ஒட்டுமொத்த இலாபத்தினை அறிவித்திருந்தன.

### கூறுநம்பிக்கைகள்

**2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூறுநம்பிக்கைகளின் எண்ணிக்கை 2018இல் பதியப்பட்ட 75 இலிருந்து 71 ஆகக் குறைவடைந்த அதேவேளையில் கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள் 14 ஆகவே இருந்தது.** இந்த 71 கூறுநம்பிக்கைகளில் 17 பணச் சந்தை நிதியங்களாகவும் 13 உயர் பாதுகாப்பு நிதியங்களாகவும் 13 வருமான நிதியங்களாகவும் 9 சமநிலை நிதியங்களாகவும் 8 வளர்ச்சி நிதியங்களாகவும் 5 சுட்டெண் நிதியங்களாகவும் 4 சறியா நிதியங்களாகவும் 1 ஆரம்பப் பொதுமக்களுக்கான வழங்கல் நிதியமாகவும் மற்றும் 1 டொலர் முறி நிதியமாகவும் தொழிற்பட்டன.


### வியாபார வளர்ச்சி

**ஆண்டு காலப்பகுதியில் கூறுநம்பிக்கைத் துறையின் மொத்தச் சொத்துக்களில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.** 2019 திசெம்பர் இறுதியில் மொத்தச் சொத்துக்கள் 63.2 சதவீதத்தால் அதிகரித்து 2019இன் இறுதியில் ரூ.104.9 பில்லியனாகியது. 2018 இறுதியின் 3,368 மில்லியன் கூறுவழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் கூறுவழங்கல்கள் 4,769 மில்லியனிற்கு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, கூறுநம்பிக்கை உடமையாளர்கள் 2018இன் 42,093 இலிருந்து 2019இல் 46,481 இற்கு அதிகரித்தது.

### முதலீடுகள்

**2019 ஆண்டு காலப்பகுதியில் மொத்தச் சொத்தின் சதவீதமாக அரச பிணையங்களின் மீதான முதலீடு 3.8 சதவீதமாகக் காணப்பட்டது.** எவ்வாறாயினும், மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக பங்கு மூலதனத்தின் முதலீடு 2018 இறுதியின் 14.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 9.4 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

வரைபடம் 8.14
நிதியங்களின் எண்ணிக்கை அடிப்படையில் கூறு நம்பிக்கை பொறுப்புகள் துறையின் வகைப்படுத்தல்கள்




*ஏனையவை : சறியா நிதியங்கள் 4, ஆரம்ப பொதுவழங்கல் நிதியங்கள் 1 மற்றும் டொலர் நிதியங்கள் 1

*மூலம்* : இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்

அட்டவணை 8.16
கூறு நம்பிக்கைகள் துறையின் செயலாற்றம்

| விபரம் | 2018(அ) | 2019(ஆ) |
|---|---|---|
| கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை | 75 | 71 |
| கூறு உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கை | 42,093 | 46,481 |
| வழங்கலில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை (மில்) | 3,368 | 4,769 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 64.3 | 104.9 |
| தேறிய சொத்து பெறுமதி (ரூ. பில்) | 64.2 | 104.8 |
| பங்குரிமை மூலதனத்திலான முதலீடுகள் (ரூ. பில்) | 9.5 | 9.8 |
| மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%) | 14.7 | 9.4 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் (ரூ.பில்) | 2.5 | 4.0 |
| மொத்தச் சொத்துக்களின் பங்கு (%) | 3.8 | 3.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்


### காப்புறுதித் துறை

**2019இல் காப்புறுதித் துறை சொத்து தளத்தின் அடிப்படையில் வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தாலும் தேறிய தொழிற்பாட்டு செயற்திறன் அடிப்படையில் வீழ்ச்சியை பதிவு செய்தது.** 2019 இறுதியில் காணப்பட்ட 28 காப்புறுதிக் கம்பனிகளில், 13 நீண்ட காலக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் 12 பொதுக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் 3 கம்பனிகள் இவை இரண்டு காப்புறுதிகளிலும் ஈடுபடுபவையாகவும் காணப்பட்டன. 2019இல் ஒரு புதிய அனுமதி மட்டுமே பொதுக்காப்புறுதிக் கம்பனியொன்றிற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தது. 2019இல் 9 காப்புறுதிக் கம்பனிகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றுக்கு மேலதிகமாக 2019இல் 66 காப்புறுதித் தரகுக் கம்பனிகள் ஒன்றில் பொதுக் காப்புறுதி வர்த்தகத்தில் மட்டும் ஈடுபடுபவையாகவோ அல்லது பொது மற்றும் நீண்ட காலக் காப்புறுதி ஆகிய இரண்டிலும் ஈடுபடுபவையாகவோ காணப்பட்டன.

### வியாபார வளர்ச்சி

**2019இல் காப்புறுதித் துறையானது 11.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன் அதன் சொத்துத் தளமானது 2019 முடிவில் ரூ.691.4 பில்லியனை எட்டியது.** நீண்ட காலக் காப்புறுதி உப துறையானது 2018 முடிவில் ரூ.429.7 பில்லியனாகவிருந்த அதன் சொத்துத் தளத்தினை 13.4 சதவீதத்தால் விரிவடைய செய்து 2019 இறுதியில் ரூ.487.2 பில்லியனாக வளர்ந்தது. அதேவேளை பொதுக் காப்புறுதி உபதுறையானது அதன் சொத்துத் தளத்தை 7.4 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்து 2019 முடிவில் ரூ.204.2 பில்லியனாகியது. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் உபதுறையான நீண்ட காலக் காப்புறுதித் துறையின் பங்கானது 2018இல் காணப்பட்ட 69.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் சற்று அதிகரித்து 70.5 சதவீதமாகக் காணப்பட்டது. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் அதன் இன்னொரு துறையான பொதுக் காப்புறுதி உபதுறையின்

வரைபடம் 8.15
காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்



*மூலம்* : இலங்கை காப்புறுதித்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

பங்கைக் கருத்திற் கொள்ளும் போது, 2018 இறுதியில் காணப்பட்ட 30.7 சதவீத பங்களிப்பு வீதமானது 2019 இறுதியில் சற்றுக் குறைந்து 29.5 சதவீதமாகக் காணப்பட்டது.

**2018 இறுதியில் ரூ.181.5 பில்லியனாகக் காணப்பட்ட காப்புறுதித் துறையின் மொத்தமாக எழுதப்பட்ட கட்டுப்பணமானது 2019 இறுதியில் 8.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ரூ.196.8 பில்லியனை எட்டியது.** குறித்த ஆண்டுப்பகுதியில் பொதுக் காப்புறுதி உபதுறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமானது 6.7 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை நீண்ட கால காப்புறுதி உபதுறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமானது 10.6 சதவீதத்தால் அதிகரித்தது. எவ்வாறாயினும் 2019 இறுதியில் காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தில் 54.9 சதவீதத்தினை பொதுக் காப்புறுதி உப துறையானது பதிவுசெய்து பிரதான பங்காளியாக நீடித்தது. பொதுக் காப்புறுதித் துறையின் பிரதான வியாபாரப் பரப்பான மோட்டார் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணமானது 2019 இறுதியில் சற்று அதிகரித்து 4.0 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது. 2019இல் பொதுக் காப்புறுதி உபதுறையில், சுகாதாரக் காப்புறுதிப் பரப்பே உச்ச வளர்ச்சியான 16.9 சதவீதத்தைப் பதிவுசெய்ததுடன் அதற்கு அடுத்தபடியாக தீ அபயாக் காப்புறுதியானது 15.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. 2019 காலப்பகுதியில் 1.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த கடலூபாயக் காப்புறுதியே ஆகக் குறைந்ததாகக் காணப்பட்டது.

அட்டவணை 8.17
காப்புறுதித்துறையின் செயலாற்றம்

ரூபா பில்லியன்

| விடயம் | | 2018 (அ) | 2019 (ஆ) |
|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | | 619.8 | 691.4 |
| அரச பிணையங்கள் | | 229.6 | 242.4 |
| பங்குரிமை மூலதனம் | | 42.4 | 41.4 |
| காசு மற்றும் வைப்புக்கள் | | 93.5 | 108.2 |
| மொத்த வருமானம் | | 228.7 | 252.2 |
| கட்டுப்பண வருமானம் | | 181.5 | 196.8 |
| முதலீட்டு வருமானம் | | 45.2 | 55.2 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 35.4 | 27.8 |
| மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%) | | 312.1 | 298.0 |
| | - நீண்டகாலக் காப்புறுதி<br>- பொதுக் காப்புறுதி | 178.3 | 231.2 |
| பிடித்து வைத்தல் விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 95.8 | 95.8 |
| | - பொதுக் காப்புறுதி | 81.6 | 83.0 |
| கோரல் வீதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 47.1 | 45.6 |
| | - பொதுக் காப்புறுதி | 65.1 | 67.4 |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம் | - நீண்டகாலக் காப்புறுதி | 100.6 | 96.0 |
| | - பொதுக் காப்புறுதி | 101.3 | 105.3 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 5.9 | 3.9 |
| | - பொதுக் காப்புறுதி | 6.0 | 6.1 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 25.8 | 16.0 |
| | - பொதுக் காப்புறுதி | 13.1 | 12.3 |
| ஒப்புறுதி விகிதம் (%) | - பொதுக் காப்புறுதி | 18.0 | 14.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

## வருவாய்கள்

**2019ஆம் ஆண்டு காப்புறுதித் துறையின் அதன் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்ததுடன் இலாபங்கள் 21.7 சதவீத வீழ்ச்சி ஒன்றைப் பதிவுசெய்தது.** இவ்விலாபத்தன்மை வீழ்ச்சியானது பொதுக் காப்புறுதி மற்றும் நீண்ட காலக் காப்புறுதி ஆகிய இரு உப துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. குறித்த காலப்பகுதியில் நீண்ட காலக் காப்புறுதி உபதுறையினது இலாபமானது 25.9 சதவீதத்தாலும் பொதுக் காப்புறுதி உபதுறையின் இலாபமானது 12.9 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை துறையின் எழுத்துறுதி இலாபமும் 2019 காலப்பகுதியில் 11.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**காப்புறுதித் துறை மீதான கோரல்களானது 10.3 சதவீதத்தால் அதிகரித்து 2019 இறுதியில் ரூ.97.8 பில்லியனை எட்டியது.** அதேகாலப்பகுதியில் நீண்ட காலக் காப்புறுதி உபதுறை மீதான கோரல்கள் 2019இல் 7.1 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளை பொதுக் காப்புறுதித் துறை மீதான கோரல்கள் 12.6 சதவீதத்தால் அதிகரித்தது.

**காப்புறுதித் துறையின் மொத்த முதலீட்டு வருமானமானது 2019 காலப்பகுதியில் 16.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** எவ்வாறாயினும் 2018இல் 6.0 சதவீதமாகக் காணப்பட்ட சொத்துக்கள் மீதான வருவாய் வீதம் 2019இல் 6.1 சதவீதத்திற்கு சற்று அதிகரித்தைத் தவிர காப்புறுதித் துறையின் அனைத்து இலாபத்தன்மை விகிதங்களும் வீழ்ச்சியையே பதிவுசெய்தன. 2018இல் 18.1 சதவீதமாகக் காணப்பட்ட எழுத்துறுதி வீதமானது 2019இல் 14.7 சதவீதமாகக் குறைவடைந்தது. 2018இல் 5.9 சதவீதமாகக் காணப்பட்ட நீண்ட காலக் காப்புறுதி உபதுறையின் சொத்துக்கள் மீதான வருவாய் வீதமானது 2019இல் 3.9 சதவீதமாகக் குறைவடைந்தது. 2018இல் 25.8 சதவீதமாகக் காணப்பட்ட நீண்ட காலக் காப்புறுதி உபதுறையின் மூலதனத்தின் மீதான வருவாய் வீதமானது 2019இல் 16.9 சதவீதமாகக் குறைவடைந்த அதேவேளை 2018இல் 13.1 சதவீதமாகக் காணப்பட்ட பொதுக் காப்புறுதி உபதுறையின் மூலதனத்தின் மீதான வருவாய் வீதமானது 12.3 சதவீதத்தால் சற்றுக் குறைவடைந்தது.

8

## மூலதனமும் முதலீடுகளும்

**2018இல் 49.0 சதவீதமாகக் காணப்பட்ட பொதுக் காப்புறுதி உபதுறையின் மொத்தச் சொத்துக்களுக்கெதிரான மூலதன வீதமானது 2019இல் சற்றுக் குறைவடைந்து 46.0 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை நீண்ட காலக் காப்புறுதி உபதுறையின் குறித்த வீதமானது 23 சதவீதமாகவே 2019இலும் தொடர்ச்சியாகக் காணப்பட்டது.** இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுடன் அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் இணைந்தொழுகின.

**காப்புறுதித் துறையால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளானது தொடர்ந்தும் அதிகளவில் அரச பிணையங்கள் மீதே மேற்கொள்ளப்பட்டது.** எவ்வாறாயினும் நீண்ட காலக் காப்புறுதி உபதுறையின் மொத்தச் சொத்துக்களின் பங்காக அரச பிணையங்களின் மீதான சொத்துக்களுடன் 2018 இறுதியில் காணப்பட்ட 41.1 சதவீதமாகக் ஒப்பிடுகையில் 2019இல் 38.7 சதவீதமாக சற்றுக் குறைவடைந்தது. அவ்வாறே 2018 இறுதியில் 28.0 சதவீதமாகக் காணப்பட்ட பொதுக் காப்புறுதி உபதுறையின் அரச பிணையங்கள் மீது முதலிடப்பட்ட சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 26.4 சதவீதமாக சற்றே வீழ்ச்சியடைந்தது. 2018 இறுதியில் 6.9 சதவீதமாகக் காணப்பட்ட நீண்ட காலக் காப்புறுதி உபதுறையின் மூலதனத்தின் மீதான முதலீட்டின் பங்குடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 6.2 சதவீதமாகக் குறைவடைந்தது. அதேவேளை பொதுக் காப்புறுதி உபதுறையின் மூலதனத்தின் மீதான முதலீடானது 2018 இறுதியில் 6.7 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 5.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

**2019இல் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகளை வழங்கி காப்புறுதித் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தொழிற்பாடுகளை மேலும் பலப்படுத்தியது.** தனியான வைத்தியக் காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவது தொடர்பான விடயத்தில் கவனம் செலுத்தும்படி நீண்ட காலக் காப்புறுதி நிறுவனங்களிற்கு ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. ஆயுள் காப்புறுதியாளர்களுக்கு அல்லது நன்மைபெறுநர்களுக்கு கொள்கைப் பத்திரங்களை வழங்கும் நெறிமுறையானது ஒரு காப்புறுதிக் கொள்கையின் உடமையாளர், காப்புறுதி அளிக்கப்பட்டவராக இல்லாதவிடத்து அக்காப்புறுதி அளிக்கப்பட்டவருக்கு கொள்கைப் பத்திரப் பிரதிகளை வழங்குவதில்லை என மாற்றம் செய்யப்பட்டது. மேலும் ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவது தொடர்பாக காப்புறுதித் தரகர்களிற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் நெறிமுறைகள் வழங்கப்பட்டன.

## ஓய்வுகால நிதியங்கள்


**2019இன் இறுதியில் ஓய்வுகால நிதியங்களின் சொத்துக்கள் ரூ.3,096.5 பில்லியனாக காணப்பட்டதுடன் நிதியியல் துறைச் சொத்துக்களின் 15.4 சதவீதத்திற்கு வகைகூறுவதாகப் பதியப்பட்டுள்ளது.** 2019 இல் இத்துறை ஊழியர் சேமலாப நிதியத்தால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இது ஓய்வுகால நிதியங்களின் சொத்துக்களின் 82.0 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊழியர் சேம நிதியத்திற்கு மேலாக, இருவேறு பகிரங்கமாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் உள்ளன. அவையாவன ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரச பணிகள் சேம நிதியம் ஆகும்.

## ஊழியர் சேம நிதியம்

**1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் (ஊ.சே.நி) சட்டத்திற்கமைய, நிதியத்தின் பாதுகாவல்தன்மை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளையில் நிதியத்தின் பொது நிர்வாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படுள்ளது.**


**(அ) உறுப்புரிமை, உறுப்பினர் மீதிகள் மற்றும் மீளளிப்புக்கள்: நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2018இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,289.4 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ரூ.2,540.4 பில்லியனுக்கு ரூ. 251.1 பில்லியனால் அதிகரித்து 11.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.** இவ்வதிகரிப்பிற்கு உறுப்பினர்களின் தேறிய பங்களிப்புக்கள் (மீளளிப்புக் கொடுப்பனவுகளை கழித்த பங்களிப்புக்கள்) மற்றும் நிதியத்தின் முதலீடுகளால் உழைக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் இணைந்த தாக்கமே காரணமாகும். உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2019இன் இறுதியில் ரூ.2,497.6 பில்லியனாக விளங்கி 2018இன் இறுதியின் ரூ.2,254.2 பில்லியனிலிருந்து 10.8 சதவீதம் கொண்ட ஒரு அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது. 2019 இற்கான மொத்தப் பங்களிப்பு 8.4 சதவீதத்தினால் ரூ.157.2 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை 2019இல் உறுப்பினர்களுக்கும், அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை ரூ.126.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2018இனை விட 17.0 சதவீதமான ஒரு அதிகரிப்பாக இருக்கின்றது. இதற்கிணங்க, தேறிய பங்களிப்பானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.37.0 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ.30.9 பில்லியனாகக் காணப்பட்டது. நிதியத்தின் ஆண்டு இலாபமானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.190.6 பில்லியனிலிருந்து 2019இல்

வரைபடம் 8.16
ஊழியர் சேம நிதியத்தின் முதலீட்டுப் பட்டியலின் வளர்ச்சி (ஏட்டுப்பெறுமதி)




மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.17
ஊழியர் சேம நிதியத்தின் முதலீட்டுப் பட்டியலின் உள்ளடக்கம் (2019 இறுதியில் உள்ளவாறு)




மூலம் : இலங்கை மத்திய வங்கி

ரூ.222.8 பில்லியனுக்கு 16.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இது முதன்மையாக 2018 உடன் ஒப்பிடுகையில் ரூ.25.2 பில்லியன் வட்டி வருமான அதிகரிப்பு மற்றும் 2018ஆம் ஆண்டில் ரூ.10.9 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.1.9 பில்லியனுக்கு பட்டியலிடப்பட்ட பங்கு முதலீடுகளிலிருந்தான சந்தைப் படியான இழப்புக்கள் குறைவடைந்தமை என்பவற்றால் ஏற்பட்டது.

**(ஆ) நிதியத்தின் முதலீடும் வருமானமும்: மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2018இன் இறுதியில் ரூ.2,298.8 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ரூ.2,548.7 பில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.** நிதியத்தினுடைய மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகளை எதிர்கொள்வதற்கான திரவத்தன்மையினை போதியளவில் பேணுவது மற்றும் நிதியத்தின் பாதுகாப்பை உறுதிசெய்கின்ற அதேவேளை நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்டகால நேர்க்கணிய உண்மை வருவாய் வீதம் ஒன்றினை வழங்குவதை நோக்கியதாகவுள்ளது. இதற்கிணங்க, 2019இன் இறுதியில், முதலீட்டுச் சொத்துப் பட்டியலானது 93.8 சதவீதமான அரச பிணையங்களையும், 3.0 சதவீதமான பங்குகளையும் 1.7 சதவீதமான நிறுவனத் தொகுதிக்கடன் பத்திரங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்களையும், 0.9 சதவீதமான நிலையான வைப்புக்களையும் மற்றும் மிகுதியான 0.6 சதவீதமான நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தத்தையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

**நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.5 சதவீத அதிகரிப்பு ஒன்றினைப் பதிவுசெய்ததுடன் 2019இல் ரூ.259.0 பில்லியனாகக் காணப்பட்டது.** மதிப்பிறக்க ஆதாயத்தை உள்ளடக்கிய வட்டி வருமானமானது தொடர்ந்தும் நிதியத்தின் பிரதான வருமான மூலமாகக் காணப்பட்டதுடன் இது 2018இல் ரூ. 229.4 பில்லியனிலிருந்து 2019இல் ரூ. 254.7 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. பங்கிலாப வருமானமும் 2018இல் ரூ.3.9 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.6.2 பில்லியனுக்கு 60.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான தேறிய நட்டமானது 2018இல் 10.9 பில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.1.9 பில்லியன் இழப்பைப் பதிவுசெய்துள்ளது.

**நிதியமானது 2019இல் ஒரு முழுமொத்த வருமானமாக ரூ.259.3 பில்லியனை உழைத்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.4 சதவீதமான ஒரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** தொழிற்பாட்டுச் செலவீனத்தையும், வரிச் செலவீனத்தையும் சீராக்கிய பின்னர், 2019ஆம் அண்டிற்கான தேறிய இலாபமானது ரூ.228.8 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2018 உடன் ஒப்பிடுகையில் 16.9 சதவீத அதிகரிப்பு ஒன்றைக் காட்டுகின்றது. 2019இல் மொத்த வருமானத்திற்கு தொழிற்பாட்டுச் செலவீன விகிதமாக 0.6 சதவீத்தைப் பேணிய அதேவேளை ஊழியர் சேம நிதியமானது 2019இல் 10.7 சதவீத்தை சராசரி முதலீட்டு வருவாயாக உழைக்கக்கூடியதாக இருந்தது. 2018 ஏப்ரல் 01 இலிருந்து 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், நிதியத்திற்கு பிரயோகிக்கப்படுகின்ற வருமான வரி வீதமானது 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிச் செலவீனத்தில் ரூ.4.2 பில்லியன் அதிகரிப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2018 ஏப்ரல் 01 இலிருந்து முன்னைய வரி விதிமுறைகளின் கீழ் மொத்த வருமானத்தில் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி முறி வட்டி வருமானத்தின் மீது அறவிடப்பட்ட 10.0 சதவீத நிறுத்தி வைத்தல் வரியானது தள்ளுபடி செய்யப்பட்டது. அத்துடன் நிதியியல்

8

அட்டவணை 8.18
ஊழியர் சேம நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்ற சுருக்கம்

| விடயம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019(அ) |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | 1,664.9 | 1,841.5 | 2,066.3 | 2,289.4 | 2540.4 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்) | 1,625.5 | 1,810.6 | 2,020.8 | 2,254.2 | 2497.6 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 102.5 | 118.3 | 133.3 | 145.0 | 157.2 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 77.8 | 108.4 | 117.5 | 108.0 | 126.3 |
| தேறிய பங்களிப்பு (ரூ.பில்) | 24.7 | 9.9 | 15.8 | 37.0 | 30.9 |
| தேறிய இலாபம் (ரூ. பில்) | 156.9 | 175.9 | 202.9 | 190.6 | 228.8 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

கருவிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடுகளுக்காகப் பிரயோகிக்கப்படுகின்ற கணக்கீட்டு நியமமான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 09 இனை ஊழியர் சேம நிதியம் பின்பற்றியது. இதற்கிணங்க, பட்டியலிடப்பட்ட பங்குக் கருவிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டதுடன் தற்போதைய சந்தை நிலைமைகளின் கீழ், 2019ஆம் அண்டிற்கான இலாபத்திற்கெதிராக ரூ.1.9 பில்லியன் சந்தைப் பெறுமதியிடல் இழப்பொன்றை அறவிட்டது. இதற்கிணங்க, ஊழியர் சேம நிதியமானது, இலாபத்திற்கு சமமான ஒதுக்கிற்கு ரூ.7.7 பில்லியனை மாற்றிய பின்னர், 2019இல் உறுப்பினர் மீதிகளிற்கு 9.25 சதவீத வட்டியை பிரகடனம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**(இ) இடர்நேர்வு முகாமைத்துவம்: முதலீட்டு நடவடிக்கைகளின் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் நோக்குடன், அந்நடவடிக்கைகளிற்கான நடைமுறையிலுள்ள இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது 2019இல் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.** இதற்கிணங்க, உள்ளகக் கட்டுப்பாடுகளை போதியளவில் பேணுகின்ற அதேவேளை

அட்டவணை 8.20
ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம்

| விடயம் | ஊழியர் சேமலாப நிதியம் | | ஊழியர் நம்பிக்கை நிதியம் | |
|---|---|---|---|---|
| | 2018 (அ) | 2019 (ஆ) | 2018 (அ) | 2019 (ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 2,289.4 | 2,540.4 | 310.8 | 343.3 |
| மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்) | 2,254.2 | 2,497.6 | 306.5 | 338.6 |
| அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 18.6 | 19.0 | 14.6 | 15.3 |
| இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 2.8 | 2.5 | 2.6 | 2.6 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 78,651 | 74,956 | 82,416 | 82,375 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 145.0 | 157.2 | 25.3 | 27.5 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்) | 106.8 | 126.3 | 18.3 | 19.8 |
| மொத்த முதலீட்டுப்பட்டியல் (ரூ.பில்) | 2,298.8 | 2,548.7 | 291.1 | 324.9 |
| இதில்: அரச பிணையங்கள் (%) | 92.2 | 93.8 | 75.2 | 76.9 |
| மொத்த வருமானம் (ரூ. பில்) | 222.8 | 259.3 | 28.8 | 32.1 |
| பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்) | 193.1 | 223.0 | 23.3 | 24.6 |
| முதலீடுகளிலிருந்தான வருவாய் (%) | 10.4 | 10.7 | 9.7 | 9.7 |
| அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் (%) | 9.5 | 9.25 | 9.0 | 8.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

அட்டவணை 8.19
ஊழியர் சேம நிதியத்தின் முக்கிய நிதியியல் செயலாற்ற தரவுகளின் ஐந்து ஆண்டுச் சுருக்கம்

ரூ.மில்லியன்

| விடயம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019(அ) |
|---|---|---|---|---|---|
| வட்டி மற்றும் மதிப்பிறக்க இலாபம் | 169,645.9 | 193,656.3 | 219,635.3 | 229,446.0 | 254,681.0 |
| பங்கிலாப வருமானம் | 3,512.4 | 4,262.6 | 2,993.6 | 3,887.6 | 6,247.5 |
| கிடைக்கப்பெற்ற மூலதன இலாபம்/(நட்டம்) | 1,724.3 | 1,064.0 | - | 7.2 | 0.1 |
| இலாபம்/ நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிக்கருவிகளில் இருந்தான தேறிய இலாபம்/ நட்டம் | -394.0 | -842.1 | 1,476.9 | -10,901.3 | -1,890.0 |
| நிதியியல் சொத்துக்களின் சேத இழப்பு | -2,956.6 | -5,231.6 | -1,502.1 | 0.6 | 0.3 |
| **மூதலீட்டு வருமானம்** | **171,532.0** | **192,909.1** | **222,603.7** | **222,440.1** | **259,038.9** |
| ஏனைய வருமானம் | 323.3 | 162.3 | 588.8 | 403.0 | 283.8 |
| **திரண்ட மொத்த வருமானம்** | **171,855.3** | **193,071.4** | **223,192.5** | **222,843.1** | **259,322.7** |
| தொழிற்பாட்டுச் செலவீனம் | -1,190.6 | -1487.2 | -1,348.7 | -1,505.3 | -1,581.8 |
| வருமான வரி | -13,727.4 | -15,657.2 | -18,897.1 | -30,720.4 | -34,964.6 |
| **ஆண்டுக்கான இலாபம்** | **156,937.3** | **175,927.0** | **202,946.8** | **190,617.4** | **222,776.4** |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் முன்கொண்டுவரப்பட்டது | 311.3 | 215.6 | 189.3 | 2,471.0 | 159.5 |
| பட்டியலிடப்படாத பங்கின் விற்பனை மீதான மூலதன இலாபம் | - | - | - | - | 90.0 |
| **பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபம்** | **157,248.6** | **176,142.5** | **203,136.1** | **193,088.4** | **223,025.8** |
| சராசரி முதலீட்டு வருவாய் (%) | 11.3 | 11.4 | 11.8 | 10.4 | 10.7 |
| வட்டி வீதம் (%) | 10.5 | 10.5 | 10.5 | 9.5 | 9.25 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

முதலீட்டுத் தீர்மானம் எடுத்தல் செய்முறையின் மீதான மிகப் பெரிய தனித்துவத்தை வழங்குவதற்கும் நடைமுறையிலுள்ள வேலை செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் மேம்படுத்தப்பட்ட சந்தைத் தேவைப்பாடுகளுடன் இணங்கக்கூடிய வகையில் முதலீட்டுக் கொள்கைக் கூற்றானது திருத்தியமைக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டுமுள்ளது. மேலும், திருத்தியமைக்கப்பட்ட முதலீட்டு வழிகாட்டுதல்கள் குறுகிய காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்துடன், இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினுடைய முக்கிய நிதி மற்றும் நிதியல்லாத இடர்நேர்வு அம்சங்களை இனங்கண்டு பூர்த்திசெய்ய உலக வங்கியின் இடர்நேர்வு நிபுணர்கள் கொண்ட ஒரு குழுவினால் முழுமையான இடர்நேர்வு மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் ஊடாக நாணயச் சபைக்கு திணைக்கள ரீதியான இடர்நேர்வுகளை அறிக்கையிடுகின்ற ஒழுங்குமுறைமையானது ஆண்டு முழுவதும் தொடரப்பட்டது.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

**ஓய்வுகாலத் துறையின் சொத்துத் தளத்தில் 11.1 சதவீதமான பங்களிப்பைச் செய்த ஊழியர் நம்பிக்கை நிதியமானது அதனது சொத்துத் தளம், அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பங்களிப்பு ஆகியவற்றில் முன்னேற்றத்தைப் பதிவுசெய்தது.** 2019 இல் 15.3 மில்லியன் அங்கத்துவக் கணக்குகளில் 2.6 மில்லியன் அங்கத்துவக்

கணக்குகள் மட்டுமே செயற்படுபவையாகக் காணப்படுகின்றன. 2018 திசெம்பர் 82,416 ஆகக் காணப்பட்ட நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் ஊழியர்களது எண்ணிக்கையானது 2019இல் சற்று குறைவடைந்து 82,375 ஆகக் காணப்பட்டது. 2018இல் ரூ.306.5 பில்லியனாகக் காணப்பட்ட ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த அங்கத்தவர் மிகுதியானது 2019இல் 10.5 வீதத்தால் அதிகரித்து ரூ.338.6 பில்லியனை எட்டியது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தப் பங்களிப்பானது 8.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.27.5 பில்லியனை அடைந்த அதேவேளை மொத்த மீளழிப்புக்கள் 8.3 சதவீதத்தால் அதிகரித்து ரூ.19.8 பில்லியனைத் தொட்டதுடன் இதன் விளைவாக 2019இல் நிதியத்தின் தேறிய உட்பாய்ச்சல் 9.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**இதேவேளை, 2019 திசெம்பரில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த சொத்துக்களானது 10.5 சதவீதத்தால் அதிகரித்து ரூ.343.3 பில்லியனாகக் காணப்பட்டது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீடானது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11.6 சதவீதத்தால் அதிகரித்து ரூ.324.9 பில்லியனாகியது. அந்த முதலீடுகளில் 2018ஆம் ஆண்டில் 75.2 சதவீதமாகக் காணப்பட்ட அரச பிணையங்கள் மீதான முதலீடானது 2019இல் சற்று அதிகரித்து 76.9 சதவீதமானது. 2018ஆம் ஆண்டில் 18.3 சதவீதமாகக் காணப்பட்ட நிலையான வைப்புக்களின் மீதான முதலீடானது 2019இல் சற்றுக் குறைவடைந்து 17.2 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், மூலதனத்தின் மீதான முதலீட்டின் பங்கானது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.7 சதவீதத்தில் இருந்து 2019இல் பங்கானது 3.3 சதவீதமாகக் வீழ்ச்சியடைந்தது. நிதியமானது, இவ்வாண்டுக்கான அங்கத்தவர் மிகுதிகளின் வருமான விகிதத்தை 8.0 சதவீதத்தினால் தக்கவைத்துக் கொண்டது.

### ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

**ஓய்வுகாலத்துறையின் 2.1 சதவீதமான பொதுச் சேவைகள் சேமலாப நிதியமானது அதன் சொத்துக்களின் அடிப்படையில் வளர்ச்சியைப் பதிவுசெய்த போதிலும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தேறிய பங்களிப்பு போன்றவற்றின் அடிப்படையில் தொடர்ச்சியாகச் சரிவடைந்தது.** 2018 திசெம்பரில் 227,816 ஆகக் காணப்பட்ட செயற்பாட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது 2019 திசெம்பரில் 222,739 ஆகக் காணப்பட்டது. 2019 திசெம்பரில் பொதுச் சேவைகள் சேமலாப நிதியத்தின் மொத்தச் சொத்துக்களானது 11.4 சதவீதத்தால் அதிகரித்து, ரூ.63,674.8 மில்லியனை அடைந்தது. அதேவேளை 2019 திசெம்பரில் நிதியத்தின் முதலீடுகளானது 12.6 சதவீதத்தால் அதிகரித்து ரூ.62,315.4 மில்லியனானது. 2018ஆம் ஆண்டில் ரூ.381.2 மில்லியன்களாகக் காணப்பட்ட தேறிய பங்களிப்பானது 2019இல் ரூ.491.3 மில்லியனாக உயர்வடைந்தது. பொதுச் சேவைகள் சேமலாப நிதியமானது 2019ஆம் ஆண்டின் மொத்த முதலீடுகளில் 35.5 சதவீதத்தை அரச பிணையங்களில் முதலீடு செய்தது. அங்கத்தவர் மிகுதிகளின் மீதான வருவாய் விகிதமானது 2019இல் 12.6 சதவீதமாகும்.

## 8.4 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

### உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மை

**2019 ஏப்பிறல் நடுப்பகுதி வரை பற்றாக்குறை மட்டங்களில் காணப்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை 2019ஆம் ஆண்டின் போது ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்களின் குறுகிய காலமொன்றினைத் தவிர மிகையான மட்டமொன்றுக்கு மாற்றமடைந்திருந்தது.** 2019 மாச்சு 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் நியதி ஒதுக்குத்தேவைப்பாட்டினை 100 அடிப்படைப் புள்ளிகளால் 5.00 சதவீதமாக கீழ்நோக்கி திருத்தியமையானது உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் மீதான அழுத்தத்தினை தளர்த்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. எவ்வாறுயிருப்பினும், பண்டிகைப் பருவகாலத்தின்போது பண மீளெடுப்புகள் மற்றும் அரசாங்க வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றின் பிரதான காரணமாக 2019 ஏப்பிறல் நடுப்பகுதி வரை திரவத்தன்மை பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவியது. இதனைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகளினாலும் பண்டிகைப் பருவகாலத்தின் பின்னர் பண வைப்புகளினாலும் துணையளிக்கப்பட்டு நாட்டுக்கான பன்னாட்டு முறி பெறுகைகளின் மாற்றலின் விளைவாக 2019 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து சந்தைத் திரவத்தன்மைப் பற்றாக்குறையானது மிகையொன்றை நோக்கி மாற்றமடைந்தது. பணச் சந்தையானது ஒன்றுசேர்ந்த அடிப்படையில் மிகையான திரவத்தன்மையினை அறிக்கையிட்ட போதிலும், திரவத்தன்மையானது பிரதானமாக சில வர்த்தக வங்கிகள் மத்தியில் குறிப்பாக உரிமம்பெற்ற வெளிநாட்டு வங்கிகள் மத்தியில் செறிந்து காணப்பட்டது. உள்நாட்டுப் பணச் சந்தையில் அத்தகைய திரவத்தன்மையின் சமமற்ற பரம்பலினையும் குறுகிய கால வட்டிவீதங்கள் மீது ஏற்பட்ட அழுத்தத்தினையும் கருத்திற்கொண்டு மத்திய வங்கியானது உள்நாட்டு பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை நிலைக்கு மத்தியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தில் கீழ்நோக்கிய சரிப்படுத்தலொன்றினைத் தூண்டும் நோக்குடன் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தியது. மத்திய வங்கி வைத்திருந்த வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களினதும் திறைசேரி உண்டியல்களினதும் முதிர்ச்சியுடன் உள்நாட்டுப் பணச் சந்தை திரவத்தன்மை 2019 ஓகத்து இறுதியளவில் பற்றாக்குறையொன்றினை நோக்கி திரும்பியது. தொடர்ந்து வந்த காலப்பகுதியின் போது உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட நகர்வுகளைக் கருத்திற்கொண்டும்

தேவையான பிணையங்கள் கிடைக்கப்பெறாமையின் காரணமாகச் சந்தைப் பங்கேற்பாளர்களுடனான உடனடி ஏலங்களில் திறைசேரி உண்டியல்களுக்கான குறைவான கேள்வியினைக் கருத்திற்கொண்டும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக தகைமையுடைய சாதனங்களை விரிவுபடுத்துவதன் மூலம் 2019 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நிரந்தர அடிப்படையொன்றில் உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையை உட்செலுத்துவதற்கு திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. 2019 திசெம்பர் இறுதியளவில் உடனடி ஏலங்களில் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்ததன் வாயிலாக உள்நாட்டுப் பணச் சந்தைக்கு ஏறத்தாழ ரூ. 47.7 பில்லியனை மத்திய வங்கி உட்செலுத்தியது. அதேவேளை, உள்நாட்டுப் பணச் சந்தையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு தனியான முதனிலை வணிகர்களுக்கான திரவத்தன்மை உதவியினை வழங்கும் நோக்குடன் 2019 செத்தெம்பரில் திரவத்தன்மை துணையளிப்பு வசதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. திரவத்தன்மை துணையளிப்பு வசதியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் செயற்திறன்மிக்க சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் நழுவியக்கத்தினை விரும்பப்பட்ட மட்டங்களில் வைத்திருப்பதற்கும் வசதியளித்தது. திரவத்தன்மை துணையளிப்பு வசதியின் கீழ் தனியான முதனிலை வணிகர்களின் ஓரிரவு நிதியளித்தல் தேவைகளுக்கு துணையளிப்பதற்கு 2019 திசெம்பர் இறுதியளவில் ஏறத்தாழ ரூ22.6 பில்லியனை மத்திய வங்கி வழங்கியிருந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை துணைநில் வீத வீச்சில் செலுத்தும் குறிக்கோளுடன் உள்நாட்டுப் பணச் சந்தையில் போதியளவுத் திரவத்தன்மை கிடைக்கப்பெறுவதனை மத்திய வங்கி தொடர்ந்தும் உறுதிசெய்தது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளுக்கு மேலதிகமாக, சந்தை அபிவிருத்திகளைச் சார்ந்து திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கும் திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்கும் நாளாந்த அடிப்படையிலும் தவணை அடிப்படையிலும் திறந்த சந்தை தொழிற்பாடுகளில் மத்திய வங்கி முனைப்புடன் ஈடுபட்டது. அதற்கமைவாக, 2019 திசெம்பர் இறுதியில் சந்தைத் திரவத்தன்மையானது ஏறத்தாழ ரூ. 37.8 பில்லியன் கொண்ட மிகையொன்றில் காணப்பட்டது.

அட்டவணை 8.21
**திறந்த சந்தை தொழிற்பாடுகள் மற்றும் பணச் சந்தை கொடுக்கல் வாங்கல்களின் ஒட்டுமொத்த சுருக்கம்**


| கொடுக்கல் வாங்கல்கள் | அளவு (ரூபா பில்.) | | நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் (குறைந்தது - உச்சம்) - % | |
|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2018 | 2019 |
| **பணச் சந்தை** | | | | |
| அழைப்புப் பணம் (ஓரிரவு) | 4,196 | 4,775 | 7.76 - 9.00 | 7.28 - 9.00 |
| வங்கிகளிற்கிடையிலான மீள்கொள்வனவு (ஓரிரவு) | 2,761 | 3,456 | 7.48 - 9.00 | 7.30 - 9.17 |
| **திறந்த சந்தை நடவடிக்கைகள்** | | | | |
| ***ஓரிரவு அடிப்படையில்*** | | | | |
| மீள்கொள்வனவு | 1,530 | 661 | 7.25 - 8.33 | 7.31 - 8.56 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 3,386 | 2,043 | 7.85 - 8.98 | 7.31 - 9.00 |
| திரவத்தன்மை உதவிவசதிகள் (நேர்மாற்று மீள்கொள்வனவு) | - | 23 | - | 7.46 - 7.60 |
| ***குறுகிய கால அடிப்படையில்*** | | | | |
| மீள்கொள்வனவு | 215 | 327 | 7.27 - 8.28 | 7.55 - 8.61 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 969 | 566 | 7.85 - 9.00 | 7.39 - 9.00 |
| ***நீண்டகால அடிப்படையில்*** | | | | |
| மீள்கொள்வனவு | 97 | 103 | 7.38 - 8.33 | 7.85 - 8.67 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 318 | 397 | 7.97 - 8.74 | 7.30 - 8.86 |
| ***உடனடி அடிப்படையில்*** | | | | |
| திறைசேரி உண்டியல் கொள்வனவு | 40 | 42 | 8.25 -10.10 | 7.75 - 10.50 |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | - | 48 | - | 8.47 - 9.25 |
| திறைசேரி உண்டியல் விற்பனை | 64 | - | 7.40 - 8.34 | - |
| திறைசேரி முறிகள் விற்பனை | - | - | - | - |
| **துணைநில் வசதி (கொள்கை வட்டியில்)** | | | | |
| துணைநில் வைப்பு வசதி | 4,503 | 7,489 | - | - |
| துணைநில் கடன் வசதி | 3,058 | 4,794 | - | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பணச்சந்தையின் வட்டிவீதம்


**2019இன் முதல் மூன்று மாதங்களின் போது துணைநில் வீத வீச்சின் உச்ச எல்லைக்கு அண்மித்துக் காணப்பட்ட சராசரி**

அட்டவணை 8.18
**2019இல் பணச்சந்தை திரவத்தன்மையின் நாளாந்த மாற்றங்கள் மற்றும் பங்கேற்கும் காரணிகள்**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.19
**ஓரிரவு வட்டி வீதங்களின் அசைவு மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

8

**நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம், நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளுக்கு துரிதமாக பதிலிறுத்திய அதேவேளை, முனைப்பான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதத்தினை ஏறத்தாழ துணைநில் வீதத்தின் நடுவில் செலுத்துவதற்கு உதவின.** 2018இன் பிந்திய பகுதியின் போதும் 2019இன் ஆரம்பத்தின் போதும் வெளிநாட்டுத் துறை கரிசனைகள் என்ற நோக்கில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், துணைநில் வீத வீச்சின் உச்ச எல்லையினை அண்மித்து பேணப்பட்டது. வெளிநாட்டு துறை சூழலின் மேம்படுத்தல்களுடன் உள்நாட்டுப் பணச் சந்தையில் போதிய திரவத்தன்மையினைக் கிடைக்கப்பெறச் செய்வதன் மூலம் துணையளிக்கப்பட்டு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது துணைநில் வீத வீச்சின் நடுப்பகுதியை நோக்கி நகர்வதற்கு அனுமதிக்கப்பட்டது, 2019 மே மற்றும் ஓகத்து மாதங்களின் போது கொள்கை வீதம் மொத்தமாக 100 அடிப்படை புள்ளிகளால் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், துணைநில் வீத வீச்சின் நடுப்புள்ளிக்கும் கீழ் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, விரும்பப்பட்ட மட்டத்தினை நோக்கி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை செலுத்துவதற்குப் பொருத்தமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடாத்தப்பட்டன. சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தின் ஒத்த போக்கினைத் தொடர்ந்தது. 2019 திசெம்பர் இறுதியளவில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் என்பன முறையே 7.45 சதவீதத்திலும் 7.53 சதவீதத்திலும் காணப்பட்டன.

## ஏனைய அபிவிருத்திகள்

**2019இல் இலங்கை மத்தியவங்கி தனது நாணயக் கொள்கை கருவிகளை திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் விரிவாக்கியது.** மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் ஊடாக பரந்தளவில் தொழிற்படுத்தப்படுகின்ற, தற்போது காணப்படுகின்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் ஒன்றிணைத்து திரவத்தன்மை துணையளிப்பு வசதி மற்றும் திறைசேரி முறிகளின் உடனடி ஏலங்கள் என்பவற்றினை அறிமுகப்படுத்தல் மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவ பொறிமுறைக்கு மேலும் தூண்டுதல் அளித்தது. திரவத்தன்மை துணையளிப்பு வசதியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் சமிக்ஞைப்படுத்தல் விளைவினை மேம்படுத்துவதிலும் துணையளித்ததுடன் திறைசேரி முறிகளின் உடனடி ஏலங்கள், உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவிய கட்டமைப்பு சார்ந்த திரவத்தன்மை கரிசனைகளைத் தீர்ப்பதில் வசதியளித்தன.

**நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் 2019இல் சில பிரச்சனைகளை சந்தித்த போதிலும் சந்தைத் திரவத்தன்மையினை செயற்திறன்மிக்கவாறு முகாமைசெய்வதற்கும் குறுகிய காலப் பணச் சந்தை வீதங்களின் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கும் மத்திய வங்கிக்கு இயலுமாக இருந்தது.** சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் சமமற்ற திரவத்தன்மை பரம்பல் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஏற்புடைய இணைத்தரப்பு வரையறைகள் என்பன மத்திய வங்கியிடமிருந்து சில பங்கேற்பாளர்கள் தொடர்ச்சியாக கடன்பெறுவதற்கு வழிவகுத்ததுடன் மீள்கொள்வனவுச் சந்தை மீது சில அழுத்தங்களைத் தூண்டின. எனினும், சந்தை அபிவிருத்திகளைச் சார்ந்து, மத்திய வங்கியானது வட்டி வீதங்கள் மீதான ஏதேனும் சாத்தியமான அழுத்தத்தினை தளர்த்துவதற்கு பொருத்தமான விதத்தில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்தியது. இவ்வழிமுறைகள் குறுங்காலப் பணச் சந்தை வட்டிவீதங்களின் தளம்பலில் குறைவினை விளைவித்தன. மேலும், திரவத்தன்மை துணையளிப்பு வசதியின் அறிமுகத்துடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் என்பவற்றுக்கிடையிலான இடைவெளி சாதகமாக குறைக்கப்பட்டது.

## உள்ளூர் வெளிநாட்டு செலாவணி சந்தை

**ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாய் 2018 திசெம்பர் இறுதியில் உள்ளவாறான ரூ.182.75 இலிருந்து 2019 திசெம்பர் இறுதியில் ரூ.181.63ஆக 0.61 சதவீதத்தினால் சிறிதளவு உயர்வடைந்தது.** 2018இல் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட துரிதமான பெறுமானத்தேய்வு அழுத்தத்தினைத் தணிப்பதற்காக 2018இன் பிந்திய பகுதியில் இலங்கை மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான வழிமுறைகளின் சாதகமான தாக்கத்தினால் இலங்கை ரூபாய் 2019ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் உயர்வுப் போக்கொன்றினைக் காண்பித்தது. வெளியக அழுத்தத்தினை தளர்த்தல் மற்றும் 2019இல் ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றல்களில் காணப்பட்ட அதிகரிப்பு என்பன இதற்கு மேலும் துணையளித்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் செலாவணி வீதம் மீதான அழுத்தத்தில் ஓரளவு அதிகரிப்பு மற்றும் தாக்குதல்களின் விளைவின் காரணமாக அவதானிக்கப்பட்ட சுற்றுலாத்துறைக் கணக்கு மீதான உட்பாய்ச்சல்களின் வீழ்ச்சி என்பவற்றுக்கு மத்தியில் 2019 மே இல் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதியின் தாமதமடைந்த ஆறாவது தொகுதியின் பெறுகைகள், 2019 யூன் இல் இடம்பெற்ற நாட்டுக்கான பன்னாட்டு முறி வழங்கல் என்பன ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிரான இலங்கை ரூபாய் பெறுமதியினை தக்கவைப்பதற்கு துணையளித்தன. அதற்கமைய, இலங்கை ரூபாய் 2019இன் முதலரை ஆண்டுக் காலப்பகுதியின் போது அதிகரித்த வேகமொன்றில் உயர்வடைந்தது.

8

வரைபடம் 8.20
2019 இல் ஐ.அ.டொலருக்கெதிரான ரூபாவின் அசைவு




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளை மீளத்திருப்பியதன் காரணமாக ஓகத்து மாதத்தின் போது இவ்வொட்டுமொத்த உயர்வுப் போக்கு மெதுவடைந்த போதிலும் 2019 நவெம்பரில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர், செலாவணி வீதம் மிதமான வேகமொன்றில் மீண்டும் உயர்வடைந்தது.** எவ்வாறாயினும், திசெம்பர் மாத காலப்பகுதியில் அரசாங்க பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளத்திருப்பியனுப்பப்பட்டதனால் செலாவணி வீதம் பெறுமானத்தேய்வடைந்தது. அதற்கமைய, 2019ஆம் ஆண்டின் போது ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாய் 0.61 சதவீதத்தினால் மீண்டும் உயர்வடைந்தது. மேலும், ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாயின் ஒட்டுமொத்த உயர்விற்கு இசைவாக 2019இன் இறுதியில் தந்தி மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் சராசரி ஐக்கிய அமெரிக்க டொலர் கொள்வனவு மற்றும் விற்பனைச் செலாவணி வீதம் முறையே ரூ.179.66 ஆகவும் ரூ.183.33 ஆகவுமிருந்த அதேவேளை, 2018இற்கான ஒப்பீட்டுத் தொகைகள், முறையே ரூ.180.72 மற்றும் ரூ.184.70 ஆகவிருந்தன.

**ஆண்டு காலப்பகுதியில் இந்திய ரூபாய், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, என்பவற்றிற்கு எதிராக இலங்கை ரூபாய் உயர்வடைந்தது. அதேவேளை, யப்பானிய யென் மற்றும் ஸ்ரேலிங் பவுன் என்பவற்றிற்கு எதிராக பெறுமானத்தேய்வடைந்தது.** இந்திய ரிசேர்வ் வங்கி மற்றும் அவுஸ்திரேலிய ரிசேர்வ் வங்கி என்பன வட்டி வீதத்தைக் குறைத்தமை இந்திய ரூபாய், அவுஸ்திரேலிய டொலர் என்பவற்றிற்கு எதிராக இலங்கை ரூபாய் உயர்வடைவதற்கு வழிவகுத்தது. மேலும், ஐரோப்பிய வலையத்தில் நிலவிய அரசியல் நிச்சயமின்மைகள் ஆண்டின்போது யூரோவிற்கு எதிராக இலங்கை ரூபாய் உயர்வடைவதற்கு வழிவகுத்தது. புவிசார்-அரசியல் நிச்சயமின்மை காரணமாக யப்பானிய யென்னுக்காக ஏற்பட்ட பாதுகாப்பான முதலீட்டுச் சந்தையினை நோக்கிய கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பெரிய பிரித்தானியாவின் புதிய பிரதம அமைச்சரின் நியமனத்திற்குப் பின்னர் சாத்தியமாகவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானிய வெளியேறும் (பிரிட்எக்சிட்) என்ற எதிர்பார்க்கை என்பன இலங்கை ரூபாய் 2019ஆம் ஆண்டின் போது யப்பானிய யென் மற்றும் ஸ்ரேலிங் பவுன் என்பவற்றிற்கெதிராக பெறுமானத்தேய்வடைதலுக்கு வழிவகுத்தன.

**2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தேறிய கொள்வனவாளராக விளங்கியது.** செலாவணி வீதத்தின் மிதமிஞ்சிய தளம்பல் காலப்பகுதியின் போது மிதமான விற்பனைகளுக்கு மத்தியில் சந்தையிலிருந்து அமெரிக்க டொலர்களின் தொடர்ச்சியான கொள்வனவு நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை மத்திய வங்கியினை இயலச் செய்தது. அதற்கமைய, 2019ஆம் ஆண்டின் போது மத்திய வங்கி ஐ.அ.டொலர் 593.9 மில்லியனை உள்ளீர்த்து ஐ.அ.டொலர் 206.9 மில்லியனை வழங்கல் செய்து ஐ.அ.டொலர் 387.0 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவொன்றினை தோற்றுவித்தது.

**2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி வங்கிக்கிடையிலான சந்தையில் வர்த்தக அளவுகள் 2018 உடன் ஒப்பிடுகையில் 11.3 சதவீதத்தினால் அதிகரித்தன.** வங்கிக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 17.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 19.4 பில்லியன் கொண்ட தொகையாகவிருந்தது. இதற்கு இசைவாக வங்கிக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நாளாந்த சராசரி அளவுகள் 2018இன் ஐ.அ.டொலர் 73 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 80 மில்லியனாக அதிகரித்தன. மேலும், 2019ஆம் ஆண்டுக்கான முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவானது 2018 காலப்பகுதியின் போதான ஐ.அ.டொலர் 6.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 7.7 பில்லியனாக அதிகரித்த போதிலும் உடனடிக் கொடுக்கல்வாங்கல் அளவுகள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியடைந்த தன்மையினை பிரதிபலித்து 2019இலும் மொத்த வருடாந்த அளவுகளின் 60 சதவீதமாக மாற்றமடையாதிருந்தது.

## அரச பிணையங்கள் சந்தை

**திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் 2018இன் இறுதியில் நிலவிய உயர்வான மட்டங்களில் இருந்து 2019இன் முதல் காலாண்டின் இறுதியில் கீழ்நோக்கி சீர்செய்யப்பட்டன.** எதிர்வுகூறத்தக்க வழங்கல் நாட்காட்டியுடன் கூடிய உபாய

8

அட்டவணை 8.22
**அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்**

ஆண்டுக்கான சதவீதம்

| விடயம் | முதலாந்தரச் சந்தை | | இரண்டாந்தரச் சந்தை | |
|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2018 | 2019 |
| திறைசேரி உண்டியல்கள் | | | | |
| 91 நாட்கள் | 7.75 - 10.07 | 7.45 - 9.55 | 7.61 - 9.93 | 7.40 - 9.79 |
| 182 நாட்கள் | 7.95 - 10.03 | 7.58 - 9.95 | 7.93 - 10.44 | 7.55 - 9.96 |
| 364 நாட்கள் | 8.80 - 11.25 | 8.11 - 10.99 | 8.78 - 11.15 | 8.04 - 10.91 |
| திறைசேரி முறிகள் | | | | |
| 2 ஆண்டுகள் | - | 9.79 - 10.85 | 9.05 - 11.36 | 8.46 - 11.16 |
| 3 ஆண்டுகள் | 9.55 - 11.88 | 9.65 - 10.72 | 9.32 - 11.61 | 8.86 - 11.42 |
| 4 ஆண்டுகள் | - | - | 9.37 - 11.82 | 9.37 - 11.53 |
| 5 ஆண்டுகள் | 9.44 - 11.69 | 9.83 - 11.58 | 9.45 - 11.87 | 9.56 - 11.58 |
| 6 ஆண்டுகள் | - | - | 9.53 - 11.97 | 9.79 - 11.64 |
| 10 ஆண்டுகள் | 10.20 - 12.23 | 10.23 - 11.73 | 9.72 - 12.25 | 9.94 - 11.87 |
| 15 ஆண்டுகள் | 10.05 - 10.88 | 10.59 | 9.97 - 12.37 | 10.11 - 12.01 |
| 30 ஆண்டுகள் | - | - | 10.29 - 12.39 | 10.36 - 12.15 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ரீதியான வழங்கல் ஏற்பாடுகள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீது ஏற்புடைய நியதி ஒதுக்கு தேவைப்பாடுகள் 2019 மாச்சில் 5.00 சதவீதத்திற்கு 100 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டமையின் காரணமாக மேம்பட்ட பணச்சந்தை திரவத்தன்மை மற்றும் 2019 மாச்சில் ஐ.அ.டொலா் 2.4 மில்லியனுக்கான நாட்டுக்கான பன்னாட்டு முறி விநியோகங்களின் மூலம் தோன்றிய சாதகமான சந்தை எண்ணப்பாங்குகள் என்பன 2019இன் முதலாவது காலாண்டின் போது குறுகிய கால அரச பிணையங்கள் சந்தையின் விளைவு வீதங்களின் கீழ் நோக்கிய சீராக்கங்களுக்கு பங்களிப்பு செய்த முக்கிய காரணிகளாகும். கடன்களுக்கான கேள்வி குறைவடைந்தமையால் வங்கித்தொழில் துறையின் மிகையான நிதியங்கள் திறைசேரி உண்டியல்கள் போன்ற இடர்நேர்வற்ற முதலீடுகளிற்கு திருப்பியமையும் விளைவு வளையின் கீழ்நோக்கிய சீராக்கங்களுக்குப் பங்களித்திருந்தது. 2019 மே மற்றும் ஓகத்து மாதங்களில் துணைநில் வைப்பு மற்றும் கடன்வழங்கல் வசதி வீதங்கள் என்பனவும் கீழ்நோக்கி சீர்செய்யப்பட்டிருந்த மத்திய வங்கியின் தொடர்ச்சியான தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலை, சந்தை விருப்பத்திற்கிசைவாக அடிப்படை அளவு முதிர்ச்சிகளின் வழங்கல் மற்றும் 2019ஆம் ஆண்டுக்காக ஐ.அ.டொலா் 2.0 பில்லியனுக்காக 2019 யூனில் இலங்கை அரசாங்கம் பன்னாட்டு மூலதன சந்தைகளில் இரண்டாவது தடவையாக வெற்றிகரமாக நுழைந்தமையுடன் ஒன்றிணைந்த வளங்கள் கிடைக்கப்பெறும் தன்மை என்பன உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட அழுத்தத்தினை மேலும் தளர்த்தியதுடன் இதன் விளைவாக 2019இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டின் போது அரசாங்கப் பிணையங்களின் குறுகிய கால வட்டி வீதங்களில் படிப்படியான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. 2019இன் இறுதி மற்றும் 2020இன் ஆரம்பத்தில் தரப்படுத்தல் முகவராண்மைகளால் மூலம் கொடுகடன் தரமிடல் கீழ்நோக்கி குறைக்கப்பட்டதற்கு பிந்திய காலத்தில் வீதங்கள் குறைவான வேகத்தில் மேல்நோக்கி நகர ஆரம்பித்த போதிலும், கீழ்நோக்கிய சீராக்கல் நான்காவது காலாண்டிலும் தொடா்ந்தும் இடம்பெற்றது. ஐக்கிய அமெரிக்காவில் தொடா்ச்சியான வளா்ச்சி மற்றும் சாதகமான பொருளாதாரத் தோற்றப்பாடு என்பவற்றின் பிரதான காரணமாக இலங்கை உட்பட வளா்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் விலகல், 2018இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியளவில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பனவற்றின் வெளிநாட்டு உடமைகளில் குறைவிற்கு வழிவகுத்தது.

அட்டவணை 8.23
**திறைசேரி முறிகளின் முதன்மைச் சந்தை வழங்கல்கள்**

| ஆண்டு | வழங்கப்பட்ட தொகை (ரூ.பில்) | | |
|---|---|---|---|
| | ஏலம் | முன்வைக்கப்பட்டது | மொத்தம் |
| 2016 | 654 | 9 | 664 |
| 2017 | 536 | 13 | 549 |
| 2018 | 763 | - | 763 |
| 2019 | 798 | - | 798 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**ஆண்டின் போது பின்பற்றப்பட்ட படுகடன் முகாமைத்துவ உபாயங்கள், பிரதானமாக அரசாங்கப் பிணையங்களுக்கான சந்தைக்கான நிலையான தோற்றப்பாட்டை பேணுவதனை நோக்கமாகக் கொண்டிருந்தன.** அதற்கமைய, 2018 ஒத்தோபா் தொடக்கம் 10.00 சதவீத மட்டங்களுக்கு மேல் இருந்த அடிப்படையளவு 364-நாள் திறைசேரி உண்டியல் விளைவு வீதம் 2019 சனவரி முற்பகுதியில் 10.00 சதவீத மட்டங்களுக்கு கீழ் வீழ்ச்சியடைந்ததுடன் 2018இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் 275 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், 91-நாள், 182-நாள் மற்றும் 364-நாள் முதிா்வு திறைசேரி உண்டியல்களுக்கான விளைவு வீதங்கள் 2019 திசெம்பா் இறுதியில் உள்ளவாறு முறையே 7.51 சதவீதம், 8.02 சதவீதம் மற்றும் 8.45 சதவீதம் ஆகக் காணப்பட்டன. மேலும், குறுகிய கால வட்டிவீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கமும் 2019 இரண்டாம் காலாண்டின் போது நடுத்தர கால திறைசேரி முறி விளைவு வீதங்களில் பிரதிபலித்தது.

அட்டவணை 8.24
**திறைசேரி உண்டியல்களின் முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்**

ஓராண்டுக்கான சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சி | | | திரண்ட ஆண்டுச் சராசரி |
|---|---|---|---|---|
| | 91-நாட்கள் | 182-நாட்கள் | 364-நாட்கள் | |
| 2014 | 6.58 | 6.57 | 6.73 | 6.68 |
| 2015 | 6.32 | 6.50 | 6.60 | 6.46 |
| 2016 | 8.26 | 9.23 | 10.20 | 9.38 |
| 2017 | 9.01 | 9.80 | 10.07 | 9.77 |
| 2018 | 8.40 | 8.58 | 9.68 | 9.36 |
| 2019 | 8.15 | 8.44 | 9.40 | 9.07 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

**திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 333.7 மில்லியன் தொகையாகயிருந்ததுடன் இது 2019ஆம் ஆண்டின் போது திறைசேரி உண்டியல்களில் ஐ.அ.டொலர் 54.5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலையும் திறைசேரி முறிகளில் ஐ.அ.டொலர் 388.2 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தது.** 2019இன் இறுதியில் உள்ளவாறு திறைசேரி முறிகளினதும் திறைசேரி உண்டியல்களினதும் செலுத்தவேண்டிய வெளிநாட்டு உடமைகள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 34.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்து 2018இன் இறுதியில் உள்ளவாறான ரூ.158.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.103.9 பில்லியன் கொண்ட தொகையாகயிருந்தது.

**அரசாங்க மிதக்கும் வீத பிணையங்களின் பாகத்தினை நிலையான வீத பிணையங்களுக்கு மாற்றி முதிர்வுக் காலத்தினை நீடிக்கும் பொருட்டு மத்திய வங்கியானது 2019 காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 621.8 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதிர்வடைகின்ற தொகைக்கெதிராக ஐ.அ.டொலர் 345.2 மில்லியனை மாத்திரம் திரட்டியதுடன் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளூடாகத் திரட்டப்பட்ட நிதியங்கள் இலங்கை அபிவிருத்தி முறிகளின் எஞ்சியிருக்கின்ற முதிர்ச்சிகளை மீளக்கொடுப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டன.** இது அரசாங்க நிதியளித்தல் தேவைப்பாடுகள் மீதான அழுத்தத்தை தளர்த்தியதுடன் உள்நாட்டுச் சந்தையில் வட்டிவீதங்களை நிலைப்படுத்தியது. 2019 ஆண்டு காலப்பகுதியில் செலுத்தவேண்டிய மத்திய அரசாங்க உள்நாட்டு நாணயப் படுகடனின் சராசரி முதிர்ச்சிக் காலமானது 2019இன் முந்திய பகுதியில் நிலவிய விளைவுக் கட்டமைப்பின் உயர்வான மட்டங்கள் மற்றும் உயர்ந்தளவிலான நிதியத் தேவைப்பாடு என்பனவற்றின் பிரதான காரணமாக 2018இன் இறுதியில் காணப்பட்ட 5.91 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 5.78 ஆண்டுகளாக குறைவடைந்தது. செலுத்தவேண்டிய திறைசேரி முறிச் சொத்துப்பட்டியலின் சராசரி முதிர்ச்சிக் காலம், 2018இன் இறுதியில் இருந்த 6.88 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் 6.82 ஆண்டுகளாகக் குறைவடைந்தது. சராசரி முதிர்ச்சிக் காலத்தின் சிறிதளவான கீழ் நோக்கிய சீர்ப்படுத்தலுக்கு 2019 காலப்பகுதியின் போது குறுகிய மற்றும் நடுத்தரக்கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளின் வழங்கல்கள் முக்கிய காரணமாக அமைந்தது.

## கூட்டாண்மை படுகடன் பத்திரச் சந்தை


**2018 இலும் பார்க்க 2019இல் வர்த்தகப் பத்திரங்களின் சந்தை ஒப்பீட்டளவில் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது.** 2019 காலப்பகுதியில், 2018இல் வழங்கப்பட்ட ரூ.1.9 மில்லியன் பெறுமதியுடைய 6 வர்த்தகப் பத்திரங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.4.2 பில்லியன் பெறுமதியுடைய 15 வர்த்தகப் பத்திரங்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. வர்த்தகப் பத்திரங்கள் தொடர்பான வட்டி வீதங்கள் 2018இல் 13.10 - 15.00 சதவீத வீச்சில் காணப்பட்ட வேளையில் 2019இல் 13.00-16.25 சதவீத வீச்சில் காணப்பட்டது. 2019 காலப்பகுதியில் மொத்தமாக வர்த்தகப் பத்திரங்களின் மூலமாகப் பெறப்பட்ட தொகையில் 79.7 சதவீதமானவை 3 மாதங்களிலும் குறைவான முதிர்ச்சியுடையவையாகவும் மிகுதி 20.3 சதவீதமானவை 12 மாதங்கள் முதிர்ச்சியுடைய வர்த்தகப் பத்திரங்களாலுமாக இருந்தது. 2018 இறுதியின் ரூ.1.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் வர்த்தகப் பத்திரங்களின் மொத்த வெளிநின்ற பெறுமதி ரூ.2.1 பில்லியனாக இருந்தது.

**கூட்டாண்மை முறிகளின் தொகுதிக் கடன்கள் சந்தையின் சுறுசுறுப்பு மட்டம் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019 காலப்பகுதியில் முன்னேற்றமடைந்திருந்தது.** 2019 காலப்பகுதியில், 2018 இன் ரூ.55.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் 15 கம்பனிகளால் ஆரம்ப பொது வழங்கல்களின் மூலம் ரூ.57.9 பில்லியன் திரட்டப்பட்டது. கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் தங்களது கூட்டாண்மை தொகுதிக்கடன்களை பதிவுசெய்துள்ள 15 கம்பனிகளில் 10 வங்கிகளாகவும் ஏனைய நிதியியல் நிறுவனங்களாகவும் காணப்பட்டன. 2019 காலப்பகுதியில் தொகுதிக்கடன்கள் நிலையான மற்றும் மாறும் வட்டி வீதங்களிற்கு வழங்கப்பட்டிருக்கும் அதேவேளையில் முன்னைய ஆண்டின் நிலையான வட்டிவீதங்களான 12.00-14.75 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2019இல் 12.30-15.50 சதவீத வீச்சில் காணப்பட்டது. 2019இல் இரண்டு உயர்வான பட்டியலிடப்பட்ட கூட்டாண்மைப் படுகடன் வழங்கல்கள் பதிவாகியிருந்ததுடன் அவை டிஎவ்சிசி வங்கியினாலும் ஹற்றன் நஷனல் வங்கியினாலும் தலா ரூ.10.0 பில்லியன் திரட்டப்பட்டிருந்தன.

## பங்குரிமைச் சந்தை

**உள்நாட்டு மற்றும் உலகளாவிய பாதகமான அபிவிருத்திச் சூழல்களுக்கிடையிலும் 2019 காலப்பகுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை கலப்பான செயலாற்றத்தைப் பதிவுசெய்துள்ளது.** 2019இல் அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 2018இன் 5.0 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளையில் ஸ்ராண்டட் அன்ட புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண் 2018இன் 14.6 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 6.3 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பிறகு உடனடியாக 3.6 சதவீதத்தால் குறைந்து மே 2019 இல் 5,200 ஐ அடைந்ததுடன் இது 2012 இலிருந்து பதிவுசெய்த மிகக் குறைவான பெறுமதியாக காணப்பட்டதுடன் பின்னர் படிப்படியாகக் கூடியது.

வரைபடம் 8.21
அனைத்து பங்கு விலைச் சுட்டெண், எஸ் அன்ட் பி எஸ் எல் 20 சுட்டெண் மற்றும் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் நாளாந்தப்புரள்வு




மூலம் : கொழும்பு பங்குச் பரிவர்த்தனை


2019 நவெம்பரில் கொழும்பு பங்கு பரிவர்த்தனைக் குறிகாட்டிகள் முதலீட்டாளர்களின் மத்தியில் காணப்பட்ட சனாதிபதி தேர்தல் தொடர்பான சாதகமான மனப்பாங்கால் உயர்ந்து காணப்பட்டன.

**2019இல் பங்குசந்தை, சந்தை மூலதனவாக்கம் மற்றும் சந்தை விலை வருவாய் விகிதத்தின் அடிப்படையில் முன்னேற்றத்தைப் பதிவுசெய்திருந்தது.** சந்தைப் புரள்வு 2018இன் ரூ.2,851.3 பில்லியனிலிருந்து 0.4 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்து 2019 இறுதியில் ரூ.2,839.5 ஆகக் காணப்பட்டது. சந்தை மூலதனவாக்கம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2018இன் 21.4 சதவீதத்திலும் பார்க்க 2019 இறுதியில் 21.5 சதவீதமான சிறிதளவு அதிகரிப்பை பதிவுசெய்திருந்ததுடன் இது ஆசிய பிராந்திய சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்படுகிறது. எவ்வாறாயினும், நாளாந்த சராசரி புரள்வு 2018இன் ரூ.833.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 காலப்பகுதியில் ரூ.711.2 மில்லியனுக்கு குறைவடைந்தது. சந்தைப் புரள்வு விசை (மொத்த சந்தைப் புரள்வுக்கும் சராசரி சந்தை மூலதனத்திற்குமான விகிதம்) 2018இன் 6.9 சதவீதத்திலிருந்து 2019இல் 6.4 சதவீதத்திற்கு மேலும் தேய்வடைந்தது. விலை வருவாய் விகிதம் 2018இன் இறுதியின் 9.7 தடவைகளுடன் உடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில் 10.8 தடவைகளாகக் ஆகக் கூடியது. இவ்விகிதம் 2019 மேயில் 8.1 சதவீதமாகக் குறைந்த பெறுமதியை பதிவுசெய்ததுடன் 2019 திசெம்பரில் 11.0 ஆன உயர்பெறுமதியைப் பதிவுசெய்திருந்தது.

**2019 காலப்பகுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்ததாயினும், 2018 உடன் ஒப்பிடுகையில் சந்தையில் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களின் அடிப்படையில் சில முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டது.** இரண்டாந்தரச் சந்தையில், 2019 ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை 2018ஆம் ஆண்டின் ரூ.23.2 பில்லியன் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் ரூ.11.7 பில்லியனை பதிவுசெய்தது. 2019 காலப்பகுதியில் இரண்டாந்தரச் சந்தையின் வெளிப்பாய்ச்சலுக்கு முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மையை பாதித்த அரசியலின் உறுதிப்பாடற்ற நிலைமை மற்றும் உயிர்த்த ஞாயிற்றுத் தாக்குதல்களினால் ஏற்பட்ட பாதுகாப்பு கரிசினைகளுமே முக்கிய காரணங்களாகும். இதற்கிடையில், மொத்தச் சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு 2018இன் 44.3 சதவீதத்திலிருந்து 2019இல் 36.4 சதவீதத்திற்கு குறிப்பிட்டளவில் குறைவடைந்தது.


**2019இல் முதலாந்தரச் சந்தை சுறுசுறுப்புக் குறைந்ததாகத் தொடர்ந்தது.** 2019இல் ஆரம்பப் பொது வழங்கல்கள் எதுவும் இடம்பெறாத வேளையில் 2018இல் இரண்டு ஆரம்ப பொது வழங்கல்கள் மூலம் ரூ.2.0 பில்லியன் திரட்டப்பட்டிருந்தது. இதற்கிடையில் 2018இன் 16 உரிமை வழங்கல்களினூடாக திரட்டப்பட்ட ரூ.42.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் 18 உரிமை வழங்கல்கள் மூலம் ரூ.31.0 பில்லியன் திரட்டப்பட்டது.

வரைபடம் 8.22
பங்கு மூலதனச்சந்தையில் வெளிநாட்டுப் பங்கேற்பு




மூலம் : கொழும்பு பங்குச் பரிவர்த்தனை

வரைபடம் 8.23
கொழும்புப் பங்கு பரிவர்த்தனையின் சந்தை மூலதனமாக்கல் (2019 திசெம்பரில் உள்ளவாறான)





மூலம் : கொழும்பு பங்குச் பரிவர்த்தனை

8

வரைபடம் 8.24

**கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பிரதான துணைத் துறைகளின் சுட்டெண்களின் வருடாந்த வளர்ச்சி**




*மூலம்* : கொழும்பு பங்குச் பரிவர்த்தனை

**2019இல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அநேகமான துணைத் துறைகளின் விலைச் சுட்டெண்கள் முன்னேற்றத்தை பதிவுசெய்திருந்தது.** 2019 திசெம்பரில் மொத்தச் சந்தை மூலதனமாக்கலின் 82.6 சதவீதத்திற்கு வங்கி, நிதியியல் மற்றும் காப்பறுதி, குடிவகை உணவு மற்றும் புகையிலை, பன்முகப்படுத்தப்பட்ட உடைமைகள் விடுதிகளும் பயணங்களும் மற்றும் தொலைத்தொடர்பாடல் துறைகள் போன்ற ஐந்து முக்கிய துணைத் துறைகள் சேர்ந்து பங்களித்துள்ளன. வங்கி, நிதியியல் மற்றும் காப்பறுதி துறைகளின் சுட்டெண் 2018, 2019 இரு ஆண்டுகளிலும் ஆண்டுக்காண்டாக 0.8 சதவீதத்தாலும் 1.0 சதவீதத்தாலும் முறையே குறைந்தது. குடிவகை உணவு மற்றும் புகையிலை சுட்டெண் மொத்த சந்தை மூலதனமயமாக்கலின் 20.8 சதவீதத்திற்கு வகைகூறுவதுடன் 2019இல் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.9 சதவீதத்தால் குறைவடைந்தது. பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள், விடுதிகளும் பயணங்களும் மற்றும் தொலைத்தொடர்பாடல் துணைத் துறைகளின் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் முன்னேற்றமடைந்தது. விடுதிகளும் பயணங்களுமான துறை 2019 ஏப்பிறலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவாக குறைவடைந்த போதிலும் 2019இன் இரண்டாம் காலாண்டில் இச்சுட்டெண் அதிகரிப்பைக் காட்டியது.

**முக்கியமான பங்குச் சந்தைகளின் அண்மைய சரிவின் தாக்கம் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் செயலாற்றத்திலும் பிரதிபலித்தது.** கொவிட்-19 இனால் உருவாக்கப்பட்ட ஆசியாவின் பங்குச் சந்தையின் கீழ் நோக்கிய சரிவுடன் இணங்கும் வகையில் 2019 மாச்சின் முன்னைய பகுதியில் கொழும்புப் பங்கு பரிவர்த்தனையின் சுட்டெண்களும் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தன. 2020 பெப்புருவரி 01ஆந் திகதியிலிருந்து 2020 மாச்சு 20ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையிலிருந்து 12.4 அமெரிக்க டொலர் மில்லியன் சந்தையின் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலாக பதிவாகியிருந்தது.

அட்டவணை 8.25

**பங்குச்சந்தையின் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்**

| விடயம் | 2018 | 2019 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (1985=100) (அ) | 6,052.4 | 6,129.2 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | -5.0 | 1.3 |
| எஸ் அன்ட்பி எஸ் எல் 20 சுட்டெண் (17.12.2014 = 1000) (அ) | 3,135.2 | 2,937.0 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | -14.6 | -6.3 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்) (அ) | 2,839.5 | 2,851.3 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) | 21.4 | 21.5 |
| சந்தை விலை வருவாய் விகிதம் (அ) | 9.7 | 10.8 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கான மொத்தப் புரள்வு (%) | 7.0 | 6.0 |
| சராசரி நாளாந்தப் புரள்வு (ரூ. மில்) | 833.6 | 711.2 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. பில்) | 200.1 | 171.4 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்) | 6,000.7 | 9,855.0 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 297 | 289 |
| அறிமுகம் செய்யப்பட்டவை (ஆ) | 1 | 2 |
| பொது மக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல்களின் எண்ணிக்கை/ விற்பனைக்கான வழங்கல்கள் (ஆ) | 2 | 0 |
| உரிமைப்பங்கு வழங்கல்களின் எண்ணிக்கை | 16 | 18 |
| உரிமைப்பங்கு வழங்கல்கள் ஊடாகவும் ஆரம்ப பொது வழங்கல் ஊடாகவும் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்) | 44.2 | 31 |

(அ) ஆண்டு முடிவில்

(ஆ) பட்டியலிடுவதினை பெற்றுக் கொள்ளுவதற்கு 3 முறைகள் உள்ளன:
அதாவது பொதுமக்களுக்கான வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம், ஏற்கனவே உள்ள பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல்கள் என்பன அவையாகும்.

*மூலம்:* கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**பங்குச் சந்தையின் சீரான நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் ஆணைக்குழு பல ஒழுங்குமுறைப்படுத்தல் அளவீடுகளை ஏற்படுத்தியிருந்தது.** பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு பங்குத் தரகர்கள் துறையின் முதலீட்டு ஆலோசகர்களின் குறைந்தபட்ச திறமையை உறுதிசெய்வதற்காக திருத்தப்பட்ட தகுதிக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் கட்டணத்திற்கெதிரான வழங்கலின் வணிக மற்றும் செயல்பாட்டு விபரக்குறிப்புகள் மற்றும் வசதிகளை கூட்டும் மாதிரியையும் முடிவாக்கியதுடன் கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கு நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை தொடங்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. கூட்டாண்மை நிர்வாக கட்டமைப்பினை திருத்தி பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் இரட்டைப் பிராஜாவுரிமை அமுல்படுத்தப்பட்டது. இதற்கு மேலாக, அரச உடமை வங்கிகளின் தொடர்ந்து மாற்றப்படக்கூடிய பட்டியலிடலுக்காக பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அனுமதியளிக்கப்பட்ட பாசல் III கட்டமைப்பை உருவாக்கியது.

## 8.5 அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினைப் பெறுவதற்கான அணுகுவழிகள்

**மத்திய வங்கி, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அதன் முகவர் தொழிற்பாட்டினை நிறைவேற்றும் விதத்தில், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் பல்வேறு கொடுகடன் திட்டங்களையும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனூடாக அபிவிருத்தி நிதி மற்றும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.** இந்நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து தனிப்பட்டவர்களும் நாட்டிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளும் இலங்கை மத்திய வங்கியினால் இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட பல்வேறு வகையான மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத்திட்டங்கள் மற்றும் கொடுகடன் துணை நிரப்புப் பணிகள் என்பனவற்றினைப் பயன்படுத்தி நன்மையடைந்தன.

**ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்காக நாட்டிலுள்ள கிராமிய மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளை உயர்த்தும் நோக்குடன், மத்திய வங்கி, நாடு முழுவதிலுமுள்ள 104,238 பயன்பெறுநர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக ரூ.15,320 மில்லியன் தொகை கொண்ட சலுகை ரீதியான கொடுகடன் வசதிகளை வழங்கியதன் மூலம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக 11 மீள் நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** மொத்தமாக பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையில் 68 சதவீதம் வட்டி உதவுதொகைத் திட்டங்களுக்கானவையாக இருந்த வேளையில் எஞ்சிய மீதி 32 சதவீதமும் 2019இல் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வெவ்வேறு கடன் திட்டங்களுக்கான மீள் நிதியிடல்களாக பயன்படுத்தப்பட்டன. வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் எண்ணிக்கையினை பரிசீலனையில் கொள்ளும்போது 83 சதவீதம் வட்டி உதவுதொகைத் திட்டங்களுக்கு வகைகூறிய வேளையில் மீதியான 17 சதவீதமும் மீள் நிதியிடல் திட்டங்களுக்கு வகைகூறின. இத்திட்டங்களுக்கான நிதியிடல் மூலங்களாக முக்கியமாக இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசாங்கம், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் சார்ந்த நிதியம் என்பன காணப்பட்டன.

**நாட்டிலுள்ள வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் தொழிற்படுகின்ற இளைஞர், மகளிர் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மையாளர் ஆகியோருக்கு சலுகை அடிப்படையிலான நிதியியல் உதவிகள் மற்றும் நிதியியலல்லா உதவிகளை வழங்குவதன் மூலம் நாட்டில் அபிவிருத்தி நிதி மற்றும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதனை மேம்படுத்துவதற்காக 2019 இலும் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் "என்ரபிறைஸ் சிறிலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொண்டது.** என்ரபிறைஸ் சிறிலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 2018இன் 34,476 இலிருந்து 2019இல் 44,841 இற்கு கணிசமாக அதிகரித்ததுடன் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி 2018இன் ரூ.65,364 மில்லியனிலிருந்து 2019இல் ரூ.84,882 மில்லியனுக்கு அதிகரித்தது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதியில் 70 சதவீதம் (கடன்களின் மொத்த எண்ணிக்கையில் 54 சதவீதம்) எட்டு மாவட்டங்களிற்கு (அதாவது கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி மற்றும் குருநாகல்) பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் மீதி 30 சதவீதம் (கடன்களின் மொத்த எண்ணிக்கையில் 46 சதவீதம்) 17 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. இது, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்தங்கிய மாவட்டங்களுக்கான கடன் வழங்கலின் மீது கூடியளவு கவனம் செலுத்தப்படவேண்டிய அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்றது. 2019இல் இலங்கை அரசாங்கம் மேற்குறிப்பிட்ட கடன்களுக்கான வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகளாக ஏறத்தாழ ரூ.2,525 மில்லியன்களைச் செலுத்தியது. மேலும், நிதி அமைச்சு ஆண்டுப்பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கூரைகளில் பொருத்தப்படும் சூரிய வலு உருவாக்க தொடர் கொடுகடன் செயற்றிட்டத்திற்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் தொடர் கொடுகடன்களுக்கும் நிதியளித்தது. இதன்படி, 2019இல் குடியிருப்பாளர்களுக்கும் தொழில்முயற்சியாளர்களுக்குமாக ரூ.1,967 மில்லியன் தொகை கொண்ட 1,162 கடன்கள், கூரைகளில் பொருத்தப்படும் சூரிய வலு உருவாக்கத்திற்கான கொடுகடன் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வேளையில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் செயற்றிட்டங்களின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்காக ரூ.7,323 மில்லியன் தொகை கொண்ட 971 கடன்கள் வழங்கப்பட்டன.

**நாட்டில், தேயிலை மீள் பயிரிடுகை மற்றும் இறப்பர் புதுப் பயிரிடுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சிறுஉடமை வேளாண்மையாளர்களுக்கு சலுகை ரீதியான கடன்களை வழங்குவதற்காக 2019இல் "சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிர் அளித்தல்" என்ற பெயரில் முக்கியமானதொரு புதிய வட்டி உதவுதொகைத் திட்டம் நடைமுறைக்கிடப்பட்டது.** சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டம் பெருந்தோட்ட கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி வேளாண்மை அமைச்சின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கத்தினாலும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்டது. இச் "சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம்" சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின் "நிதியியல் வசதிக்குட்படுத்தல்

8

கிராமிய நிதிக் கூறு" இன்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டமானது 2019 இலிருந்து 2021 வரையிலான இரண்டு ஆண்டு காலப்பகுதியினைக் கொண்டிருக்கும். மத்திய வங்கி இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான முகவராக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. மீள்நிதியிடல் நடவடிக்கைகளுக்கான துணை நிரப்புச் செயலணியொன்றாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்ந்தும் காணப்பட்டன. அத்தகைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் மத்திய வங்கியினூடாக 2020ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரை விடுவிக்கப்படும். இத்திட்டத்தின் கீழான சலுகை அடிப்படையிலான கடன்களின் வழங்கல் 2020இல் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**மேலும், 2018இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் கடன் வழங்கல் நடவடிக்கைகளைத் தொடங்கிய சிறுஉடமையாளர் வேளாண்மை வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 2019இலும் அதன் செயலாற்றத்தினை சிறந்த முறையில் தொடர்ந்தது.** இது, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்டது. திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் பின்னூட்டலை பரிசீலனையில் கொண்டு, சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறு, நாட்டிலுள்ள நன்மை பெறுநர்களுக்கான தொழிற்பாட்டு வினைத்திறனையும் சிறந்த விநியோக மார்க்கங்களையும் அதிகரிப்பதற்காக மீளவமைக்கப்பட்டது. மேலும், நாட்டிலுள்ள சமூகத்தினரின் வருமான உருவாக்க நடவடிக்கைகளின் வேறுபட்ட வகைகளை அதிகரிப்பதற்காக 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 5 புதிய கடன் திட்டங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டன. சிறுஉடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் இரண்டு பகுதிகளை உள்ளடக்குகிறது. ஒரு பகுதி அரச-தனியார்-உற்பத்தியாளர்-பங்குடமை (4பி) மாதிரி, அதாவது 4பி, வேளாண் வியாபாரம் மற்றும் சுழலும் நிதிய வேளாண் வியாபார கடன் திட்டம் - 4பி தொடர்பானது, மற்றைய பகுதி பெறுமதிச்சங்கிலி நிதியிடல் இளைஞர் கடன் திட்டங்கள் மற்றும் சுழலும் நிதி இளைஞர் மற்றும் சுழலும் நிதி வருமான உருவாக்க கடன் திட்டங்களுடன் தொடர்பானது.

**நாட்டில் நிதியியல் உட்சேர்த்தலினை விருத்தி செய்வதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** உலக வங்கி குழுமத்தின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவிகளுடன் மத்திய வங்கியால் உருவாக்கப்பட்ட தேசிய நிதியியல் உட்சேர்த்தல் உபாயத்தினை நாட்டில் நிதியியல் உட்சேர்த்தலினை விருத்தி செய்வதற்கான செயன்முறையினை அதிக செயற்திறன் மற்றும் வினைத்திறன் உடையதாக்குவதற்க்கான உபாயக் கொள்கை முன்முயற்சியொன்றாகக் கருதமுடியும். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயச் செயற்றிட்டத்தின் கீழ் 2018இல் நிதியியல் வசதிக்குட்படுத்தல் கணக்கெடுப்பொன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன் இது, நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தினை உயர்த்துவதற்கான பொதுவான தோற்றப்பாட்டு அமைப்பின் தற்போதுள்ள பலத்தினையும் பலயீனங்களையும் அடையாளம் காண்பதற்காக மேலும் ஆழமாக பரீட்சிக்கப்பட்டது.

**2019இன் பிற்பகுதியில், குறிப்பாக கடன் செலுத்தத் தவறியிருக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களுக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான ஏற்கனவே பாதிக்கப்பட்ட வியாபாரங்களை விரைவுபடுத்துவதற்காக புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றினை நிறுவுவதற்கான பூர்வாங்க வேலைகள் மத்திய வங்கியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.** முன்மொழியப்பட்டுள்ள கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன் இடர்நேர்வின் ஒரு பகுதியை ஈர்த்துக்கொள்வதன் மூலமும், சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்க அவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் நிதியியல் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான அணுகுவழிகளை அதிகரிப்பதனூடாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக இடர்நேர்வுகளை பகிர்ந்துகொள்ளும் கருவியாக செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கி, குறிப்பாக நாட்டின் இளைஞர் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்களை உள்ளடக்கி தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி தொடர்பாக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

**மத்திய வங்கியானது, மிகச்சிறந்த முறையில் தொழிற்படுகின்ற தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையொன்றினூடாக தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் கொடுப்பனவுத் தேவைகளுக்கும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வெற்றிகரமாக வசதியளிக்கும் பொருட்டு நாட்டில் காத்திரமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை தொடர்ந்தும் பேணியது.** இதன்படி, தேசிய கொடுப்பனவு முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற முறையில் மத்திய வங்கி தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுடன் இணைந்து இடர்நேர்வுகளை காத்திரமான முறையில் தணிப்பதன் மூலம் நிதியியல் முறைமையின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை திறமையாக நடத்தியது.

8

**அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையையும் பத்திரமற்ற அரச பிணையங்களின் தீர்ப்பனவு முறைமையான லங்கா செக்குவர் முறைமையினையும் லங்கா செட்டில் முறைமையானது உள்ளடக்கியுள்ளது.** ஆண்டின் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில், நாட்டின் ஒரேஒரு பாரிய பெறுமதிகளுக்கான இலத்திரனியல் கொடுப்பனவு முறையாக விளங்கும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை காத்திரமான விதத்திலும் வினைத்திறனுடனும் தொழிற்பட்டது. 2019இல் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 428,161 கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்து 5.60 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. பெறுமதி நியதிகளில், மொத்த காசல்லா கொடுப்பனவுகளில் அதேநேர மொத்தக் கொடுக்கல்வாங்கல்களின் பங்கு 2019இல் 87.5 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் திரவத்தன்மை இடர்நேர்வினைக் குறைப்பதற்காக, மத்திய வங்கி, பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அரச பிணையங்களின் பிணையுறுதிக்கெதிராக வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இதற்கமைவாக இவ்வாண்டுப்பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்கள் வியாபார நாளொன்றிற்கு சராசரியாக ரூ.63 பில்லியன் கொண்ட பெறுமதியினைப் பயன்படுத்தினர். 2019 இறுதியில் லங்கா செக்குவரில் வைக்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதியானது ரூ.897.7 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்களையும் ரூ.4,686.5 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளையும் உள்ளடக்குகின்ற ரூ.5,584.2 பில்லியன் (முகப்புப் பெறுமதி) தொகையினை எட்டியது.

**ஆண்டின் மீளாய்விற்குரிய காலப்பகுதியில், நாட்டின் காசோலை தீர்ப்பனவு முறைமையில் தொழிற்படுகின்ற லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் சுமுகமாக தொழிற்பட்டது.** லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் ரூ.9,863 பில்லியன் பெறுமதியான 46.8 மில்லியன் மொத்த அளவினைக் கொண்ட காசோலைகளைத் தீர்ப்பனவு செய்ததுடன் இது நாட்டின் மொத்த காசல்லா கொடுப்பனவுகளின் பெறுமதியில் 7.4 சதவீதத்திற்கு வகைகூறியது. 2018 உடன் ஒப்பிடுகையில், காசோலை தீர்ப்பனவு முறைமையூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த அளவு 7.1 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் 2019இல் மொத்தப் பெறுமதி 6.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 8.26

**கொடுப்பனவு முறைமையினூடான கொடுக்கல்வாங்கல்கள்**

| கொடுப்பனவு முறைமை | 2018 (அ) | | 2019 (ஆ) | |
|---|---|---|---|---|
| | அளவு ('000) | பெறுமதி (ரூ. பில்.) | அளவு ('000) | பெறுமதி (ரூ. பில்.) |
| பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் | | | | |
| அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை | 405 | 100,473 | 428 | 117,151 |
| சில்லறைப் பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் | | | | |
| பிரதான காசோலை கொடுத்து தீர்த்தல் முறைமை | 50,352 | 10,528 | 46,802 | 9,863 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 32,943 | 1,972 | 36,612 | 2,104 |
| கொடுகடன் அட்டைகள் | 43,600 | 242 | 50,969 | 277 |
| வரவு அட்டைகள் | 56,595 | 159 | 71,096 | 195 |
| இணைய வங்கி | 26,930 | 2,939 | 36,483 | 3,875 |
| தொலைபேசி வங்கி | 8,176 | 143 | 17,630 | 339 |
| தபால் கருவிகள் | 1,022 | 6 | 906 | 6 |
| **மொத்தம்** | **220,023** | **116,462** | **260,926** | **133,810** |
| **ஐ.அ.டொலர் காசோலை கொடுத்து தீர்த்தல் முறைமை** | **51** | **36** | **50** | **49** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் போன்ற சில்லறை மொத்தக் கொடுப்பனவுகளை பிரதானமாக வசதிப்படுத்துகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை 2019ஆம் ஆண்டுப்பகுதியில் வினைத்திறனுடன் தொடர்ந்தும் தொழிற்பட்டது.** கொடுப்பனவுகளின் அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டு நியதிகளிலும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள் முறையே 11.1 சதவீதத்தினால் ரூ.36.6 மில்லியனுக்கும் 6.7 சதவீதத்தினால் ரூ.2,104 பில்லியனிற்கும் வளர்ச்சியடைந்தன.

**2019இல் "லங்காபே" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் தொழிற்படும் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளி, குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்ததுடன் பொதுவான விற்பனை மைய ஆளியொன்றினையும் அறிமுகப்படுத்தியது.** மேலும், பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி எனப் பெயர் கொண்ட ஏனைய மூன்று ஆளிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதன் கொடுக்கல்வாங்கல்களின் அளவு முன்னைய ஆண்டினைவிட கூடுதலாக அதிகரித்தது. உறுப்பினர் நிதியியல் நிறுவனங்களின் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை இணைக்கின்ற பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி அதன் வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்து பணத்தை மீளப்பெறவும் மீதிகளின் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அத்தகைய நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களை இயலச்செய்கிறது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல், பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல்களின் அளவும் பெறுமதியும் முறையே 17.2 சதவீதத்தினால் 47.4 மில்லியனுக்கும் 23.4 சதவீதத்தினால் ரூ.425.2 பில்லியனுக்கும் அதிகரித்தன. 2019 இறுதியில், தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி வலையமைப்பிற்கு இணைக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 30 ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தது. தமது சொந்த அட்டை முகாமைத்துவ முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கு இயலுமையினைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்களுக்கு அட்டை முகாமைத்துவம் மற்றும் தன்னியக்கக்

கூற்றுப்பொறிக் கொடுக்கல்வாங்கல் வழிப்படுத்தல் சேவைகளை வழங்குவதற்கு 2015இல் ஆரம்பிக்கப்பட்ட பகிரப்பட்ட தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வு காலப்பகுதியின் போது அதன் தொழிற்பாடுகளை சீராக முன்னெடுத்தது.

**பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியானது தன்னியக்கக் கூற்றுப்பொறி, இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத்தொலைபேசி வங்கித்தொழில், கிசோக் மற்றும் கருமபீடத் தொழிற்பாடுகள் போன்ற பல்வேறு கொடுப்பனவு வழிப்படுத்தல்களைப் பயன்படுத்தி ஆளிப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு வசதிகளிற்கு பொதுவான உட்கட்டமைப்பொன்றின் ஊடாக உறுப்பு நிறுவனங்களிடையே அதேநேர சில்லறை நிதிய மாற்றல்களுக்கு வசதியளிக்கின்றது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 2019இல், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 104.6 சதவீதத்தினால் 14.8 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல்கள் 109.4 சதவீதத்தினால் ரூ.1,382.8 பில்லியனுக்கு அதிகரித்தது. அரசாங்க நிறுவனங்களுக்கு அதேநேர கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு லங்காபே அதேநேர கொடுப்பனவுத் தளமொன்று 2017இல் ஆரம்பிக்கப்பட்டது. லங்காபே அதேநேர கொடுப்பனவுத் தளம் தற்பொழுது இணையவழி அதேநேர கொடுப்பனவு வசதிகளை இலங்கைச் சுங்கத்திற்கு வழங்கிவருகிறது. 2019இன் இறுதியிலுள்ளவாறு அதேநேர கொடுப்பனவு வசதிகளை வழங்குவதற்கு 13 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஒரு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்பன லங்காபே இணையவழிக் கொடுப்பனவுத் தளத்துடன் இணைந்து கொண்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் ரூ.34.3 பில்லியன் கொண்ட மொத்தப் பெறுமதியுடன் கூடிய 37,238 கொடுக்கல்வாங்கல்கள் லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினூடாக செயன்முறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பவற்றுக்கான வேலை நாளொன்றுக்கான தீர்ப்பனவுச் சுழற்சிகளின் எண்ணிக்கை பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பவற்றுக்கான கொடுக்கல்வாங்கல்களின் விரைவான தீர்ப்பனவையும் கொடுத்துத் தீர்த்தலையும் இயலச்செய்யும் பொருட்டு நான்காக அதிகரிக்கப்பட்டது. இம்முறைமைகளின் சீரான தொழிற்பாடுகளை உறுதிசெய்யும் பொருட்டு ஆரம்பப் பங்கேற்பாளர்களுக்கான பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பவற்றின் குறைந்தபட்ச பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை மத்திய வங்கி விதித்தது.

**உள்நாட்டு கொடுப்பனவு அட்டை கொடுக்கல்வாங்கல்கள் மீது அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கும் வணிகர்களுக்கும் ஏற்படுகின்ற செலவுகளைக் குறைப்பதன் மூலம் அட்டைக் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் நிதியியல் வசதிகளுக்குட்படுத்தலை இயலுமைப்படுத்தும் யப்பான் பன்னாட்டு கொடுகடன் பணியகத்தின் பங்கேற்புடன் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்பட்ட தேசிய அட்டைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.** 2019ஆம் ஆண்டுப்பகுதியில் பல நிதியியல் நிறுவனங்கள் தேசிய அட்டைத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவு அட்டைகளை வழங்கத் தொடங்கியிருந்தன. இதற்கு மேலாக தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளிற்காக விற்பனை மைய முனைக்கோடிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆளிப்படுத்தல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் வசதிகளை வழங்குகின்ற விற்பனை மைய ஆளியுடன் நான்கு உரிமம்பெற்ற நிதியியல் கையேற்பாளர்கள் இணைந்துகொண்டனர்.

**2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் மத்திய வங்கி அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது.** அதற்கமைய, ஒழுங்குவிதியின் நியதிகளுக்கமைய பற்று அட்டைகளின் வழங்குநர்களாகத் தொழிற்படுவதற்கு உரிமமளிக்கப்பட்ட மூன்று நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் அட்டை வழங்குநராகத் தொழிற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட அதேவேளை, கொடுகடன் அட்டைகளின் நிதியியல் கையேற்பாளரொருவராகத் தொழிற்படுவதற்கு மற்றுமொரு நிதியியல் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்பட்டது.

**நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில் மத்திய வங்கி தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் காணப்படும் இடர்நேர்வுகளைக் குறைக்கும் பொருட்டு அதன் மேற்பார்வைத் தொழிற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்ததுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியது.** இலத்திரனியல் கொடுப்பனவு மாதிரிகளைப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்டுக் காணப்படும் இடர்நேர்வுகளைப் பரிசீலனையில் கொண்டு இலங்கை மத்திய வங்கி இலத்திரனியல் கொடுப்பனவு மாதிரிகளைப் பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் நிறுவனங்களினால் அதேநேர அடிப்படையில் அறிவிப்புக்களை வழங்குவது தொடர்பில், இலத்திரனியல் கொடுப்பனவுச் சாதனங்களுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கையொன்றை விடுத்தது.

இதற்கமைய, இலத்திரனியல் கொடுப்பனவுச் சாதனங்கள்/ பொறிமுறைகள் ஊடாக கொடுப்பனவுப் பணிகளை வழங்கும் பொழுது வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்கு பொருத்தமான தொடர்பூட்டல் முறையொன்றினை பயன்படுத்துமாறு நிதியியல் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. மேலும், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தப்படும் செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தர நியமங்களை நிர்ணயிப்பதற்கு கொடுப்பனவுடன் தொடர்புடைய செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தரநியமங்கள் மீதான வழிகாட்டலுக்கு இணங்கியொழுகுவதனை கண்காணித்தது.

**கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான தொழிற்துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்பு குழுவான தேசிய கொடுப்பனவுச் சபையானது டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம், திறந்த பிரயோக நிகழ்ச்சித்திட்ட இடைமுகம் மற்றும் மெய்நிகர் வங்கித்தொழில் போன்ற புதிய புத்தாக்கங்களின் மீது பொதுமக்களிடையே விழிப்புணர்வினை அதிகரிப்பதன் மூலம் எண்ணிம கொடுப்பனவுகளை பெருமளவிற்குப் பயன்படுத்தப்படுவதனை பிரபல்யப்படுத்துவதன் மீதும் கவனம் செலுத்துவதற்காக பின்டெக் அபிவிருத்திகளின் மீது பல குழுக்களை நியமித்தது.** காசுப் பயன்பாடு குறைந்த சமூகமொன்றிற்கு மாறிச்செல்வதன் மீது கவனம்செலுத்தும் விதத்தில் தேசிய கொடுப்பனவுச் சபை புத்தாக்கக் கொடுப்பனவுச் சாதனங்களுக்கு வசதியளித்தல், இ-கொடுப்பனவுகளை ஊக்குவித்தல், கொடுப்பனவுப் பொறிமுறைகளிடையேயான தரப்படுத்தல்களையும் இடைத்தொடர்புகளையும் அதிகரித்தல், கொடுப்பனவு முறைமைப் பாதுகாப்பினை வலுப்படுத்தல், கொடுப்பனவு முறைகள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கி 2020-2022ஆம் ஆண்டிற்காக வழிகாட்டலொன்றினை இறுதிப்படுத்தியது.

**“லங்கா கியுஆர்” என்ற தேசிய விரைவு பதிலிறுப்புக் கியுஆர் குறியீட்டு மாதிரிப்படுத்தல் வர்த்தக நாமத்தினை கொடுக்கல்வாங்கல் செலவுகள் இல்லாமல் வாடிக்கையாளர் வசதியையும் பாதுகாப்பினையும் உடனடிக் கொடுப்பனவு அறிவித்தல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்காகவும் விடுக்கப்பட்ட வேளையில் குறைந்த ஏற்பாட்டுச் செலவு மற்றும் கொடுக்கல்வாங்கல் செலவு காரணமாக கூடியளவு வணிகர்கள் கையேற்பாளர்களாக இணைவதனை ஊக்குவிக்கின்ற வேளையில் வணிகர்களுக்கு பேணல் செலவுகள் சேர்க்கப்படமாட்டாது என்பதுடன் வேறுபட்ட கொடுப்பனவுப் பொறிமுறை மற்றும் சாதனங்களின் இயங்குதன்மையினையும் உறுதிப்படுத்துகிறது.** ஆண்டின் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் பல நிதியியல் நிறுவனங்களும் “லங்கா கியுஆர்” இனை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுச் சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.

**மத்திய வங்கி பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பினை நிறுவியிருக்கிறது. இது புத்தாக்கங்களை மேற்கொள்வோர் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை மீறாமல் தமது சாதனங்களையும் பணிகளையும் பரிசோதித்துக் கொள்வதற்கான வசதிகளை வழங்குகின்றது.** பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பான கூடியளவு வினைத்திறன் மிக்க நிதியியல் இடையேற்பாடுகளையும் பெருமளவு நிதியியல் வசதிக்குட்படுத்தும் தன்மைகளையும் **எண்ணிம** மயப்படுத்துவதனூடாக காசற்ற சமூகத்தினை உருவாக்குவதனையும் ஏற்படுத்தக்கூடிய உத்வேகம் மிக்க நிலைத்திருக்கக்கூடிய புத்தாக்கங்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

**கொடுப்பனவுத் தொழில்துறையில் காணப்படும் புதிய தொழில்நுட்ப அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி இலங்கையில் நிதியியல் தொழில்துறையில் எண்ணிம பேரேட்டு தொழில்நுட்பத்தினைப் பிரயோகிப்பதற்கான சாத்தியங்கள் பற்றி மதிப்பிடுவதற்காக எண்ணிம பேரேட்டு தொழில்நுட்பம் தொடர்பில் தொழிற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்தது.** குழுவின் விதந்துரைப்புக்களின்படி மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களில் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் செயன்முறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கக்கூடிய எண்ணிம பேரேட்டு தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்வதற்காக நிரூபித்தல் கருதுகோளொன்றினை உருவாக்குவதனை முன்னெடுத்தது. இது இலங்கையில் நிதியியல் உட்சேர்த்தலை அதிகரிக்கக்கூடிய விதத்தில் நிதியியல் துறையில் வினைத்திறனை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை மத்திய வங்கி 2020ஆம் ஆண்டினை எண்ணிம கொடுக்கல்வாங்கல்களுக்கான ஆண்டாக அறிவித்தது.** செய்தித்தாள் விளம்பரங்கள், நேர்காணல்கள், பத்திரிகை மாநாடுகள், வானொலி ஒலிபரப்புக்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி வணிகர்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள ஊழியர்கள் உட்பட பொதுமக்களிடையே விழிப்புணர்வினை மேம்படுத்தும் குறிக்கோளுடன் இம் முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. மேலும் நாடு முழுவதிலும் எண்ணிம கொடுக்கல்வாங்கல்கள் - ஆண்டு தொடர்பில் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்காக குழுவொன்றினையும் நியமித்தது.

**மேலும், செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமையில் பேணப்படும் பெட்டக கணக்கில் வைத்திருக்கப்படும் உயர்ந்தபட்சத் தொகையினை ரூ.25,000**

8

**இலிருந்து ரூ.50,000 இற்கு அதிகரித்தமையானது அனைத்து உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் தொடர்பான தேவைப்பாட்டினையும் பூர்த்திசெய்துள்ள வேளையில், இ-பணக் கணக்குகளின் எண்ணிக்கை தனிப்பட்டவர் பெறுமதி சேமிப்பு வரையறை, நாள் வரையறைகள் மற்றும் வாடிக்கையாளர் இ-பணக் கணக்குகளுக்கு ஏற்புடைத்தான கொடுக்கல்வாங்கல் வரையறைகள் தொடர்பில் சுற்றறிக்கையினை விடுத்ததன் மூலம் இ-பணக் கணக்கு உடமையாளர்களினால் பயன்படுத்தப்படும் செல்லிட வலையமைப்பினைக் கருத்திற்கொள்ளாமல் தனிப்பட்ட ஒருவருக்கு ஒரு இ-பணக் கணக்கு என்ற விதத்தில் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணக் கணக்கு இணைப்பிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.**

## பணம் தூயதாக்கலை எதிர்த்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல்

**2019ஆம் ஆண்டில் இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவானது பயங்கரவாத நிதியளித்தலைத் தடுத்தல் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான நடவடிக்கைகளை பலப்படுத்தும் பன்னாட்டு நியமங்களுக்கமைவாக நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்த ஒருமைப்பாட்டையும் உறுதித்தன்மையையும் பாதுகாப்பதற்கு தன்னுடைய செயற்பாடுகளை ஆற்றலுடன் முன்னெடுத்தது.** நிதியியல் உளவறிதல் பிரிவானது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை முறியடிப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையமாக அதன் முதன்மை வகிபாகத்தில் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய அறிக்கையிடுகின்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டத்திற்கு புறம்பான செயற்பாட்டினை புரிதலுடன் தொடர்புபடக்கூடிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் மீது சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபடுகின்ற நிதிசார் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றது. சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் அவசியமானவிடத்து பெறுபேறுகள் சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் மொத்த எண்ணிக்கையானது 2018 காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற 1,020 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 2019இன் போது 2,806 ஆக கணிசமானளவால் அதிகரித்தது. தொழிற்பாட்டு மற்றும் உபாய பகுப்பாய்வின் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் 2018இன் போது ஆற்றுப்படுத்தப்பட்ட 338 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் 2019இன் போது மொத்தமாக 1,478 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் ஆற்றுப்படுத்தப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற அத்துடன் சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கு நிதியியல் உளவறிதல் பிரிவினால் ஆற்றுப்படுத்தப்பட்ட சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் இரண்டிலும் இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் பாரியளவில் காரணமாக அமையக்கூடியதாகயிருந்தன. ஆண்டின்போது அதன் அறிக்கையிடும் நிறுவனங்களுக்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புதல் மற்றும் சென்றடைவு நிகழ்ச்சித்திட்டங்களும் இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குப் பங்களித்தன. பொறுப்பாணைக்கேற்ப, அறிக்கையிடும் நிறுவனங்கள், நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கமைவாக ரூ.1 மில்லியன் அல்லது வெளிநாட்டு நாணயங்களில் அதற்கு சமமான குறித்துரைக்கப்பட்ட அறிக்கையிடல் அடிப்படை அளவிற்கு உட்பட்டு காசுக் கொடுக்கல்வாங்கல்களை மற்றும் இலத்திரனியல் நிதியியல் மாற்றல்களை (உள்முக மற்றும் வெளிமுக) தொடர்ந்தும் அறிக்கையிட்டன. 2019 காலப்பகுதியின் போது அறிக்கையிடல் நிறுவனங்கள் 4.9 மில்லியன் (தற்காலிகமானவை) காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் 6.6 மில்லியன் (தற்காலிகமானவை) இலத்திரனியல் நிதியியல் மாற்றல்களையும் அறிக்கையிட்டிருந்தன.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு இசைந்து செல்லும் விதத்தில் சட்டரீதியான, மேற்பார்வை மற்றும் தொழிற்பாட்டு கட்டமைப்பினை கிரமமாக மேம்படுத்துவதன் மூலம் அறிக்கையிடும் நிறுவனங்களின் இணங்குவித்தலினை அதிகரிப்பதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் பன்முகத்தன்மைகொண்ட உபாயத்தினை வலுப்படுத்தியது.** மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது ஒன்றிணைந்த மற்றும் ஒத்துழைப்பு சார்ந்த முயற்சிகளூடாக ஏனைய துறைசார் குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடனான தொடர்பினை வலுப்படுத்தியுள்ளது. 2019 காலப்பகுதியின் போது நிதிசார் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடு, வெளியிடப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடனான நிதியியல் நிறுவனங்களின் (அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குத் தரகர்கள்) இணங்குவித்தலினை மதிப்பிடுவதற்கு 32 இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த தளத்திலான பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டன. ஆண்டின் போது நிதியியல் உளவறிதல் பிரிவானது 4 பின்தொடர் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. நிதியியல் நிறுவனங்களுக்கு 32 எச்சரிக்கைக் கடிதங்களையும் 6 காரணங்காட்டல் கடிதங்களையும்

வழங்கியது. பரீசிலனையில் கொள்ளப்படுகின்ற காலப்பகுதியின் போது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம், வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகள் என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தல்களுடன் இணங்கியொழுகுவதற்கு தவறிய நிதியியல் நிறுவனங்களுக்கு எதிராக ரூபா 5 மில்லியன் தொகைக்கு விகிதாசார மற்றும் அறிவுறுத்தல் தடைகளை நிதியியல் உளவறிதல் பிரிவு விதித்தது.

**2014 தேசிய இடர்நேர்வுமிக்க மதிப்பீட்டில் பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கான உயர் இடர்நேர்வுமிக்க துறையாக இனங்காணப்பட்டிருந்த பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களின் இணங்குவித்தல் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு வழிமுறைகளை எடுத்தது.** 2019 ஆண்டு காலப்பகுதியில் பல பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் துறையின் அதாவது சூதாட்ட விடுதிகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், உண்மைச் சொத்துத்துறைகள் போன்றவற்றின் இணங்குவித்தல் மட்டத்தினை மதிப்பிடுவதற்காக 36 இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த மேற்பார்வைகள் நடாத்தப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவானது ஆண்டின் போது இணங்காணப்பட்ட குறைபாடுகளை அறிவித்து பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் துறையின் 22 நிறுவனங்களுக்கு கடிதங்களை வழங்கியதுடன் இனங்காணப்பட்ட குறைபாடுகளைச் சீர்செய்வதற்கான காலம் குறிக்கப்பட்ட நடவடிக்கை திட்டமொன்றினை வழங்கியது. அணுகுமுறையினை அதிகரிக்கும் நோக்குடன் ஆண்டு முழுவதும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் இணங்குவித்தல் கடப்பாடுகள் பற்றி அச்சு ஊடகங்களின் ஊடாக நிதியியல் உளவறிதல் பிரிவு பல எண்ணிக்கையான விளம்பரங்களை வெளியிட்டது.

**பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மேற்பார்வைச் செயன்முறையினையும் நிறுவனசார் இணங்குவித்தலினையும் வலுப்படுத்தும் நோக்குடன், நிதியியல் உளவறிதல் பிரிவானது 2019ஆம் ஆண்டின் போது சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல், ஒரு இடர்நேர்வு அணுகுமுறையின் அடிப்படையில் தொடர்ச்சியான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தினை நடாத்துதல், அதிகரித்த உரிய விழிப்புக்கவனம், பயன்பெறும் உரிமையாண்மையினை இனங்காணல் மற்றும் அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தப்பட்ட ஆட்களை அடையாளப்படுத்தல் என்பன மீது பல விதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியது.** 2019இல் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கடப்பாடுகள், பயன்பெறு உரிமையாண்மை தகவல்களை இனங்காணல் மற்றும் இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளின் நடைமுறைப்படுத்தல் என்பன மீது நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கென நிதியியல் உளவறிதல் பிரிவு 55 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. நிதியியல் உளவறிதல் பிரிவினால் நடாத்தப்பட்ட சென்றடைவு பயிற்சிகள் 2019 காலப்பகுதியின் போது ஏறத்தாழ 3,688 பங்கேற்பாளர்களைக் கொண்டிருந்தது. இதற்கு மேலதிகமாக பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த மேற்பார்வை மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு மற்றும் பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல் மீதான பரஸ்பர மதிப்பீடு மற்றும் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு என்பன மீதான இலங்கையின் அனுபவத்தினை பகிர்ந்துகொள்ளுவதற்கு 2019 திசெம்பர் 2-5 காலப்பகுதியின் போது மாலைதீவின் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்களைக் கொண்ட ஒரு ஆராய்ச்சி விஜயமொன்றுக்கு நிதியியல் உளவறிதல் பிரிவு வசதியளித்தது. பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் 40 பேராளர்களின் பங்கேற்புடன் 2019 நவெம்பர் 27-29 வரை கொழும்பில் நடைபெற்ற “கள ஆய்வுகள் ஊடாக பயங்கரவாதத்தையும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலையும் ஒடுக்குதல் அனுபவம்” என்ற தொனிப்பொருளின் கீழ் பிம்ஸ்டெக் துணைக்குழு செயலமர்வினை நிதியியல் உளவறிதல் பிரிவு வெற்றிகரமாக நடாத்தியது. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தினை ஒடுக்குதலில் இலங்கையின் அனுபவத்தினை ஏனைய பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுடன் பகிர்ந்துகொள்வதற்கு இச்செயலமர்வு வாய்ப்பளித்தது.

**தகவல் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றுக்காக வெளிநாட்டு முகவராண்மைகளுடன் வலுவான உறவுகளையும் அதிகரித்த ஒத்துழைப்பினையும் பேணிவளர்க்கும் நோக்குடன் நிதியியல் உளவறிதல் பிரிவானது 2019இல் மாலைதீவின் நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் பப்புவா நியூ கினியாவின் நிதியியல் பகுப்பாய்வு மற்றும் மேற்பார்வைப் பிரிவு என்பவற்றுடன் இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு வெளிநாட்டு இணைத்தரப்புகளுடனான மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையை 39 ஆக அதிகரித்துக் கொண்டது.** மேலும், தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளும் நோக்குடன் ஆண்டின் போது தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் இலங்கைக்கான இன்டர்போல் தேசிய மத்திய பணியகம் ஆகிய உள்நாட்டு முகவராண்மைகளுடன் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு உள்நாட்டு முகவராண்மைகளுடன் கைச்சாத்திடப்பட்ட மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையினை 11 ஆக அதிகரித்தது.

8

**2017 நவெம்பரில் "சாம்பல் பட்டியலான" நிதியியல் நடவடிக்கைச் செயலணியின்[2] இணங்குவித்தல் ஆவணத்தில் (இது உபாய ரீதியான பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் குறைபாடுகளுடன் கூடிய நாடுகளை இனங்காணுகின்றது) அட்டவணைப் படுத்தப்பட்டதிலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவும் ஏனைய ஆர்வலர்களும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் நடவடிக்கைகளில் இணங்காணப்பட்ட பல உபாய ரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நிதியியல் நடவடிக்கைச் செயலணியால் இலங்கைக்கு வழங்கப்பட்ட காலம் குறிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுவேற்றுவதனை நோக்கி பல எண்ணிக்கையான காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தன.** இவ்வழிமுறைகள் 2018ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நம்பிக்கைப்பொறுப்புச் (திருத்தம்) சட்டம், 2018ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவிச் (திருத்தம்) சட்டம் என்பவற்றை நிறைவேற்றுதல், வடகொரியா மற்றும் ஈரான் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் மீதான ஒழுங்குவிதிகள்/ பணிப்புரைகள்/ வழிகாட்டல்களை வழங்குதல், வாடிக்கையாளர்களுக்கு உரிய விழிப்புக்கவன விதிகளை வழங்குவதன் மூலம் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் செயற்பரப்பினை பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கு விரிவுபடுத்தல், நிதியியல் நிறுவனங்களினதும் பெயர் குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் துறையினதும் இடர்நேர்வு அடிப்படையில் அமைந்த பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மேற்பார்வையினை கொண்டு நடாத்துதல், அவதானிக்கப்பட்ட இணங்காமை மீது அமுலாக்க நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான விழிப்புணர்வினை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

**நிதியியல் நடவடிக்கைச் செயலணியானது நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையின் முன்னேற்றத்தினை ஆசிய பசுபிக் இணைந்த குழு ஊடாக மதிப்பிட்டது.** 2019 பெப்புருவரியில் இலங்கை அதன் நடவடிக்கைத் திட்டத்தினை கணிசமாக நிறைவுவேற்றியுள்ளது என நிதியியல் நடவடிக்கைச் செயலணி ஆரம்பத் தீர்மானத்தினை மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து, 2019 செத்தெம்பர் 16-17 காலப்பகுதியின் போது நிதியியல் நடவடிக்கைச் செயலணி, நடவடிக்கைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலினை சரிபார்ப்பதற்கு ஆசிய பசுபிக் கூட்டுக் குழுவினால் தளத்தினாலான மதிப்பீடொன்று நடாத்தப்பட்டது. பொருத்தமான விதத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தலினை நோக்கிய இலங்கையின் அரசியல் மற்றும் நிறுவனசார் கடமைப்பொறுப்பினை உறுதிப்படுத்துவதற்காக ஆசிய பசுபிக் கூட்டுக் குழு பிரதிநிதிகள், தனியார் துறை மற்றும் நிதி அமைச்சு உள்ளடங்கலாக அனைத்து தொடர்புடைய ஆர்வலர்களுடனும் நேரடி கூட்டங்களை நடாத்தியிருந்தனர். இலங்கையின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு அணியினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் 2019 ஒத்தோபரில் இடம்பெற்ற நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் முழு நிறைவான கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் சாம்பல் பட்டியலிலிருந்து இலங்கையினை அகற்றுவதற்கான தீர்மானத்தினை அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்தனர். அதற்கமைய, 2019 ஒத்தோபர் 18 அன்று இலங்கை, நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் கண்காணிப்பு செயன்முறைக்கு இனிமேலும் உட்படுத்தப்படாது என நிதியியல் நடவடிக்கைச் செயலணி அறிவித்தது. நிதியியல் நடவடிக்கைச் செயலணியினால் சாம்பல் பட்டியலிருந்து நீக்கப்பட்டமை இலங்கை மீது சாதகமான பொருளாதார மற்றும் நிதியியல் தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிதியியல் துறை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

**2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி அதற்கு அளிக்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் அதற்கு ஏற்புடையதான சட்டங்களில் முக்கிய சீர்திருத்தங்களை மேற்கொண்டது.** அதற்கிணங்க இலங்கை மத்திய வங்கி 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினை இரத்துச் செய்வதனை நோக்காகக் கொண்ட புதிய இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தை உருவாக்கியது. நிதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் போன்ற பல்வேறு பங்குதாரர்களின் உதவியுடன் 2019ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் இச்சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு மேலாக 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டம், 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கப் பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் ஆகியவற்றிற்கான திருத்தங்களும் அறிமுகம் செய்யப்பட்டன. இலங்கையின் நிதியியல் துறைக்கான விரிவான சட்டக் கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு பன்னாட்டு நிதியியல் நிலைய சட்ட மூலம், தரவுக் காப்பு சட்ட மூலம், இணையப் பாதுகாப்பு சட்டமூலம் போன்றவற்றை வரையும் செயலாக்கத்தில் பல்வேறான இயலளவுகளில் அக்கறையுடைய தரப்பினர்க்கு இலங்கை மத்திய வங்கி உதவியது.

2 நிதியியல் நடவடிக்கைகளுக்கான பணிக்குழுவானது, பேரழிவு ஆயுதங்களின் பெருக்கத்திற்கான நிதியிடல், பயங்கரவாதத்திற்கான நிதியிடல் மற்றும் பணம் தூயதாக்குதலுக்கெதிராக உலக நிதியியல் முறைமையை பாதுகாப்பதற்கு கொள்கைகளை உருவாக்குவதும் ஊக்குவிப்பதும் ஆன அரசாங்கங்களிற்கிடையேயான ஒரு சுதந்திரமான அமைப்பு

## சிறப்புக்குறிப்பு 13
## இலங்கையில் முறைசாரா பணம்கடன்வழங்கும் தொழிலை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியம்

### அறிமுகம்

பணம்கடன்வழங்குதல் என்பது பணம் கடன்வழங்குநரொருவரினால் கடன்பெறுநருக்கு பிணையுடன் அல்லது பிணையின்றி வட்டிக்குப் பணத்தினை கடன்வழங்குதல் என வரைவிலக்கணம் செய்யப்படலாம். இலங்கையில் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்நிதிக் கம்பனிகள், நுண்நிதி அரசுசாரா அமைப்புகள், கூட்டுறவு கிராமிய வங்கிகள், சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற ஏனைய நிதி நிறுவனங்கள் அத்துடன் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் என்பன பணம்கடன்வழங்குதலை பிரதானமாக மேற்கொண்டு வருகின்றன. எவ்வாறாயினும், பணம்கடன்வழங்குதலில் ஈடுபடுகின்ற தனியாட்கள், தனியுரிமையாளர்கள், பங்குடமையாளர்கள், கம்பனிகள் என்ற வடிவில் பல எண்ணிக்கையான முறைசாரா பணம் கடன்வழங்குநர்களும் நாடு முழுவதும் தொழில்படுகின்றனர்.

இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளினதும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினதும் பணம்கடன்வழங்கும் நடவடிக்கைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும்[1], முறைசாரா பணம்கடன்வழங்குநர்கள் ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதோ அல்லது மேற்பார்வை செய்யப்படுவதோ இல்லை. தற்போதுள்ள சட்டரீதியான கட்டமைப்பானது நிதியியல் இடையேற்பாட்டில் ஈடுபடுகின்ற மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்ற நோக்கில் முக்கியத்துவமிக்க நிதி நிறுவனங்கள் மீதே பிரதானமாக கவனம் செலுத்துவதாக காணப்படுகின்றது. மேலும், அச்சட்டத்தின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற பணம் கடன்வழங்குநர்களின் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்ற 1918ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணம் கடன்வழங்கல் கட்டளைச்சட்டமானது (பணம் கடன்வழங்கல் கட்டளைச்சட்டம்) பணம்கடன்வழங்குநர்களுக்கென குறித்த ஒழுங்குமுறைப்படுத்தினரையோ அன்றில் உரிமமளிக்கும்/ பதிவுசெய்யும் தேவைப்பாடொன்றினையோ கட்டாயப்படுத்தவில்லை. இதனால் பணம்கடன்வழங்கல் கட்டளைச்சட்டத்தின் கீழ் பரிகாரமொன்றினை நாடுகின்ற வாடிக்கையாளர் ஒருவர் சட்டரீதியான நடைவடிக்கைமுறையினை தொடங்கவேண்டியுள்ளது. இது கணிசமான செலவுகளையும் ஏனைய வளங்களையும் ஈடுபடுத்தக்கூடியது.

இப்பின்னணியுடன், இலங்கை மத்திய வங்கியானது நாட்டிலுள்ள முறைசாரா பணம்கடன்வழங்கும் தொழிலில் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை தாபிப்பதற்கான அவசியத்தினை இனங்கண்டுள்ளது. அத்தகைய தேவையானது இலங்கை மத்திய வங்கியின் கள விஜயங்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட அதிகளவிலான சான்றுகள் மற்றும் பணம் கடன்வழங்குநர்களின் துர்நடத்தை மற்றும் வாடிக்கையாளர் துன்புறுத்தல் பற்றி கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் என்பன மூலம் போதியளவு நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

1 உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் அத்துடன் உரிமம்பெற்ற நுண்நிதிக் கம்பனிகள் என்பன இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன நுண்நிதித் தொழிலில் ஈடுபடுகின்ற அரசுசாரா நிதி நிறுவனங்கள், தொண்டு சமூக சேவை நிறுவனங்கள் பதிவாளரினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன கூட்டுறவு கிராமிய வங்கிகள், சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன மற்றும் சமுர்த்தி சமுதாயம் அடிப்படையிலான வங்கிகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன.

### பணம்கடன்வழங்கல் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தலின் முக்கியத்துவம்

(அ) முறைசாரா பணம்கடன்வழங்குநர்களை ஒழுங்கு முறைப்படுத்தலானது வாடிக்கையாளரை பாதுகாக்கின்ற நோக்கில் முக்கியத்துவமிக்கதாகும். முறைசாரா பணம்கடன்வழங்குநர்கள் எவையேனும் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு உட்படாமையினால் அத்தகைய பணம்கடன்வழங்குநர்களின் வாடிக்கையாளர்கள் நியாயமற்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அதேபோன்று துன்புறுத்தல்களுக்கு அடிக்கடி உட்படுத்தப்படுகின்றனர். இதனால் முறைசாரா பணம் கடன்வழங்குநர்களின் வாடிக்கையாளர்கள் நம்பிக்கையினையும் நம்பகத் தன்மையினையும் இழக்க நேரிடலாம் என்பதுடன் இறுதியில் நிதியியல் பணிக்கான அணுகுவழியும் இல்லாதுபோகின்றது.

(ஆ) தற்போது முறைசாரா பணம் கடன்வழங்கும் தொழில்கள் அவற்றின் பணம் கடன்பெறுநர்கள் பற்றிய தகவல்களை இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுவதில்லை. எனவே, முறைசார்ந்த பணம் கடன்வழங்கும் நிறுவனங்கள் கடன் நம்பகத்தன்மையினை மதிப்பிடுகின்ற போது தமது வாடிக்கையாளர்கள் பற்றிய போதுமான அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம் கடன்வழங்குநர்கள் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடாமை, சில கடன்பெறுநர்கள் குறிப்பாக தவணை தவறிய வரலாற்றினை கொண்டவர்கள் தமது நிதித் தேவைகளுக்காக ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம் கடன்வழங்குநர்களை நாடுவதனை ஊக்குவிக்கின்றது. ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம்கடன்வழங்குநர்களினால் கடன்நம்பகத்தன்மை பற்றிய முறையான மதிப்பீடு செய்யப்படாமையானது அதே வாடிக்கையாளர்களுக்கு பல கடன்கள் வழங்கப்படுகின்றமைக்கு வழிவகுப்பதுடன் மிதமிஞ்சிய கடன் சுமைக்கு[2] இட்டுச்செல்கின்றது, இது பிள்ளைகளின் கல்விக்கு ஊறுவிளைவித்தல், போசாக்கின்மையினை அதிகரித்தல், வாழ்வாதாரம் இழத்தல் போன்ற பல்வேறு சமூகப் பொருளாதார இழப்புகளுக்கு இட்டுச்செல்லக்கூடியது.

(இ) நாட்டில் அதிக எண்ணிக்கையிலான முறைசாரா பணம் கடன்வழங்குநர்கள் காணப்படுகின்றமை முறைசார்ந்த பணம் கடன்வழங்கும் தொழிலில் சில சந்தர்ப்பங்களில் கடுமையான போட்டிக்கு இட்டுச் செல்வதுடன் அதேபோன்று ஒழுக்கநெறி தவறிய நடத்தைகள் மற்றும் வாடிக்கையாளர் துன்புறுத்தல் போன்றவற்றை ஏற்படுத்துகின்றது.

(ஈ) முறைசாரா பணம்கடன்வழங்குநர்கள் எவரேனும் முறையான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுவதற்கு தேவைப்படுத்தப்படாது காணப்படுகின்றபோது இலங்கையில்

2 மிதமிஞ்சிய கடன்சுமை என்பது அனைத்து படுகடன்களையும் முழுமையாகவும் உரிய நேரத்திற்கும் மீளச்செலுத்த இயலாமை என ஏழைகளுக்கு உதவுவதற்கான ஆலோசனைக் குழுவினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. https://www.cgap.org/blog/over-indebtedness-roles-and-responsibilities-all-actors

நுண் நிதித்தொழில் துறை பற்றிய தரவு சேகரித்தல் சவால்மிக்கதாகக் காணப்படுகின்றது.

(உ) இவ் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம்கடன்வழங்கும் தொழில்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றமை கொடுகடன் கொள்கைகளை குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்காக வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம்.

**பணம் கடன்வழங்கல் தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் மீதான பிராந்திய அனுபவம்**

பிராந்தியத்திலுள்ள சில நாடுகள் பணம் கடன்வழங்கல் தொழிலை பின்வருமாறு ஒழுங்குமுறைப்படுத்துகின்றன.

(அ) மலேசியாவில், பணம் கடன்வழங்குநர்கள் 1951ஆம் ஆண்டின் பணம் கடன்வழங்குநர் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) கீழ் உரிமமொன்றினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர். பணம் கடன்வழங்கல் சட்டமானது பணம் கடன்வழங்கல் தொழில்களின் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல் உள்ளடங்கலாக பணம்கடன்வழங்குதலை ஒழுங்குபடுத்துவதனை ஏற்பாடு செய்கின்றது.

(ஆ) வங்காளாதேசத்தில் நுண்கடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நுண்கொடுகடன் நிறுவனங்கள், 2006ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நுண்கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் உரிமமொன்றினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன என்பதுடன், வங்காளாதேசத்தின் நுண்கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபையினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன.

(இ) பிலிப்பைன்ஸ் மத்திய வங்கியானது உண்மைக் கடன்வழங்கல் சட்டத்தின் கீழ் (3765ஆம் இலக்க குடியரசுச் சட்டம்) வாடிக்கையாளர் பாதுகாப்பு நோக்கில் கடன் கொடுநர்களால் வழங்கப்படும் கொடுகடன் தொழிலினை ஒழுங்குபடுத்துகின்றது.

(ஈ) இந்தியாவின் ரிசேர்வ் வங்கியானது 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசேர்வ் வங்கிச் சட்டத்தின் கீழ் முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த, வைப்பு எடுக்காத, வங்கியல்லாத நிதிக்கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்றது.

**முன்மொழியப்பட்ட நுண்நிதி கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டம் (முன்மொழியப்பட்ட சட்டம்)**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட சில சிக்கல்களை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியானது முன்மொழியப்பட்ட சட்டத்தினை சட்டமாக்குவதற்கு முன்மொழிந்துள்ளது. நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட சட்டமானது நிதி அமைச்சினுள் தாபிக்கப்படவுள்ள நியதிச்சட்ட அதிகார சபையொன்றான நுண்நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினை (அதிகாரசபை) தாபிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினை இயலச்செய்கின்றது. நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி என்பவற்றிலிருந்து பதவிவழி பிரதிநிதிகளையும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினாலும் நிதியமைச்சரினாலும் பெயர் குறிக்கப்பட்டவர்களையும் உள்ளடக்குகின்ற அதிகார சபையானது நுண்நிதி நிறுவனங்களையும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம் கடன் வழங்குநர்களையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாணை வழங்கப்பட்டிருக்கும். முன்மொழியப்பட்ட சட்டமானது மேலும் நுண்நிதி வாடிக்கையாளர்களையும் பணம் கடன்வழங்கும் தொழில்களையும் பாதுகாப்பதனை ஏற்பாடு செய்யும் அதேவேளை, ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களால் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடும் தேவையினையும் அவசியப்படுத்தும். முன்மொழியப்பட்ட சட்டமானது 2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்நிதி சட்டத்தினை (நுண்நிதிச் சட்டம்) நீக்கி பதிலீடு செய்யும்.

**முடிவுரை**

பொருத்தமான வழிமுறைகள் முன்னுரிமை அடிப்படையில் தொடங்கப்படாவிடின் வாடிக்கையாளர்களின் மிதமிஞ்சிய கடன்சுமை, கொடுகடன் தகவல் பற்றி அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதல் போதாமை போன்ற முறைசாரா கடன்வழங்குநர்களுடன் இணைந்த பிரச்சனைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு போதாமை போன்றன குறிப்பிடத்தக்க சமூகப்பொருளாதார பாதிப்புக்களுக்கு வழிவகுக்கலாம். இப்பின்னணியில், முன்மொழியப்பட்ட சட்டமானது நாட்டிலுள்ள முறைசாரா மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத பணம்கடன்வழங்கும் தொழில்களில் இனங்காணப்பட்ட அத்தகைய சிக்கல்களை நிவர்த்திசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்மொழியப்பட்ட சட்டமானது உரிமம்பெற்ற நுண்நிதிக் கம்பனிகள் மற்றும் அரசசாரா நுண்நிதி அமைப்புகள் என்பவற்றுக்கான வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் காணப்படுவதன் காரணமாக சாத்தியமான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார மீறல் நேரிடக்கூடிய தற்போது காணப்படுகின்ற நுண்நிதிச் சட்டத்தில் இனங்காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலும் உதவியளிக்கக்கூடும் என்பதுடன் குறுங்கால கடன்பெறுதலுக்கான பாதுகாப்பின்மையினை தோற்றுவிக்கக்கூடிய நுண்பாக கடன்வழங்கும் நிறுவனங்களுக்கு மேலாக வைப்பு ஏற்றுக்கொள்கின்ற நுண்நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் வலியுறுத்தல்களை அளிப்பது மீது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## பலவீனமான நிதியியல் நிறுவனங்கள் மீதான தீர்மானங்கள் மற்றும் அமுல்படுத்தல் நடவடிக்கைகள்

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டம் முகாமை செய்யப்பட்ட அதேவேளையில் தீர்மானங்கள் மற்றும் அமுல்படுத்தல் செயற்பாடுகள் தொடரப்பட்டன.** “சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பீஎல்சி” மற்றும் “த ஸ்ரான்டெட் கிறெடிற் பினான்ஸ் லிமிடெட்” ஆகிய தோல்வியடைந்த நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. 2019 காலப்பகுதியில் “சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பீஎல்சி” வைப்பாளர்கள் 3,024 பேருக்கும் “த ஸ்ரான்டெட்

கிறெடிற் பினான்ஸ் லிமிடெட்” வைப்பாளர்கள் 2,309 பேருக்கும் என முறையே ரூ.1,271.4 மில்லியன் மற்றும் ரூ.947.3 மில்லியன் பெறுமதியிலான இழப்பீடுகள் செலுத்தப்பட்டன. 2020 சனவரியில் இருந்து “ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்” உடைய வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் ஆரம்பிப்பதற்க்கான அனைத்து ஆயத்தங்களும் மேற்க்கொள்ளப்பட்டிருந்தன. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் திறைசேரியிடமிருந்தான நிபுணத்துவ ஆலோசகர்களின் உதவியுடன் வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுக்கான தீர்மானமெடுத்தல் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் செயன்முறையில் மத்திய வங்கியானது ஈடுபட்டுள்ளதுடன் தீர்மானச் செயன்முறைகள் மற்றும் வைப்புக் காப்புறுதி என்பன தொடர்பில் புதிய வங்கித்தொழில் சட்ட வரைவில் ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கான முன்னாயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

**இலங்கைப் பொலிஸ் மற்றும் நிதியியல் குற்றப்புலானய்வுப் பிரிவு போன்ற சட்ட அமுலாக்கல் அதிகாரமுடைய நிறுவனங்களினதும் சட்டமாஅதிபர் திணைக்களத்தினதும் ஒத்துழைப்போடு அமுலாக்கல் நடவடிக்கைகள் தொடரப்பட்டன.** அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்தவுடன் முறையே நிதி வியாபாரச் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டம் ஆகியவற்றிற்கமைவாக சில விசாரணைகள் நடத்தப்பட்டன. நாடளாவிய ரீதியில் அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்களின் மோசமான பாதிப்புக்கள் தொடர்பில் கற்பிக்கும் நோக்கிலும் நிதியியல் எழுத்தறிவை மேம்படுத்தும் நோக்கிலும் மத்திய வங்கியால் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

## வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்ப்பார்வை

**மத்திய வங்கி நாட்டினுடைய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை தொடர்ந்தும் கண்காணித்தது.** உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை மேலும் விருத்திசெய்யும் நோக்குடன் நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டன. ஆண்டுக்காலப்பகுதியில், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் ஐ.அ.டொலர் 268.6 மில்லியனை வங்கியியல் முறைமையில் வைப்பிலிட்டதுடன் இது 2018 உடன் ஒப்பிடுகையில் 46.1 சதவீதம் குறைவானதாகும். அதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் 2019இல் ஐ.அ.டொலர் 21.6 மில்லியனை விற்பனை செய்துள்ளதுடன் இது 2018 உடன் ஒப்பிடுகையில் 47.1 சதவீதம் அதிகமானதாகும். இதன் விளைவாக, 2019இல் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினால் வெளிநாட்டு நாணயங்களின் மொத்தக் கொள்வனவு (வங்கியியல் முறைமையில் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் வைப்புக்களின் கூட்டுத்தொகை மற்றும் அவர்களின் வெளிநாட்டு நாணய விற்பனை) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 290.2 மில்லியனிற்கு 43.4 சதவீதத்தினால் குறைவடைந்தது.

**மத்திய வங்கி நாட்டினுடைய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது.** 2019ஆம் ஆண்டுப்பகுதியில், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விடுக்கப்பட்ட தற்போதுள்ள ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களை இறுதிப்படுத்தியது. மேலும், அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரவரம்பு உட்பட சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் குறிப்பிட்ட ஏற்பாடுகள் தொடர்பில் பிரச்சனைகள் மற்றும் கரிசனைகளை எடுத்துக்காட்டுவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திற்கான திருத்தங்களையும் முன்மொழிந்தது. அதேவேளை இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியமைச்சரின் மூன்று ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு வசதியளித்தது. இதன்படி, 2019இல் இலங்கை அரசாங்கம் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்கும் அது தொடர்பான கொடுப்பனவுகளை வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு செய்வதற்கும், இலங்கை அரசாங்கமும் இலங்கை அரசாங்கத்தின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் தொடர்பான அமைச்சின் ஒப்புதலுடன் இலங்கைக்கு வெளியிலிருந்து கடன்படுதவற்கும் அத்தகைய கடன் பெறுகைகளை கடன் வழங்குவோர் உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக வழிப்படுத்தாமல் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிக்கான பெறுகைகளை இலங்கைக்குள் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படுத்தப்பட்ட காலத்தினை 2019 ஒத்தோபர் 17ஆம் திகதியிலிருந்து 120 நாட்களிலிருந்து 180 நாட்களுக்கு நீடித்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதற்கும்

அட்டவணை 8.27
வெளிநாட்டு நாணய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்

ஐ.அ.டொ. மில்லியன்

| கணக்கின் வகை | உள்முக பண அனுப்பல் | வெளிமுக பண அனுப்பல் | 31.12.2019 இல் உள்ளவாறான இறுதி மீதி |
|---|---|---|---|
| தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகள் | 841.6 | 279.1 | 2,528.7 |
| வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள் | 7,660.9 | 3,174.1 | 1,335.0 |
| உள்முக முதலீட்டுக் கணக்குகள் | 2,033.9 | 2,070.8 | 1,748.7 |
| வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் | 8.0 | 54.0 | வி.கி |

வி.கி விபரம் கிடைக்கவில்லை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

அட்டவணை 8.28
ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல்வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் மற்றும் இலங்கை ரூபாவிற்கு எதிரான வெளிநாட்டு செலாவணி விற்பனையும் கொள்வனவும் - 2019

| | |
|---|---|
| **புலம்பெயர் நிதி மாற்றம்** | |
| புலம்பெயர்வதற்கான கொடுப்பனவை அனுப்புவதற்காக வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்துடன் பதியப்பட்ட ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்களின் எண்ணிக்கை | 1,353 |
| ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் ஊடாக அனுப்பப்பட்ட வெளிச் செல்லுகை | 40.7 |
| **வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்** | |
| வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் (படிவம் 1) (ஐ.அ.டொ. மில்) | 13,359.4 |
| வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் (படிவம் 2) (ஐ.அ.டொ. மில்) | 14,706.8 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இலங்கை அரசாங்கத்தினை அனுமதித்தது. மேலும் இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட ஏனைய வழிமுறைகளுடன் மேலும் இசைந்துசெல்லும் விதத்தில், 2019இன் தொடக்கப்பகுதியில், முற்பணக் கொடுப்பனவு நியதிகளின் கீழ், குறிப்பிட்ட இன்றியமையாதன அல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணிக்காக இலங்கை ரூபாவினை மாற்றிக்கொள்வது தொடர்பில் 2018இன் இறுதிப்பகுதியில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றுகின்ற விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணிப்பதற்குமான பொறிமுறையொன்றாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து தரவுகளை சேகரிக்கும்பொருட்டு அனைத்தையுமுள்ளடக்கிய எல்லை கடந்த மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் கண்காணிப்பு முறைமையொன்றினை அமுல்படுத்துவதற்கான ஆரம்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளைப் பெற்று பகுப்பாய்வு செய்வதன் மூலம் முக்கியமான கொள்கை துறைகளின் மீது பேரண்டப் பொருளாதார தீர்மானங்களை எடுப்பதற்கும் ஆதரவளிக்கப்பட்டது.

## கொடுகடன் தகவல்

**கொடுகடன் தகவல் பணியகமானது 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் 10.1 மில்லியன் கடன் தகவல் அறிக்கைகளை தொழிந்துறைக்கு விநியோகித்துள்ளதுடன் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.0 சதவீதம் என்கின்ற சிறியளவு அதிகரிப்பை பதிவு செய்தது.** 2019இல் தகவல் பணியகத்திடமிருந்து 9.3 மில்லியன் நுகர்வோர் கொடுகடன் அறிக்கைகளையும் 0.8 மில்லியன் கூட்டாண்மை கொடுடன் அறிக்கைகளையும் கடன் வழங்கும் நிறுவனங்கள் பெற்றுள்ளன.

**சுயவிசாரணைக் கொடுகடன் அறிக்கைகளிற்கான கேள்வி 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில் 7.2 சதவீதமாக தொடர்ந்தும் அதிகரிப்பைப் பதிவுசெய்தது.** 2019ஆம் ஆண்டில் 16,006 வாடிக்கையாளர்கள் சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளிற்காக பணியகத்தை நாடியிருந்ததுடன் 2,053 வாடிக்கையாளர்கள் தங்களது சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளிற்காக வங்கிகளினூடாக விண்ணப்பித்திருந்தனர். 2019ஆம் ஆண்டில் 448 புதிய நபர்கள் இணையவழி சுயவிசாரணைக் கொடுகடன் அறிக்கைகள் சேவைக்காகத் தம்மைப் பதிவுசெய்திருந்ததுடன், 1,375 பாவனையாளர்கள் தமது சுயவிசாரணைக் கொடுகடன் அறிக்கைகளை இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொண்டும் இருந்தனர். கொடுகடன் தகவல் பணியகம் தற்போது மாதாந்தம் 12 மில்லியன் கடன் வசதிகள் தொடர்பான தரவுகளை அதன் தானியங்கி மயப்படுத்தப்பட்ட கொடுகடன் தகவல் முகாமைத்துவ முறைமையினூடாகப் பெற்று செயற்படுத்தப்படுத்தி வருகிறது.

**புதிய கடன் பணியக முறைமையை அமுல்படுத்தும் செயற்பாடுகளை 2019இல் கொடுகடன் பணியகம் ஆரம்பித்தது.** இந்த தந்திரோபாய முன்முயற்சி கடன் பணியகத்தின் திட்ட நடைமுறைப்படுத்தலுக்கான தீர்வினை உள்ளடக்கியதான புதிய கடன் மதிப்பெண் திட்டம் அடங்கலாகவும் நாட்டிற்கு முதன்முறையாக அமுல்படுத்தப்பட்டதொன்றாகவும் இலங்கையின் சுறுசுறுப்பான நிதியியல் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனும் உருவாக்கப்பட்ட திட்டமான மொத்தக் கடன் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பிலும் மாற்றத்தைக் கொண்டு வருவதனையும் உள்ளடக்கும். கொடுகடன் பணியகமானது இந்த புதிய திட்டத்தை 2020இன் பிற்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளது.

**2019 திசெம்பரில் புதிய கொடுகடன் பணியக முறைமை நிகழ்நிலைக்குவரும் வரைக்கும் இடைக்காலத் தீர்வாக கொடுகடன் பணியகமானது இலங்கைக்கான முதலாவது கடன் மதிப்பெண் திட்டமான கடன் பணியகத்தின் கடன் மதிப்பெண்ணை படுகடன் பணியகத்தின் மதிப்பெண் எனப் பெயரிட்டு தனது சமீபத்திய சாதகமாக தொடக்கி வைத்தது.** கடன் மதிப்பெண்ணின் தொடக்கமானது உலக வங்கியின் வணிக செயலாற்றக் தரவரிசை குறிகாட்டியின் மீதான நாட்டின் நிலைமையை முன்னேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தரவரிசை நாட்டின் முதலீட்டுச் சூழல் மற்றும் அதன் பொருளாதார போட்டித்தன்மை போன்றவற்றை பல்வேறுபட்ட சர்வதேக முதலீட்டாளர்கள் அளவிடும் போது முக்கியமான சர்வதேச அளவுகோலாகக் காணப்படுகின்றது. கொடுகடன்

பணியகத்தின் மதிப்பெண்ணானது 250 இற்கும் 900 இற்கும் இடைப்பட்ட வீச்சில் அமைந்துள்ளதுடன் கடன்வழங்கும் நிறுவனங்களிற்கு கடன் இடர்நேர்வு மட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட சீரான அறிகுறியையும் வழங்குவதுடன் குறிப்பிட்ட கடனாளியின் நிகழ்தகவினையும் கடன் மதிப்பினையும் மதிப்பீடு செய்யும் நோக்கையும் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் எல்லா தனிநபர்களினதும் கொடுகடன் பணியகத்தின் மதிப்பெண் கடன்வழங்கும் நிறுவனங்களிற்குக் கிடைக்கத்தக்கதாக்கப்பட்டது. 2020 காலப்பகுதியில் கொடுகடன் பணியகம் தனது அங்கத்துவ கடன் வழங்கும் நிறுவனங்களிற்கு "கூட்டாண்மையின் கொடுகடன் பணியகத்தின் மதிப்பெண்ணை" வெளியிடுவதற்கும் திட்டமிட்டுள்ளது. பின்னர், பொதுமக்கள் தங்களது கடன் மதிப்பெண்ணைக் கொடுகடன் பணியகத்தின் மூலமோ அல்லது தாங்கள் விரும்பிய நிதியியல் நிறுவனத்தின் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.

8

அட்டவணை 8.29

வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக்குவிடும் கம்பனிகள் மீது அண்மைக்காலத்தில் இலங்கை மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட முக்கிய முன்மதியுடைய அளவீடுகள்

| திகதி | முன்மதியுடைய அளவீடுகள் |
|---|---|
| 2016 சனவரி 18 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் புதிய கிளைகள் மற்றும் தன்னியக்கக்கூற்றுப் பொறிகளை ஆரம்பித்தல், கிளைகள் மற்றும் பணிநிலையங்களை மூடிவிடுதல் மற்றும் வேறு இடங்களில் அமைத்தல் என்பன தொடர்பில் ஏற்கனவே உள்ள கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2016 ஒத்தோபர் 28 | உரிமமளிக்கபட்ட நிதிக் கம்பனிகளால் வழங்கப்படக்கூடிய வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர் வட்டிவீதங்கள் தொடர்பான பணிப்புரை திருத்தியமைக்கப்பட்டது. |
| 2016 திசெம்பர் 29 | உரிமம்பெற்ற வங்கிகள் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான குறைந்தளவு மூலதன விகிதங்கள் மற்றும் தாங்கியிருப்புகளைப் பேணுவதான பாசல் III தேவைப்பாட்டிற்காக 2017 யூலை 01 இலிருந்து ஆரம்பிக்கும் முகமாக பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |
| 2017 சனவரி 13 | 2017 சனவரி 16 இலிருந்து ஊர்திகளின் கொள்வனவு மற்றும் பயன்பாட்டு நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளிற்கான கடன் பெறுமதி விகிதத்தை அறிவிக்கும் முகமாக பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வெளியிடப்பட்டன. |
| 2017 சனவரி 13 | 2017இற்கான பாதீட்டு பிரேசனைகளுக்கு இணங்க வந்து ஊர்திகளுக்கான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கு கடன் தொழிலில் அனுமதியளிக்கப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2017 பெப்புருவரி 23 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிற்கான குறைந்தளவு மைய மூலதனத்தினை 2021 ஆரம்பமளவில் ரூ.2.5 பில்லியனுக்கு படிப்படியான அடிப்படையில் அதிகரிப்பதற்கான பணிப்புரை வெளியிடப்பட்டது. |
| 2017 மாச்சு 22 | 1998 செத்தெம்பர் 07ஆம் நாள் விடுவிக்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளைத் திருத்துகின்ற விதத்தில் வா்த்தக வங்கிகளிற்கு நிா்ணயமொன்று விடுக்கப்பட்டது. |
| 2017 ஒத்தோபர் 26 | உரிமம்பெற்ற வங்கிகளிற்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டு அதிகரிப்பு மீதான பணிப்புரைகள் விடுவிக்கப்பட்டன. |
| 2017 நவெம்பர் 29 | 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு நிதியியல் பெறுதிகள் தொடர்பான புதிய கொள்கைகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2017 திசெம்பர் 12 | 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகை தொடர்பாக வங்கியியல் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2018 சனவரி 05 | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வைப்பாளர்களிற்கும் ஒவ்வொரு நிறுவனத்திற்குமான வைப்புக் காப்புறுதி ரூ 300.000 இலிருந்து ரூ. 600.000 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2018 சனவரி 16 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிற்கு வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பாக நிதியியல் வியாபாரச் சட்டம் 2018இன் இல 01 இற்கமைவாக பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 08 | 2018 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முதற்பதிவின் பின்னர் ஒரு வருடத்திற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஊர்திகள், மின்சார, கலப்பு மற்றும் ஏனைய பதிவு செய்யப்படாத ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்குப் பொருந்தத்தக்க கடனுக்கான அதி கூடிய கடன் பெறுமதி விகிதம் 70% தொடக்கம் 90% வீச்சில் குறித்துரைத்து அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள், அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கும் ஆக பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 மாச்சு 13 | 2018 ஒத்தோபர் 01ஆம் திகதியில் அனைத்து உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளும் கடன் மதிப்பீடு பெறப்படுதல் தொடர்பாக வழிமுறைகள் வழங்கப்பட்டன. |
| 2018 யூன் 06 | புதிய மூலதனப் போதுமாந்தன்மைக் கட்டமைப்பானது, பாசல் உடன்படிக்கையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள அடிப்படை அணுகுமுறையின் கீழ் கொடுகடன் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய கூடியளவிற்கு இடர்நேர்வு உணர்திறனில் கவனம் செலுத்தும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தினைப் பேணுவதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளிற்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் தேவைப்படுத்தப்பட்டது. |
| 2018 ஓகத்து 21 | உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பெறுதிகள் பரிமாற்றலின் இடர் முகாமைத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு நிதியியல் பெறுதிகள் தொடர்பில் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 செத்தெம்பர் 28 | முதலாவது பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத கலப்பின ஊர்திகளின் கொள்வனவு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதத்தினை 50 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| 2018 ஒத்தோபர் 01 | முதலாவது பதிவின் பின்னா் ஓராண்டிற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத கலப்பின ஊர்திகளின் கொள்வனவு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதத்தினை 50 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 ஒத்தோபர் 11 | இறக்குமதிகளையும் அதன் மூலம் செலாவணி விகிதத்தின் மீது ஏற்படும் மோசமான தாக்கத்தினையம் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஏற்பு நியதிகளுக்கெதிரான ஆவணத்தின் மீதான இறக்குமதிகளுக்கெதிராக அத்தியாவசியமல்லாத நுகா்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாட்டினை விதிப்பது பற்றி உரிமம் பெற்ற வா்த்தக வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2018 நவெம்பா் 21 | பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ், தேறிய உறுதியடைந்த நிதியிடல் விகிதம் தொடா்பில் உரிமம் பெற்ற வா்த்தக வங்கிளுக்குப் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 நவெம்பா் 30 | உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான புதிய கொள்கையொன்றிற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2018 திசெம்பா் 03 | வாடிக்கையாளா்கள் அளவுக்கதிகமான வட்டி வீதங்களினால் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்காக நுண்பாக நிதிக் கடன்களின் மீதான உயா்ந்தபட்ச வட்டி வீதங்களின் மீது பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| 2018 திசெம்பா் 28 | பாசல் III இன் கீழான முடுக்கி விகிதம் தொடா்பில் 2019 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் உரிமம் பெற்ற வங்கிகள் ஏற்புடைத்தானதாகவிருக்கக்கூடிய குறைந்தபட்சம் 3 சதவீதம் கொண்ட முடுக்கி விகிதத்தினைப் பேண வேண்டுமென உரிமம் பெற்ற வா்த்தக வங்கிகளைக் கேட்டுக் கொள்கின்ற பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2018 திசெம்பா் 31 | நிதியியல் சாதனங்கள் மீது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது தொடா்பில் உரிமம் பெற்ற வங்கிளுக்கு வழிகாட்டல்கள் தொடா்பில் சுற்றறிக்கை விடுவிக்கப்பட்டது. |
| 2019 சனவரி 18 | உரிமம்பெற்ற வங்கிகளால் வெளியிடப்படுகின்ற வருடாந்த நிதியியல் அறிக்கைகள் மற்றும் ஏனைய வெளிப்படுத்துகைகள் தொடா்பாக உரிமம் பெற்ற வங்கிகளிற்கு ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2019 மாச்சு 6 | பிணை வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் தொடா்பாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளை கட்டுப்படுத்தும் வைப்புக்கள் மீதான பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2019 மாச்சு 7 | அத்தியாவசியமற்ற நுகா்வுப் பொருட்கள், மோட்டார் வாகனங்களின் மீதான இறக்குமதிகள் மீது அமுல்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த இலாபத் தேவைப்பாட்டை மீளப்பெறுவதற்காக ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |
| 2019 மாச்சு 13 | அதிர்ஸ்ட இலாபத் திட்டங்கள், பரிசுத் திட்டங்கள் மற்றும் மேம்படுத்தல் பரிசுத் திட்டங்களிற்கான நிபந்தனைகளை விதித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளிற்கு ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2019 ஏப்பிரல் 18 | சலுகை நியதிகளிலான அனுமதிப்பத்திரங்களின் கீழ் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதங்களை திறப்பதன் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை தொடா்பில் சுற்றறிக்கையொன்று விடுவிக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிரல் 26 | இலங்கை ரூபா வைப்புக்கள் மீது உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்பட அல்லது செலுத்தப்பட முடியுமான உயா்ந்த பட்ச வட்டிவீதங்களை அமுல்படுத்துவதாக ஒரு நாணய விதிச் சட்டம் உரிமம்பெற்ற வங்கிளிற்கு கட்டளையாக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிரல் 26 | உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகளால் வழங்கப்படுகின்ற நுண்பாக நிதிக் கடன்களிற்கு உச்சபட்ச வட்டியை அறிமுகப்படுத்துவதற்கு பணிப்புரையொன்று விடுவிக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிரல் 29 | சிறப்பியல்பு வாய்ந்த நிதிக்கம்பனிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் கடன் கருவிகள் மீது உச்சபட்ச வட்டிவீதத்தை அறிமுகப்படுத்துவதற்காக பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2019 மே 8 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது வேறு ஏதாவது சுற்றுலாத்துறை சார்ந்த சேவை வழங்கும் அதிகாரசபைகளில் அல்லது ஓா் முகவா் நிலையத்தில் பதிவுசெய்திருக்கின்ற தனிப்பட்டவா்களுக்கும் நிறுவனங்களிற்குக் கடன் சலுகைக் காலத்தை வழங்குவதற்கான இயலுமையை உரிமம் பெற்ற வங்கிகளிற்கு வழங்குவதற்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2019 மே 21 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அல்லது வேறு ஏதாரவது சுற்றுலாத்துறை சார்ந்த சேவை வழங்கும் அதிகாரசபையில் அல்லது ஓா் முகவா் நிலையத்தில் பதிவுசெய்திருக்கனிற் தனிப்பட்டவா்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடன் சலுகைக் காலத்தை வழங்குவதற்கான இயலுமையை உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளிற்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளிற்கும் வழங்குவதற்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2019 மே 31 | இலகுரக பாரஊர்திகளிற்கான பெறுமதிக்கெதிரான கடன் விகிதத்தை 70 சதவீதத்திலிருந்து 90 சதவீதமாக உயா்த்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வங்கியியல் கட்டளைச் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2019 மே 31 | உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளை முடிவுறுத்துகையில் முன்னுரிமைக் கோரல்கள் மீதான ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன. |
| 2019 யூன் 4 | இலகு பார ஊர்திகளிற்கான உயா் பெறுமதிக்கான கடன்விகிதங்களை அனுமதிப்பதன் மூலம் 2019 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை உள்ளடக்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளிற்கு விடுவிக்கப்பட்ட பெறுமதிக்கான கடன் விகிதப் பணிப்புரைகள் திருத்தப்பட்டன. |
| 2019 ஓகஸ்ட் 29 | உரிமம்பெற்ற வங்கிகளின் திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் சந்தை நடவடிக்கைகள் தொடா்பாக உரிமம் பெற்ற வங்கிகளிற்கு வங்கித்தொழில் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |

| | |
|---|---|
| 2019 செப்தெம்பர் 6 | தனியான முதனிலை வணிகர்களின் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை மீளப்பெறுவதனூடாக திரவத்தன்மை சார் வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2019 செப்தெம்பர் 24 | உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபாய்களிலான வைப்புக்களிற்கான உச்சபட்ச வட்டிவீதம் தொடர்பான 2019ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாணய விதிச்சட்ட கட்டளை மீளப்பெறப்பட்டது. |
| 2019 செப்தெம்பர் 24 | இலங்கை ரூபாயில் குறிப்பிடப்படுகின்ற சந்தை கடன் வழங்கல் வீதங்களிற்கான அண்மைய நாணயக் கொள்கைகளின் தீர்மானங்களின் பரிமாற்றங்களை விணைத்திறனை விரிவாக்குவதற்காக நாணய விதிச்சட்ட கட்டளையொன்று உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வழங்கப்பட்டது. |
| 2019 ஒக்தோம்பர் 18 | சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் கடன் கருவிகள் மீதான உச்சபட்ச வட்டிவீதங்களிற்கான பணிப்பரைகள் திருத்தப்பட்டது. |
| 2019 நவம்பர் 18 | 1 சனவரி 2021இல் ஆரம்பிக்கும் நிதியாண்டிலிருந்து உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு தரம்வாய்ந்த கணக்காய்வாளர்களின் புதிய பட்டியலொன்றை அறிவித்து சுற்றறிக்கையொன்று விடுவிக்கப்பட்டது. |
| 2019 திசெம்பர் 19 | பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் நிறைவேற்று தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் ஆகியவர்களின் தகுதியுடைய மற்றும் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்யும் ஒழுங்குமுறைகள் திருத்தப்பட்டன |
| 2019 திசெம்பர் 19 | மதிப்பீட்டாளர்களின் தகுதிவரம்பு மற்றும் மதிப்பீடுகளிற்கான கால இடைவேளை ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளிற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான பணிப்புரைகள் திருத்தப்பட்டன. |
| 2019 திசெம்பர் 20 | உள்நாட்டு முறைமைசார் முக்கிய வங்கிகளை கையாளுவதற்காக புதிய கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தி வங்கித்தொழில்சட்ட பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |